ஸ்ரீ:

# திருநூற்றந்தாதி

## மூலமும் உரையும்.

இவை

ஸேதுஸம்ஸ்தான வித்துவான்

**ரா. இராகவையங்காரால்**

பரிசோதிக்கப்பட்டன.

ACL-FTS
00381

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்—எ.

இரண்டாம்பதிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1935

[விலை அணா-6]

ஸ்ரீ:

# திருநூற்றந்தாதி

## மூலமும் உரையும்.

இவை

ஸேதுஸம்ஸ்தான வித்துவான்

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

மதுரைத் தமிழ்ச்ச
THE MADURA TAMIL SANGAM
கல்லூரி, மதுரை.

செந்தமிழ்ப்பிரசுரம்—எ.

இரண்டாம்பதிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1935

[விலை அணா-6]

ஸ்ரீ:

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


| | | | |
|---|---|---|---|
| க. | முதற்பதிப்பின் முகவுரை | பக்கம் | I — |
| உ. | பொருளடக்கம் | ,, | IX — X |
| ங. | தொகையகராதி | ,, | XI — XIII |
| ச. | அரும்பத அகராதி | ,, | XIV — XVII |
| ரு. | மேற்கோள்விளக்கம் | ,, | XVIII |
| சா. | இடம்விளங்காமேற்கோள்கள் | ,, | XIX |
| எ. | உரைமேற்கொள்ள நூலகள் | ,, | XIX |
| அ. | செய்யுண்முதற்குறிப்பகராதி | ,, | XX |
| கூ. | திருநூற்றந்தாதி மூலமும் உரையும் | ,, | க — சஅ |

ஸ்ரீ:

# முதற்பதிப்பின் முகவுரை.

அந்தாதி என்பது இறுதிமுதலாகத் தொடுப்பதாகும். அஃதாவது, பலவடிகளாலாயதோர் செய்யுளாயின், முன்னடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முன்னடியிற் பெரும்பான்மையேனும் வருமடிமுதற்கண் வருதலும்; பலசெய்யுளான் ஆயதோர் நூலாயின், முற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி இவற்றிலொன்று வருஞ்செய்யுளின் முதற்கண் வருதலுமாம். ஒரு செய்யுளகத்து அடிகள் இவ்வந்தாதியாற் றொடுக்கப்படின், அஃது அந்தாதித்தொடையெனப்படும். ஒருநூலகத்துச் செய்யுட்கள் இவ்வந்தாதியாற் றொடர்ந்துவரப்பெறின், அஃது அந்தாதித் தொடர்நிலையெனப்படும். இதனை அந்தாதித்தொகை என்றலும் உண்டு. இவ்வந்தாதிநூலெல்லாம் முற்செய்யுளி னிறுதியும் வருஞ்செய்யுளின் முதலும் ஒன்றாய்வருதலேயன்றிப் பெரும்பாலும் நூலிறுதிச்செய்யுளி னிறுதியும் நூன்முதற்செய்யுளின் முதலும் ஒன்றாகியும் வரும். அந்தாதித்தொடைச்செய்யுளும் அடிகளின் ஈறும் முதலும் ஒன்றாய்வருதலேயன்றிச் சிறுபான்மை அச்செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாகியும் வரும். இத்திருநூற்றந்தாதி நூறுசெய்யுளும் அந்தாதியாகத் தொடர்ந்துவந்தமையேயன்றி, இறுதிச்செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் முறையே 'பூக்கொண்டதே', 'பூக்கொண்டு' என ஒன்றாய்வந்ததனையும் நோக்கிக்கொள்க.

"உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிகல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இவ்வந்தாதித்தொடைச்செய்யுளிற் பலவடிகளும் ஈறும் முதலும் ஒன்றாய்வந்தனவேயன்றிச் செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க. இவ்வந்தாதி, எழுத்து அசை சீர் அடி இவைபற்றி ஈறுமுதலாத் தொடுக்கப்பட்டவாறே, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என நான்காக வகுக்கப்படும். "உலகுடன் விளக்கும்" என்னும் ஆசிரியத்துள் எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி மூன்றும் வந்தன காண்க.

"ஆதியங் கடவுளை யஃருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் திருவடி பரவுதும்"

இதன்கண் அடியந்தாதி வந்தது. இவ்வாறே அந்தாதிநூலுள்ளும் எழுத்தசைசீரடிகள் அந்தாதியாகவருதல் ஆங்காங்குக் கண்டுகொள்க. திருவாய்மொழியிற் "கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" என்னுஞ் செய்யுளீற்றடிப்பின் "ஏபாவம்பரமே யேழுலகும்" என வேறுசெய்யுண் முதலடிவந்தது எழுத்தந்தாதியாம். "தலையில்வணங்கவுமாங்கொலோ தையலார்முன்பே" என்பதன்பின் 'பேய்முலை யுண்டு சகடம்பாய்ந்து மருதிடை' என வந்ததும் அது. அசையுஞ் சீரும் அந்தாதியாக வருவனவே, அந்நூலுள்ளும் பிறநூலுள்ளும் மிகப்பலவாம். பதிற்றுப்பத்து நான்காம்பத்தின்கணுள்ள ச, ரு, கூ-ஆம் பாட்டுக்கள் அடியந்தாதியாற் றொடர்ந்துவந்தன.

இனி ஒரு செய்யுட்கண் இறுதியடியி னிறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய்வருவனவற்றை மண்டலவந்தாதியென்றும் அவ்வாறு வராதவற்றைச் செந்நடையந்தாதியென்றும், பல விரவிவருவனவற்றை மயக்கந்தாதியென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்டுவருவனவற்றை இடையீட்டந்தாதியென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்ட அடியந்தாதியை இடையீட்டடியந்தாதியென்றுங் கூறி, அவை மண்டலவெழுத்தந்தாதி, செந்நடையெழுத்தந்தாதி, மண்டலவசையந்தாதி, செந்நடையசையந்தாதி, மண்டலச்சீரந்தாதி, செந்நடைச்சீரந்தாதி, மண்டலவடியந்தாதி, செந்நடையடியந்தாதி, மண்டலமயக்கந்தாதி, செந்நடைமயக்கந்தாதி,

மண்டலவிடையீட்டந்தாதி, செந்நடையிடையீட்டந்தாதி என விரிப்பாருமுளர். இவையன்றி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடையந்தாதிகளும் கூறுவர். இவ்வந்தாதித் தொடைவிகற்பமும் இவற்றிற் குதாரணமும் பிறவும் "ஈறு முத லாத் தொடுப்பதந் தாதியென், ருேதினர் மாதோ வுணர்ந்திசி ேனாரே" என்னும் யாப்பருங்கலச்சூத்திரத்துக்குக் கூறிய விருத்தி யுரையுட் கண்டுகொள்க.

மேலெடுத்தோதியவாறன்றி, இறுதிநின்ற சொற்பொருளேக் கத்தால் ஆகுபெயரால் அந்தாதியாகவருதலும் உண்டு. இதனை மாறனலங்காரவுரைகாரர் "இறுதிநின்ற சொற்பொருளேக்கத் தான் ஆகுபெயராற் சொற்ருெடர் வருவனவுமுள. அதற்குச் செய் யுள்:

"பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே."

"மதுவார் தண்ணந் துழாயான்
முதுவே தமுத லவனுக்
கெதுவே தென்பணி யென்ன
ததுவே யாட்செயு மீடே."

இவை முதற்பத்தின் ஆருந்திருவாய்மொழியின் முதற்பாட்டும் இரண்டாம்பாட்டும். இவற்றுட் பூ என்ற சொல்லின் பொருளேக் கத்தாற் சினையைக்கூற முதலை அறிவிக்கும் ஆகுபெயரால் அந்தா தித்தவாறு காண்க" எனக்கூறியவாற்ருன் அறிந்துகொள்க. அந் தாதியை இயலிசையந்தாதி யெனவும், பொருளிசையந்தாதி யென வும் இரண்டாகப்பகுத்து, இத்திருவாய்மொழிகளைப் பொருளிசை யந்தாதி எனப் பணிப்பர் திருவாய்மொழியீட்டின் அரும்பதவுரை யாளர்.

இவ்வாறு வரும் அந்தாதிவிகற்பமெல்லாம் தொல்காப்பிய ஞர் கூறிய இயைபு (செய்-உ௲௧) என்பதன் வகையாய் அடங்கும்.

ஆண்டுப் பேராசிரியர் "பொருட்டொடராகவும், சொற்றொடராக வும் செய்வது இயைபு எனப்படும்" எனவும், 'சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது' எனவும் கூறியவாற்றான் உணர்ந்து கொள்க. இக்கருத்தானே மாறனலங்காரமுடையாரும்,

> சொல்லாற் பொருளாற் றொடருந் தொடர்நிலைக
> ளெல்லா மவற்று ளெழுத்தசைசீர்—மல்கு
> மடிசொற் றொடர்நிலைக ளந்த முதலாப்
> படிவைத் தனர்முன் பகுத்து (பொதுவியல். சா.)

என்பதனால் அந்தாதியினைச் சொற்றொடர்நிலையென்று கூறினார். இங்ஙனம் அந்தாதியாக ஒரு செய்யுளுட் பலவடிகளையும் ஒரு நூலுட் பலசெய்யுட்களையும் தொடுப்பது தமிழிற் றொன்று தொட்டேயுள்ள பெருவழக்கமாம். இதனை யாப்பருங்கலவிருத்தி காரர் (நிஅ) "பன்மணிமாலையும், மும்மணிக்கோவையும், உதயண குமாரன் கதையும், தேசிகமாலையும் முதலாகவுடைய செய்யுட்க ளுள் அந்தாதி வந்தவாறு காண்க" எனவும், (நிஅ) "இறுதி யெழுத்துஞ் சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன்கதையும் கலியாணகதையும் பன்மணிமாலையும் மும்மணிக்கோவையும் என்னு மிவற்றுட் கண்டுகொள்க." எனவும் கூறியதனானும், பேராசிரியர் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின்மேற்றே" என்னுஞ் செய்யுளியற்சூத்திரவுரையில் "புதுவது கிளந்த யாப்பின்மேற்" றென்றதென்னையெனின், புதிதாகத்தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச்செய் வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளும் என வுணர்க" என வுரைத்ததனானும் பதிற்றுப்பத்தின்கட் காப்பியாற்றுக்காப்பியனார் பாடிய நான்காம் பத்து அந்தாதியாகத் தொடர்ந்துவந்ததனானும் அறிந்துகொள்க. பாட்டியலுடையார் கலம்பகம் பல்சந்தமாலை இணைமணிமாலை இரட் டைமணிமாலை மும்மணிமாலை நான்மணிமாலை மும்மணிக்கோவை வசந்தமாலை நவமணிமாலை கலியந்தாதி ஒலியந்தாதி பதிற்றந்தாதி நூற்றந்தாதி முதலிய பல பிரபந்தங்களிற் செய்யுட்கள் அந்தாதி யாகத் தொடர்ந்துவரப்பெறு மென்ப.

இவ்வந்தாதிச் செய்யுட்கள் ஏழுமுதல் ஆயிரம் இறுதியாகத் தொடர்ந்துவருவன என வுணர்க. சடகோபர் திருவாசிரியம் ஏழு பாட்டு அந்தாதியாகவந்தது; திருவாசகத்துக் கோயிற்றிருப்பதிகம் கோயின்மூத்ததிருப்பதிகம் முதலாயின பத்துப் பத்துச் செய்யுட்கள் அந்தாதியாகத்தொடர்ந்தன. நீத்தல்விண்ணப்பம் ஐம்பதுசெய் யுட்களும் திருச்சதகம் நூறுசெய்யுட்களும் அந்தாதியாகத் தொடர்ந் தன. திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள் அந்தாதியாகவந்தது. எல் லாப் பாக்களும் பாவினங்களும் இவ்வந்தாதியாற்றொடர்ந்துவர வும் பெறும்; பாவும் பாவினமுங் கலந்து அந்தாதியாகத்தொடர்ந் தது கலம்பகத்துட் காண்க. பாக்களுள் வெண்பாவும் பாவினங்க ளுட் கலித்துறையும் அந்தாதியாற் றொடர்ந்துவந்தனவே மிகப் பலவாம்.

> "வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
> பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே"

என்று பன்னிருபாட்டியலாருங் கூறுதல் காண்க. இதனைக் கபில தேவர் பரணதேவர் நக்கீரதேவர் காரைக்காலம்மையார் பொய்கை யார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரானர் சடகோபர் வெண்பா வந்தாதிகளானும், திருவாதவூரர் நீத்தல்விண்ணப்பம், சடகோபர் திருவிருத்தம், சேரமான்பெருமாணயனர் பொன்வண்ணத்தந் தாதி, நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர்திருவந்தாதி, திருவரங் கத்தமுதனர் இராமாநுசநூற்றந்தாதி, கம்பர் சடகோபரந்தாதி முதலிய கலித்துறையந்தாதிகளானும் உணர்ந்துகொள்க.

இனித் திருநூற்றந்தாதி என்பது மேற்காட்டிய கலித்துறை யந்தாதிகளைப்போல நூறு கலித்துறைகள் அந்தாதியாகத் தொடர்ந்துவர யாத்த திருவுடையதோர் நூலாகும். இது சொல் லானும் பொருளானும் சுவை பெரிது பயந்து, அருகக்கடவுளைப் பராவி வருதலின், இத்தமிழ்நாட்டுச் சைனர்பலராலும் சிறப்பித் துப் போற்றப்படுவது. இந்நூல் மயிலையிற் கோயில்கொண்டிருந்த நேமிசந்திரஸ்வாமி பெயரால் அமைந்தது எனவும், இந்நூற்கு, கூஷ்மாண்டிய க்ஷி, இந்நூலாசிரியர்முன்வந்துநின்றாரெனவும் கூறுப. மயிலையில் ஜைனசினகரமொன்றிருந்தமை, நேமிநாத

வுரைக்கண் "தேனிமிர் பைம்பொழிற் றென்மயி லாபுரி, நீனிறக் கடவு ணேமி நாதர்" என வருதலான் அறியப்படும். இந்நூன் முகத்தும் "மறமே புரிந்து மயிலா புரிநின்று மன்னுயிர்கட், கறமே பொழியு மருட்கொண்டலே" என்பதனுல், அந்நேமீசர் துதிக்கப் படுதலும் காண்க. இந்நேமீசர்கோயில் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்குமுன் கடல்கொள்ளப்பட்டதென்பர். இக்கோயில் கடல்கொள்ளப்படுவதைத் தரிசனங்களால் ஜைனர் முன்னரே யுணர்ந்து, நேமீசர்விக்கிரகத்தைச் சித்தாமூர்க்கணுள்ள தங்கள் மடத்துக் கொண்டுய்த்தனரென்பர். இந்நூல், தமிழறிந்த ஜைனர் பலரால் நாடொறும் பாராயணஞ்செய்யப்படுகின்றது. இந்நூற் கண் ஜைனசமயக்கோட்பாடுகள் பல நன்கு தெளித்துரைக்கப்படு கின்றன. அவற்றை இந்நூற் பொருளடக்கத்துக் கண்டுகொள்க. இந்நூலியற்றப்பட்ட காலம் ஒருதலையாகத் துணியக்கூடவில்லை. ஆயினும், இந்நூற்கணுள்ள "முத்தனென்கோ" என்னுஞ்செய்யுள் நேமிநாதவுரைகாரரால் எடுத்துக்காட்டப்படுதலானும், "அருளோ டெழுமற வாழியப்பா" என்னுஞ்செய்யுள் சிவப்பிரகாசப்பெருந் திரட்டு என்னும் அரிய பழைய பெரிய தொகைநூலிற் கோக்கப் பட்டிருத்தலானும் (அனுபவக்கட்டளை, அதி—ஆட்சியதருமை, பாட்டு-அ) இந்நூல் நானூறுவருஷத்துக்கு முற்பட்டதாகுமென் பதுமட்டிற் கொள்ளத்தகும்.

இந்நூலாசிரியர் அவிரோதியாழ்வார், அவிரோதிநாதர் எனப் பெயர்பெறுவர். இந்நூலுரைகாரர் "புங்கவன் பூரணன்" என்பத னுரையில் "பிறர்போலே ஆழ்வார் வீடுவேண்டிபதாம்" எனக் கூறுத லானும், இந்நூல் நாந்திச்செய்யுட்கண் "நாக்கொண்ட செஞ் சொ லவிரோதி நாத னவின்றமெய்ந்நூல்" என வுரைத்தலானும் அவ்விருபெயரும் இவர்க்குண்மை யுணர்ந்துகொள்க. முதற்கண் வைணவசமயத்திருந்த இவர், மயிலையில் நேமிசந்திரஸ்வாமிசந் நிதியில் ஜைனசமயாசாரியரொருவர் தரிசனங்களை மாணுக்கர்கட்கு உபதேசித்துக்கொண்டிருந்தபோது ஆண்டுச்சென்று, அவ்வாசிரிய

ரது அறிவோடுகூடிய அறவுரைகளினின்று தம்நெஞ்சினை மீட்க லாற்றாதுநிற்கையில் அவ்வாசிரியர்,

> "𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌨𑍇𑌤𑌾𑌰𑌂 𑌭𑍇𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌭𑍃𑌤𑌾𑌂।
> 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌲𑌬𑍍𑌧𑌯𑍇"।

என ஓர் சுலோகத்தை மொழியக்கேட்டு அதன்கணுள்ள "தத்குண லப்தயே" என்பதன் ரகஸ்யார்த்தம் உணரவேண்டி அவ்வாசிரிய ரை வினயினர்; அதற்கு விடையாக அவர் நம்சமபத்தவர்க்கன்றி ஏனையோர்க்கு இவ்வகை நுணுக்கங்கள் உரைக்கப்படமாட்டா எனக் கூறினர். இவர் அதுகேட்டு அப்போதே அச்சமயப்பிரவேசஞ் செய்து, நேமிநாதர்கோயிலை ஒருமுறை வலம்வருதற்குள்ளே இந் நூற்றந்தாதியைப் பாடிமுடித்துப் பின் அவ்வாசிரியரால் உபதேசம் பெற்றனர் என ஜைனர் கூறுகின்றனர். இதுபற்றியே இவர் ஆழ் வார் எனப்பட்டனர்போலும். ஆழ்வார் என்னும் பெயர் வைணவப் பெரியார்க்கன்றி, பௌத்தசமயாசிரியர்க்கும்* வழங்கப்படுதல் நீல கேசித்தெருட்டுரையான் அறியப்படுகின்றது. இக்கதையி னுண்மை இப்போது அறிதலரிதாயுள்ளது. இந்நூலாசிரியரது செய்யுட்டிறத்தை ஆராயுமிடத்து, இவர் பண்டைத் தண்டமிழ் நூல்களிலும் அவற்றுரைகளிலும் நன்று பயின்றவரெனவும், சீரிய கூரிய அறிவினரெனவும் மதிக்கப்படுகின்றார்.

இந்நூலுரையாசிரியர் பெயர் இப்பொழுது அறியப்பட்டதில்லை. இந்நூல் உரை, பொழிப்புரையும் விசேடவுரையுமாக வுள்ளது. இவ்வுரையாசிரியரும் நூலாசிரியர்போன்ற கல்வியும் அறிவும் உடையரென்பது அவரது உரைத்திறத்தான் நன்கு விளங்குகின் றது. இந்நூல் ஒவ்வொருசெய்யுளிலுமுள்ள சொன்னயம் பொரு ணயங்களை எடுத்துக்காட்டியும் நுணுக்கங்களை விரித்து விளக்கி யும், இரகசியமான ஜைனக்கொள்கைகளைத் தெள்ளிதிற் புலப்படுத் தும்நிற்றலால் இவ்வுரையின் அருமையும் பெருமையும் போற்றத்

* ஈழம் அடிப்படுத்தாடையாழ்வார், தாதுஆழ்வார் என்ப.

தக்கன. அரிய இனிய இவ்வுரையினைப் பலருமுணர்தற்பொருட்டே இந்நூல் "செந்தமிழ்"வாயிலாக அச்சிட்டு வெளிப்படுத்தலாயிற்று.

இவ்வுரையோடுகூடிய திருநூற்றந்தாதிப் பிரதியொன்று, சில வருடங்கட்கு முன்னே காஞ்சீபுரத்துக்கடுத்த திருப்பருத்திக்குன்றத்துள்ள மகா-ள-ள-ஸ்ரீ தருமையர் அவர்களால் எனக்கு அளிக்கப்பட்டது. உரையருமையும் நூலினிமையும் நோக்கி, அவ்வொரு பிரதிகொண்டே என் சிற்றறிவிற்கியன்றவரை ஆராய்ந்து இதனை வெளியிடலாயினேன்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

செந்தமிழ்ப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

# பொருளடக்கம்

[எண்கள் - பாட்டெண்கள்.]


அங்கணம் கஅ
அநசனம் தவத்திற்கு முதலென்றல் சo
அபூதவுவமை கூ
அரசர்க்குரிய சிறப்பு சச
அருக என்னும் நாமப்பெருமை உக
அருகக்கடவுள் திருவை மார்பிற் றரித்தல் எ
அருகர், அஸ்நானத்தால் மெய்ம்மாசு மிகுத்தவரென்பது எரு
அருகர்க்கு முக்குடை, அவரது மூவுலகாட்சியுங் காட்டுவது எ
அருகர்க்குரிய எண்சிறப்புக்கள் சஅ
அன்றே என்பது அசை கஅ [அo
ஆ என்பது இழிபுணர்த்தல் கூ
ஆகுபெயர் ந, ரு, அகூ
ஆசனம் நடுங்குதல் தேவர்க்கு ஓர் குறி [கக
இஞ்சி மூன்றுவன கஅ
இயற்கையடை சிறப்பிக்கப்படுதல் க
இரண்டாமுருபும் உவமையும் விரித்தல் கரு
இரத்தினத்திரயமாவன உச
இருபத்துநான்கு தீர்த்தங்கரர் கூஎ
இல்லறத்திற்குத் தானம் என்னும் பெயர் கஎ
இறந்தமுக்குற்றம், வடநூல்வழக்கு ருக
இறைவனைக் கற்பகமும் அறவறத்தை யதனிழலுமாக உருவகஞ் செய்தல் சச
இன் இடைநிலையில் இகரம் விகாரத்தாற்றெருகுதல் கூகூ
ஈசன் பிரமன்றலை கிள்ளியமை அஅ
உம்மை அசை கூச
உம்மை வருவித்தல் கரு, உஅ, நஎ, சகூ, ருச, எஎ
உலகம் பதினாலுயிற்றளவு உயரமுடையது என்பது கூக
உவமை வருவித்தல் சரு, கூo
ஊசிக்குழையில் ஆகாசங் காணலாகாதெனல் சஅ
எண்வகைச்செருக்காவன கூஉ
ஏறுகாலம், இழிவுகாலமென்னு மிருசுழற்சியுடைத்துலகமென்பது கூஎ
ஐம்படையாவன உச
ஐவகைவிரதமாவன எகூ
ஓகாரம் விரித்தல் எஎ
கண்டீர் என்பது தேற்றப்பொருளில் வருதல் உ
கண்டு என்பது கேட்டு என்னும் பொருளில் வருதல் சஅ
கதிக்கேற்ற மதியெய்துமென்பது கூ
கமடன் அருகன்மேற் பெய்த கல்லும் அம்பும் நெருப்பும் பூவெள்ளமாதல்
கல்யாணமைந்து ச [நச
காதிகன்மங்கள் அஅ
குறிப்பெச்சம் உo
கேவலஞானி சo
கொடிறும் பேதையும் கொண்டது விடாமை நஅ
கொய்சகம் (பெண்ணுடை) சஅ
கோகிலஞ்சேரும் பிண்டி க
கோவற்றலிங்கம் கூஉ
சமவசரணத்தின் சிறப்பு நo
சமவசரணம் பன்னிரண்டோசனையுடைத்தென்பது கஅ, கூக
சித்திரத்திலுருவுஞ் சிதைத்தலாகாதென்பது சஉ
சின்னம் என்பது குறைந்த எண்ணைக் காட்டவருதல் (எழாயிரச்சின்னம்) கூஉ
சீவாதி முதலாகிய அறுபொருள் கo
சைநர் இரவுண்ணாமை அந
சொர்க்கம் - கூத்தின் விகற்பம் கூ
சொல்லெச்சம் அக
சௌதர்மேந்திரன் கக
தம்சாரியைக்குத் தன்சாரியை வருதல்
தற்குறிப்பு எ [அஉ
தேவலோகத்தில் சிலையம் இத்தனையென்பது கூஉ

நரகம் ஏழு சஎ
நலம்புனைந்துரைத்தல் ருக
நல்வினை தீவினைகளை முறையே
பொன்விலங்கு இருப்புவிலங்காகக்
நால்வகைத்தேவராவார் கக [கூறல் சு
நாற்கதியாவன ருஅ
பஞ்சபரமேஷ்டிகளாவார் சசு, அரு
பஞ்சாஸ்திகாயமாவன உரு
பஞ்சாஸ்திகாயம் பம்பத்திகாயமெனத்
திரிதல் உரு
பரிஞூமபரம்பரை க
பவணலோகத்தில் சினாலயம் இவ்வள
வென்பது கூஉ
பவணலோகம் பத்தடுக்காயுள்ளதென்
பது கூஉ
பழிப்பதுபோலப் புகழ்தல் கூ, உ0, சஅ,
எஎ
பன்னிருகணமின்னவெனல் க0, ருகூ
பாசண்டமூடம் கசு
பாம்பு தோலுரித்தல் புறப்பற்றறுத்த
ற்கும், நஞ்சுமிழ்தல் அகப்பற்றறுத்
தற்கும் உவமையாதல் கசு
பிரகிருதி பகடியெனவாதல் ரு
பிரபாவலயம் மூன்று அ
பிரபாவலயம் மூன்றுமடிப்பாக வளைந்
தது என்பது சுரு
பிரிநிலையேகாரம் விரித்தல் அ0
பிறப்புத்தோறும் சுற்றம் தடுமாறுவத
ற்கு யாறிடுமெனல் உவமையாதல் சரு
பிறிதுமொழிதல் சரு
பூமியிற் சினாலயம் இவ்வளவென்பது
போதிசோறு ருஎ [கூஉ
பொறிகளைத் தவனம்பண்ணுதலே தவ
மென்பது கசு
மத்திமதீபம் ருஉ
மாவாற்செய்த கோழியாலுங் கொலைப்
பாவம் எய்தியமை சஉ [கஅ
மானஸ்தம்ப முதலிய எழிடங்களாவன
மானஸ்தம்பம், ஜினாலயவாயிலில் நாட்
டப்படுதல் உஉ
முக்குடை எ, உக
முக்குற்றமாவன கஉ
முழுமூடர் மும்மூடரெனத்திரிதல்
மூவகை மூடமாவன கூஉ [ருரு
மூவொளி, அ, உசு,
மூன்றதிசயமாவன ருசு
வம்மின் வம் எனக் குறைதல் சுரு
விளக்கைப்பிடித்துக் கிணற்றில் விழ
லாகாதென்பது ருசு
வினைகள் எட்டு ரு
வெள்ளைவள் கக
வேம்பு பழுத்தாற் காக்கைக்கிரை
யாம் என்பது அகூ
வேற்றுமை மயக்கம் உ0
ஜீவாதிபதார்த்தங்களின்னவெனல் க0

ஸ்ரீ:

# தொகையகராதி.

[எண்கள்-பாட்டெண்கள்.]

அகாதிகர்மங்கள் நான்கு (அஅ) - ஆயுஷ்யம், வேதநீயம், கோத்ரம், நாமம்.

அதிசயம் மூன்று (ருகூ) - ஸஹஜாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தைவீகாதிசயம்.

அஸ்திகாயம் ஐந்து (உ௫, உக) - ஜீவன், அஜீவன், தர்மம், அதர்மம், ஆகாசம்.

ஆச்சிரமம் இரண்டு (கஎ) இல்லறம், துறவறம். இவையே தானம், தவம் எனக் கூறப்பட்டன. இவற்றைக் கிருகஸ்தாச்ரமம், யதியாச்ரமம் என்ப. கிருகஸ்தாசிரமம் தர்ஸநீகன், விரதிகன், யாமாயிகன், ப்ரோஷதோபவாஸி, ஸசித்தவிரதன், ராத்ரியஹுக்தன், பிரஹ்மசாரி, அநாரம்பன், அபரிக்ரகன், அநுமதிவிரதன், உத்திஷ்டபிண்டவிரதன் எனப் பதினொரு வகைப்படும் எனவும், யதியாசிரமம் யதி, ருஷி, முனி என மூவகைப்படும் எனவும் கூறுவர்.

இஞ்சி மூன்று (சஅ) - உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம்.

உலகம் மூன்று (க௫) - நாகலோகம், பூலோகம், சுவர்க்கலோகம்.

ஒளி மூன்று (அ, உகூ, எக) - ஆலோகம், பிரபாமூர்த்தி, கணப்பிரபை.

கல்யாணம் ஐந்து (சூ) - ஸ்வர்க்காவதரணம், மந்த்ராபிஷேகம், மகாப்பிரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம்; ஸ்வர்க்காவதரணம் - ஸ்வர்க்கத்தினின்று இறங்குதல்: அஃதாவது உலகிலவதரித்தல். இதனைக் கர்ப்பாவதரணம் என்பதும் உண்டு. இது தீர்த்தங்கரர் பிறத்தற்குரிய தாய் தந்தையரை அவர் பிறத்தற்கு ஆறுமாதங்கட்குமுன்பே நால்வகைத்தேவரும் பூசித்தல் என்பர். மந்த்ராபிஷேகம், தீர்த்தங்கரர் பிறந்தபோதே நால்வகைத்தேவரும் மஹாவிருபாண்டுசிலையில் க்ஷீரஸமுத்ரஜலத்தால் மந்த்ரபூர்வகமாக அவரை மஞ்சனஞ்செய்தல்; இதனை ஜந்மாபிஷேகம் எனவுஞ்சொல்வர். மகாப்பிரஸ்தானம் - துறந்துசேறல். இதனைப் பரிநிஷ்கிரமணம் எனவும் கூறுவர். கேவலோத்பத்தி - தானும் பிறிதுமாகிய ஸகலத்தையும் உணருங் கேவலஞான முண்டாதல். பரிநிர்வாணம் - காதி அகாதி நிர்மூலவித்தபதப்ராப்தி என்பர்.

கணம் பன்னிரண்டு (ருக) - முனிவரர், ஆர்யாங்கனைகள், கொலையை விடவுடன் பட்ட விலங்குஜாதி, பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாசியர், பவணர்மனைவியர், வியந்தரர்மனைவியர், சோதிடர்மனைவியர், கற்பவாசியர் மனைவியர், சக்கரவர்த்திகள்.

கதி நான்கு (௩அ) - நரககதி, விலங்குகதி, மக்கட்கதி, தேவகதி.

கஷாயம் பதினாறு (ருக) - இவை அநந்தானுபந்திக்குரோதம் முதலாக சஞ்சுவலனலோபம் இறுதியாகக் கிடந்தன. இவற்றை "தெளிவுறுத் தெழுவர் பட்டார்" என்னும் சிந்தாமணிமுத்தியிலம்பகச் செய்யுட்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையானுணர்க. ஈண்டு மானகஷாயம் என்றது அநந்தானுபந்தி மானகஷாயத்தினை.

காதி நான்கு (அஅ) - ஞானாவரணீயம், தர்சநாவரணீயம், மோஹநீயம், அந்தராயம்.

குடை மூன்று (உக) - சந்த்ராதித்யம், நித்யவிநோதம், ஸகலபாஜநம்.

குத்தி மூன்று (எரு) - மனம் மொழி காயம் அடங்கல்.

குற்றம் மூன்று (கஉ, ருக) - காமம், வெகுளி, மயக்கம்.

கேவலி நால்வர் (க0) - கேவலி, அநகாரகேவலி, அந்தர்முகூர்த்தகேவலி, சுருதகேவலி. இருபத்துநான்குதீர்த்தங்கரர் கேவலி. இராமன் முதலியோர் அநகாரகேவலி. ஆதிசக்ரவர்த்திபாதர் அந்தர்முகூர்த்தகேவலி. விஷ்ணுநந்திமித்ரர், அபராஜிதர், கோவர்த்தனர், பத்ரபாகு சுருதகேவலி: எனப்படுவார்.

சிறப்பு எட்டு (அ0) - பிரபாவலயம், தேவவாத்யம், திவ்யத்வனி, ஸிம்மாசனம், அசோகவிருக்ஷம், வெண்சாமரை, புஷ்பமாரி, முக்குடை.

செருக்கு எட்டு (கூஉ) - பிறப்பு, குலம், வலி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு. இவற்றை அஷ்டஸ்மயம் என்பர்.

ஞானம் ஐந்து (கக, அஅ).

திரவியம் ஆறு (கூ0) - சீவன், புற்கலம், தருமம், அதருமம், ஆகாசம், காலம்; இவற்றை ஷட்திரவியமென்பர்.

தேவர் நால்வர் (கக) - பவணர், வியந்தரர், சோதிடர், கற்பவாசியர். கல்பாதீதராகிய வைமானிகரைச் சேர்த்துத் தேவர் ஐவகையர் என்பதும் உண்டு (நீலகேசி - தருமவுரை கூ0).

நரகம் ஏழு (சஎ) - இரத்தினப்பிரபை, சருக்காரப்பிரபை, வாலுகாப்பிரபை, பங்கப்பிரபை, தூமப்பிரபை, தமப்பிரபை, தமத்தமப்பிரபை.

பதார்த்தம் ஒன்பது (சo) - ஜீவபதார்த்தம், அஜீவபதார்த்தம், புண்யபதார்த்தம், பாபபதார்த்தம், ஆச்ரவபதார்த்தம், பந்தபதார்த்தம், ஸம்வரபதார்த்தம், நிர்ஜரபதார்த்தம், மோக்ஷபதார்த்தம்.

பரமாகமம் மூன்று (உகூ) - அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம். அவை பன்னிரண்டும், பதினான்கும், பதினாறுமாக நாற்பத்திரண்டாம்.

பரமேஷ்டிகள் ஐவர் (சகூ) - அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்.

பிராகாரம் ஏழு (கஅ) - மானஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்தியவிருக்ஷம், துவஜபூமி, சித்தார்த்தவிருக்ஷம், ஸ்தூபஹர்மாவலி.

பொறி ஐந்து (ருஅ) - மெய், வாய், கண், மூக்கு, செவி.

மித்யாத்வம் ஐந்து (கூஅ) - ஏகாந்தமித்யாத்வம், விபரீதமித்யாத்வம், விநயமித்யாத்வம், ஸம்சயமித்யாத்வம், அஞ்ஞானமித்யாத்வம். இவை முறையே புத்தன், பார்ப்பான், தாபதன், ஹிங்தோவி, மற்கலி என்னும் இவர்பால என்பர்.

மூடம் மூன்று (கூஉ) - உலோகமூடம், தேவதாமூடம், பாஷண்டமூடம்.

ரத்நத்ரயம் (உச) - ஸம்யக்தர்சனம், ஸம்யக்ஞானம், ஸம்யக்சாரித்ரம். இவற்றை நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்ப. இவை மூன்றுங் கூடிப் பிறவிக்கொருமருந்தாகலின் இவற்றைத் திரியோகமருந்து எனவுங் கூறுவர்.

விரதம் ஐந்து (எகூ) - கொலை, பொய், களவு, கள், காமம் ஐந்தனையு முற்றத் துறத்தல்.

விஷயம் ஐந்து (ருஅ) - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

வினை எட்டு (எகூ - ௲) ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம்.

ஸ்ரீ:

# அரும்பத அகராதி.

[எண்கள் - பாட்டெண்கள்.]

அகலா - நீங்கா ச
அங்கணம் - இடம் கஅ
அசைவு - தளர்வு அங
அச்சு - உயிர் உக
அச்சுதன் - கேடில்லாதவன் உ0
அஸ்தி - பஞ்சாஸ்திகாயம் உகூ
அடர்ஆர்மலர் - தகடுநெருங்கியபூ உசு
அடர்மண்டலம் - நெருங்கிய கூட்டம்
அடுதல் - கொல்லுதல் ருஎ [அ0
அணதருநேமி யாதனர் - கிட்டப் பட்ட சக்காரத்தினத்தையுடையர்
அணவல் - கிட்டல் ருகூ [ருகூ
அண்ணல் - ஸ்வாமிகள் சு0
அத்தன் - ஸ்வாமி சுகூ
அத்திகளாதல் - இராக்குந்தொழிலின ராதல், எலும்புஆதல் சச
அந்தம் - முடிவு கஎ
அந்தரம் - ஆகாயம் உஅ
அந்தரித்தல் - பேதித்தல் சுஉ
அமரர் - தேவர் கூ
அம்பராம்பர - திசையாடையுடையவ
அரண் - ஆதாரம் சங [னே உஉ
அரி - சிங்கம் கூசு
அரித்து - படைத்து கசு
அரிமான் - சிங்கம் சுஉ
அரு - சித்தபதம் கரு
அருங்கலம் - ரத்நத்ரயம் எ0
அருந்திரையம் - பெறுதற்கரிய ரத்
அல் - மெய் உக [நத்ரயம் சு0
அவம் - பயனற்றது கசு
அவா - ஆசை கூச
அழகு - நன்மை கூ
அளித்தல் - கொடுத்தல் நரு
அறம் - தர்மம் ருசு, சுஉ
அறப்பின்றி - அதிகதூரமாய் அக
அறியாப்பொருள் - வீடு உ
அறுக்கும் - கெடுக்கும் ச
அறுபதம் - வண்டு கங
அன்பு - பக்தி அ■
ஆ - ஆக கூரு
ஆடகம் - பொன் கூ
ஆட்புகுந்தேன் - அடிமையாகப் புகு
ஆரியம் - வடகலை எங [ந்தேன் எச
ஆர்கலி - கடல் சு0 [ல் உக
ஆர்தல் - நிறைதல் கச, உண்ணுத
ஆர்வம் - விழைவு உ0, ஆசை ருக, பற்
ஆழி - தர்மசக்கரம் கூஅ [று சுக
ஆள் - ஆட்படுதல் சசு
இசையார் - உடன்படார் அங
இஞ்சி - மதில் கஅ
இடர் - துன்பம் உசு, வருத்தம் ருங
இடைதல் - வருந்துதல் சுஅ
இந்தனம் - விறகு கூரு
இந்திரியம் - ஐம்பொறிகள் கஎ, ஐம்
இம்பர் - இவ்வுலகம் உஉ[புலன்கள் ரு
இயைதல் - பொருந்துதல் கூகூ
இரண்டின்றியொன்றும்பத்தி - வேறு தெய்வமில்லை யென்கிற ஒப்பற்ற பக்தி ச0
இரிதல் - கெடுதல் உசு
இருளோவிய - மயக்கமொழித்த ரு
இன்செய்யவாய் - இனிமையும் சிவ ப்புமுடையவாய் அஉ
ஈர்தல் - அறுத்தல் எ0 அரிதல் எரு
உகுதல் - கெடுதல் சரு
உடை - வஸ்திரம் கூஅ
உட்கார் - பயப்படார் சுஅ
உய்தல் - பிழைத்தல் எசு, கூரு
உய்ப்பாய் - செலுத்துவாய் ரு
உளகர் - உள்ளானவர் சுக
உள்ளல் - நினைத்தல் கஉ
உறுவது - இலாபம் கங

உற்பத்தி - தோற்றம் எகூ
உன்னுதல் - கருதுதல் ருகூ
ஏத்தர் - விரகர் ச
எயில் - கோட்டை கூரு
எவன் - யாது கஎ
என்கடவோம் - என்னகடப்பாடுடையோம் கூகூ
ஏகம் - ஒன்று எகூ
ஏகுதல் - செல்லுதல் சரு
எய்தல் - ஒத்தல் எ, சங
ஏழாம்நரகம் - தமத்தமப்பிரபை சஎ
ஏழாயிரச்சின்னம் - ஏழாயிரமும், எஞ்சிய சிற்றெண்ணும் கூஉ
ஐவகைப்பூஞ்சரம்பற்றினன் - காமன் சகூ
ஒண்மை - அழகு ச
ஒருவண்ணம் - ஒருபடி ருஅ
ஒருவுதல் - கடத்தல் கூஎ
ஒவ்வாநெறி - மித்தியாமார்க்கம் கூச
ஒன்னார் - பகைவர் சஅ
ஓசனைத்தாய் - ஓசனைவிரிவுடையதாய் கஅ
ஓதனம் - சோறு கூரு
ஓர்தல் - அறிதல் கச
கடி - மணம் கூகூ
கடிது - விரைவு அகூ
கண்ணல் - கருதல் கூ
கண்ணவனார் - கருத்துடையவர் உரு
கதம் - கோபம் ருஉ
கதிர்க்காந்தம் - ஒளியையுடைய காந்தம் கூ
கத்தி - மாறுபட்டு எகூ
கந்தித்தல் - பரிமளித்தல் ரு0
கந்துகள் - தம்பங்கள் கூஅ
கயம் - யானை கூஅ
கருமை - பெருமை ருகூ
கவல் - கவலை எகூ
கழிதல் - சாதல் ஙங
கழிவிழி - தோற்பித்தவிழி ருச
களபம் - சந்தனச்சேறு கூஅ
களிகள் - மாதங்கர் உரு
களிப்பு - செருக்கு கூச
கறுவு - சினக்குறிப்பு ருஉ
காஞ்சிரமரம் - எட்டி அகூ
காட்சி - தரிசனம் சகூ, ஸம்யக்தரிசனம் கூ0
காமர் - அழகு ஙஉ
காயெரி - சுடுகின்றதீ ஙச
கார்க்கமலம் - குளிர்ந்ததாமரை ரு0
காலி - துன்மார்க்கம் ஙங
கில்லார் - மாட்டார் சஉ
குஞ்சி - மயிர் ருச
குணம் - குளிர்ச்சி, மணம் கூக
குணித்தல் - விசாரம் உங
குத்தி - அடக்கம் எரு
குபதர் - தீநெறியோர் கூகூ, அஉ
குயிற்றுதல் - பண்ணல் சஅ
குளிர்பிண்டி - பாவமாகிய வெப்பத்தைநீக்கிக் குளிர்விக்கும் பிண்டி க
குனித்தல் - ஆடுதல் கூ
கூஉக்கொண்டு - கூவுதலைக் கொண்டு க
கேட்டார் - (கேள் - தார்) சுற்றத்தினொழுங்கு க0
கேவலம் - ஞானம் அஅ
கேள் - சுற்றம் க0
கேள்வி - வார்த்தை சஉ
கையர் - திருடர் கூச
கொண்டல் - மேகம் க, உ
கொண்மூ - மேகம் அ
கொய்சகஞ்சேருடை - பெண்ணுடை சஅ
கொலை - வருத்தம் சஎ
கோகிலம் - குயில் க
கோலம் - அழகு ருச
சகம் - உலகம் எ, எஅ, கூஅ
சங்கரன் - சுகத்தைப்பண்ணுமவன் கூஎ
சங்கை - மித்தியாத்வம் கூஅ
சத்திரம் - குடை எ, எஅ
சமைத்தல் - பண்ணுதல் எஅ
சரணம் - திருவடி எ
சளகர் - இட்டளர், மகளிர் கூக
சித்தி - சித்தியென்னும் நகர் ச0, மோக்ஷம் சகூ, எஉ
சிந்தித்தல் - நினைத்தல் கங
சிரத்திரள் - தலைத்திரள் உங
சிவம் - நன்மை கஎ
சிறப்பு - அதிகம் அக
சீர் - புகழ் அக
சுடர் — பரஞ்சோதி உகூ
சுதம் - பரமாகமம் ருஉ
சுத்தி - நிர்மலம் உகூ
சுமடர் - மூடர் க0
சுரர் - தேவர் அகூ
சுழல்துன்பம் - நிரயத்துன்பம் உ0
சூழ்தல் - விசாரித்தல் சஉ
சூழ்த்தல் - வளைத்தல் உ0
செஞ்சுடர் - சூரியன் சங

செம்பத்தி - செவ்விதாகிய அன்பு ௨௩
செயபாதங்கள் - பாவத்தைப்போக்க [வல்லதிருவடிகள் ௮௨
செவ்வழி - செவ்வியமார்க்கம் ௪௦
செற்றம் - வெறுப்பு ௨௦, கோபம் ௭௫
செறல் - வெல்லுதல் ௪௯
சேதியம் - கோயில் ௯௩
சோர்க்கம் - கூத்தின் விகற்பம் ௯
சோமன் - சந்திரன் ௪௪
தந்தி - யானை ௧௦௦
தமித்து - தனியே ௨௩
தம்பம் - தூண் ௨௨, தறி ௨௯
தரு - கற்பகதரு ௧௫
தருமத்தரை - தருமகண்டம் ௧௫
தவம் - துறவறம் ௧௭
தளை - விலங்கு ௯, ௫௮
தனம் - பொருள் ௯௫
தாங்குதல் - தரித்தல் ௭
தார் - ஒழுங்கு ௧௦
தாவில் - குற்றமற்ற ௧௯
தானம் - இல்லறம் ௧௭
திக்கு - உலகம் ௮௮
திரிதல் - கெடுதல், சுழலுதல் ௮௯
திரிவிதக்குற்றம் - மூக்குற்றம் ௯௮
திரு - இலக்குமி ௭
திரையம்புகாக்கடல் - அலையெறியாத கடல் ௩௪
தினைத்துணை - நினையளவு ௮௫
தீர்த்தல் - ஒழிதல் ௮௮
தீர்த்தர் - அருகர் ௯௩
துகள் - குற்றம் ௯௩
துய்த்தல் - இன்னல் ௮௯
துன்னுதல் - நெருங்குதல் ௫௧
தூண்டல் - செலுத்தல் ௨௭
தூர்தல் - நிறைதல் ௧௦
தெவ் - பகை ௧௯
தெறுவது - நீங்குவது ௧௩
தேங்கணை - தேனையுடைய பூவாளி [௮௭
தேசு - ஒளி ௪௯
தேய்த்தல் - சுருங்கல் ௫௨
தொடி - வளையல் ௯
தோளல் - துளையிடல் ௧௦
நகாநின்ற - ஒளிவிடாநின்ற ௪௫
நசை - ஆசை ௪௨
நம்பல் - விருப்பம் ௯௮
நரர் - மக்கள் ௮௯
நரை - விடபம் ௩௪
நல்கல் - கொடுத்தல் ௧௨, பயன்படல் [௮௧
நறை - கள் ௮௩
நாடுதல் - தேடுதல் ௯௫
நிரந்தரம் - எப்பொழுதும் ௩௧
நிலா - ஒளி ௭௮
நிவப்பு - உயர்வு ௯௧
நீடுமலர் - அதிசயத்தால் எக்காலத்து [முளதாகியபூ ௫௫
நீரணை - குணம் அணைந்த ௯௧
நுவலுதல் - அருளிச்செய்தல் ௭௦
நெறி - வழி ௫௭
நேர்தல் - உடன்பாடு ௫௯
நைதல் - வருந்துதல் ௪௩
நொடிவரை - சிறுபொழுது ௩௩
நோனுமை - பொறுமை ௪௭
பகர்தல் - சொல்லுதல் ௩௩
பசுமை - அழகு ௧, செவ்வி ௨௯
பணித்த - அருளிச்செய்த ௨௩
பணித்தல் - கொடுத்தல் ௧
பணை - பருமை ௯
பதம் - செல்வம் ௧௫, வழி ௪௦
பத்தனம் - பட்டணம் ௪௦
பந்தம் - கட்டு ௫௫
பந்தித்தல் - கட்டுதல் ௫௦
பரம் - மேல் ௪௯, ௭௯
பாத்திரயம் - மேலானரத்நத்திரயம்
பரவாதிகள் - பரசமயிகள் ௫௧ [௨௪
பரவை - பரப்பு ௩
பரிதல் - அறுத்தல் ௯, ௫௮
பரித்தல் - சுமத்தல் ௧௯, தரித்தல் ௯௧
பருவம் - காலம் ௯௭
பல்லூழி - நெடுங்காலம் ௧௪
பல்வினை - தீவினை ௨௦
பவம் - பிறப்பு ௨௯
பளகர் - மூடர் ௯௦
பறத்தல் - விரைதல் ௫௧
பற்பதம் - பர்வதம் ௩
பாக்கியம் - புண்ணியம் ௨
பாடந்தரித்து - ஓதியுணர்ந்து ௯௨
பாதகம் - வஞ்சகம் ௫௯
பாத்தல் - பகுத்தல் ௮௯
பாரணையா - நிலந்தோயா ௯௧
பாரித்தல் - பண்ணல் ௯௧
பார்த்திபர் - அரசர் ௮௯
பாவனை - தியானம் ௮௮

பானல் - நீலோற்பலம் ருகூ
பிணங்குதல் - மாறுபடுதல் சுசு
பிறழ்தல் - விளக்கம் அஎ
புகா - புகுந்து நச
புக்குற்ற - அடைந்த எச
புந்தி - மனம் க00
புரத்தல் - காத்தல் நஎ
புரத்திரயம் - முப்புரம் உச
புரந்தரலோகம் - தேவலோகம் நஉ
புலன் - கழனி ருஅ
புழை - துளை உந
புற்புதம் - குமிழி ந
புன்னெறி - மித்தியாமார்க்கம் உஉ
பூரணை - நிறைவு கூக
பெருங்குழி - கடல் உ0
பொய்க்குடிவாழ்க்கை - நிலையாமையேகுடிகொண்டிருக்கிற இம்மைச் செல்வம் ந
பொன்னுலகம் - தேவலோகம் க
போதல் - திரும்புதல் சு0
போதி - அரசமரம் உச
மங்க - கெட ககூ
மண்டலம் - வட்டம் அ0
மதிநூல் - பரமாகமம் உக
மயம் - செருக்கு சுஉ
மயரிகள் - காமநூலியர் ருந
மன்னுதல் - நிலைபெறுதல் சுரு
மா - பெருமை க, சு
மாசனம் - மந்திரி புரோகிதர் முதலியோர் சுச
மாத்திரை - கணம் உரு
மாயம் - சூனியவாதம் உச
மாரி - வருஷம் நச
மாருதம் - காற்று கூக
மால் - ஆசை க
மாறுமனம் - இடைவிடாமனம் சுஎ
மாறு - பிறவி நசு
மானுங்கணமுதல் எழ்நிலம் - மானஸ்தம்பமுதலாகிய எழிடங்கள் கஅ
மிசைதல் - புசித்தல் அரு
மிச்சம் - பொய் கந
மிச்சர் - மித்தியாவாதிகள் க0
மிடைதல் - வருந்துதல் ருஎ
மித்தாச்சமயம் - பரசமயம் கூ0
மீ - மேல் அச
முக்கியம் - தலைமை எந
முடங்கன் மனுலயம் - சிறியமனமாகிய தாமரை ந0
முடை - நாற்றம் அஎ
முத்தி - சித்தி க
முந்து - பழமை கூக
முந்துற - முற்பட கூக
முளரி - தாமரை சுந
முள்ளி - முள்ளிப்பூ கந
முறி - தளிர் எந
முனைவன் - ஜிநேசுவரன் ருந
முன்னல் - கருதல் கக
முன்னை - பழமை சுஉ
மெய் - உடம்பு சு0, கூச
மெய்ந்நூல் - பரமாகமம் சுஉ
மெய்ம்மை - உண்மை ருரு
வதம் - விரதம் சக, சஉ, ருஉ
வந்தரர் - வியந்தரர் கூஉ
வம் - வாருங்கள் சுந
வம்பு - புதுமை அஎ
வயிரி - விரோதி, [சமடன்,] நச
வரிசிலை - அழகியசிலை அஎ
வரை - கல் நச
வளம் - பேரின்பம் நந
வற்ற - உலர எரு
வற்றோ - வல்லதோ சுந
வன்மா - குதிரை நரு
வன்றறி - வலியதம்பம் எஎ
வாசி - குதிரை க00
வாய் - நா [ஆகுபெயர்] அச
வாய்வலம் - சொலல்வல்லபம் உ0
வார்தளிர் - நீண்டதளிர் ந0
விதி - கருமம் சுஉ
வித்தி - விளைவித்து ருசு
விபூதி - செல்வம் கூச
விம்ம - கனக்க எரு
விளிவருதல் - முன்னிற்றல் கூச
வீழ்தல் - விருப்பம் கந
வெவ்வன் - கெடுப்பன் கூக
வெள்ளைவாள் - சுக்கிலத்தியானம் கூக
வேட்டை - கொலை ருசு

ஸ்ரீ:

# மேற்கோள்விளக்கம்.

[உச-ஆம் பாட்டுரை.]

"சக்கர னான்முகன்......................மாத்தன் றுணிபு."

சக்கர னான்முகன் சங்கரன் பூரணன்
புத்தன் கபிலன் கணாதனென் —றித்திறத்
தேகாந்த வாதிக ளெண்கெட்ட வாதம்போ
லாகாத மாத்தன் றுணிபு. (அறநெறிச்சாரம்.)

சக்கரன் வைணவர்க்குக் கடவுள். நான்முகன் பிரமவாதியர்க்குக் கடவுள். சங்கரன் சைவர்க்குக்கடவுள். பூரணன் ஆஜீவகமதத்தருக்கு ஆப்தன். இதனை "உரையானிறைவன்" என்னும் **நீலகேசி ஆசீவகவாதசருக்கவுரையில்** "வாக்கியப்பிரவிருத்தியும் ஊக்கியும் நரை திரை முதலாயினவும் உடைய னல்லனாகி ஆகாசதலத்து இந்திரதநுசுப்போலத் தோன்றுந் தோற்றத்தை யுடையனாகிக் குற்றம்படாத வறிவினையுடையன் **பூரணன்** என்னும் எம் **முடைய ஆப்தன்**" எனவும் "முந்துற்றமூடப் புலிமூன்றும் பிழைத்த பின்னை" என்னுந் **தருமவுரைச்சருக்கவுரையில்** "மூடத்தினீங்கினார் பாஷண்டிகளைத் தபோதனரென்றும் அரி அர புத்த **பூரணாதிகளை** ஆப்தரென்றும் புத்திபண்ணார்" எனவும் வருதலான் உணர்ந்துகொள்க. புத்தன் பௌத்தருக்கு ஆப்தன். கபிலன் சாங்கியருக்கு ஆப்தன். கணாதன் வைசேஷிகருக்கு ஆப்தன். "வீட்டினார் நெறியென விரித்த மேலையோர், காட்டினார் பலருளுங் கணாத னேயெனு, மீட்டினான்" என **வைசேஷிகவாதத்து** வருதல் காண்க. தருக்கம் ஏகாந்த வாதம், அநேகாந்தவாதம் என இருவகைப்படும். வைணவர்முதற் கணாதர் இறுதியாகக்கூறப்பட்ட எழுவரும் ஏகாந்தவாதிகளாவார். சைநர் ஒருபொருட் கொருபோதே உண்மையு மின்மையு முதலாயின கூறுதலான் அநேகாந்தவாதிக ளாவார். ஏகாந்தவாதிகளான பரவாதிகளுடைய குதர்க்கவாதம்போலத் தீயது ஆகாதாம், ஆருகதருக்கு ஆப்தனான அருகபரமேட்டியின் றுணிபு என்க. எண் என்பது ஈண்டுத் தருக்கம். எண்கெட்டவாதம் தருக்கங்கெட்டவாதம். அஃதாவது குதர்க்கவாதம் என்பது.

ஸ்ரீ:

# இடம்விளங்கா மேற்கோள்கள்.

[௪௨-ஆம் பாட்டுரை.]

“சித்திரத்துருவுஞ் சிதைத்தலாகாது” என்பது அறநூல்.

[௬௧-ஆம் பாட்டுரை]

“ஆதி நனென்சளவெனன் றுருரைத்தார்”

---

# உரைமேற்கோள் நூல்கள்.

௧. திருக்குறள்.

௨. நாலடியார்.

௩. அறநெறிச்சாரம்.

௪. அருங்கலச்செப்பு.

௫. சிந்தாமணி.

௬. யசோதரகாவியம்.

ஸ்ரீ:

# செய்யுண்முதற்குறிப்பகராதி.

[எண்கள் - பாட்டெண்கள்]


| | |
|---|---|
| அச்சமல்லாவல்லு | ௨௧ |
| அடியேனறிவற் | ௯ |
| அடையுமவருமை | ௪௮ |
| அதிசோகமோடய | ௫௭ |
| அந்தாமேலொரு | ௨௮ |
| அருளோடெழுமற | ௫ |
| அவஞ்செய்கின்றே | ௧௭ |
| அறியோமருந்தமி | ௭௩ |
| இச்சிகனே | ௭௮ |
| இடரார்பவக்கங்கு | ௨௬ |
| இரக்குந்தொழி | ௩௭ |
| இருவினைவேலை | ௬௭ |
| ஈசனென்றுலு | ௭௧ |
| எண்ணுடைமாலை | ௭௦ |
| எரிதின்றுபோத | ௯௬ |
| என்செயலாம்வினை | ௮௨ |
| என்னெஞ்சமேயிட | ௧௮ |
| என்னையிம்மண்ணுல | ௬௫ |
| ஓத்தகலாமதி | ௪ |
| ஒருத்தருமத்தர்கள் | ௧௫ |
| ஒளிவந்தநீழ | ௯௪ |
| ஒன்றறியீர்முழு | ௭௭ |
| ஓர்கின்றிலையுனை | ௧௪ |
| கதமொழிதீர்மின் | ௫௨ |
| கந்தாதிகளென் | ௯௯ |
| கருந்திரைகாணினும் | ௬௦ |
| கற்பகமேகரு | ௩ |
| காலங்கழிதொழுங் | ௫௪ |
| குணதாரேமுனி | ௫௯ |
| குற்றம்விட்டார் | ௭௫ |
| கேவலமுற்பத்தி | ௧௧ |
| கைத்துக்கடிதடுங் | ௮௬ |
| கொண்டல்கண்டூர் | ௨ |
| கொண்மூவொரு | ௯௭ |
| சங்கையஞ்சார்தளர் | ௬௮ |
| சத்தியமேயொன்று | ௭௯ |
| சாமரைசங்கு | ௪௪ |
| சீரத்திரளுங்கில | ௨௪ |
| சிறப்பின்றிவ்வாழ் | ௮௧ |
| சுடர்மண்டலஞ் | ௮௦ |
| சுத்தியைத்தானுடை | ௨௯ |
| சேற்றதுகாதிக | ௮௮ |
| சேதியமுப்புவனத் | ௯௩ |
| சொல்லார்பிறர்க் | ௪௨ |
| தம்பத்தின்மேற் | ௨௩ |
| தாங்குவளைக்கரச் | ௮ |
| தாமரையேயெத் | ௭ |
| தூண்டுதிண்டே | ௨௭ |
| தெய்வதம்வேறொன் | ௭௬ |
| தெளிக்குந்திரு | ௯௮ |
| தொல்லறமேபடை | ௩௮ |
| தோளாமரச்செவித் | ௧௦ |
| நற்றவர்க்குச்சித்தி | ௪௬ |
| நாயகத்தேவர்த | ௮௪ |
| நிரந்தரநான்மை | ௩௨ |
| நினைத்தனையாயினும் | ௮௫ |
| நின்மாமலர்ப்பதங் | ௩௫ |
| நீசரணைமிடங் | ௪௩ |
| நெறிச்சென்றொரு | ௫௮ |
| படினும்படார்தவம் | ௮௯ |
| பண்ணவனார்சக | ௨௫ |
| பத்தர்நற்சித்தனைப் | ௬௯ |
| பரம்பற்றிநீங்க | ௪௯ |
| பரித்தமலர்ப்பதத் | ௧௬ |
| பளகரெல்லாமனைப் | ௬௧ |
| பறந்துபுக்குப்பர | ௫௧ |
| பாடுவனேசில | ௫௬ |
| பாரிடையீரிரு | ௯௨ |
| பிணங்கோமெவ | ௬௬ |
| புகாநின்றஞாயிறு | ௪௫ |
| புங்கவன்பூரணன் | ௧௯ |
| புண்ணியமானசெம் | ௬ |
| பூக்கொண்டு | ௧ |
| பூரணையாற் | ௯௧ |
| பெயர்த்தன்பரிம்பர் | ௨௨ |
| பெறுவதுமூவுல | ௧௩ |
| பேராயிரத்திரு | ௭௨ |
| பொன்குணமாமணிப் | ௩௬ |
| போலிப்பொரு | ௩௩ |
| மடங்கலிருசனம் | ௩௦ |
| மணியாபரணமு | ௮௭ |
| மலந்தோய்வயிறு | ௬௪ |
| மாறுமனங்கொண்டு | ௪௭ |
| மிசையார்தலைச | ௮௩ |
| முக்குற்றநீக்கிய | ௭௪ |
| முத்தனென்கோ | ௩௧ |
| முத்திற்பொலிகுடை | ௪௦ |
| முந்தியபோனபின் | ௧௦௦ |
| மும்மடிசூழ்ந்த | ௬௩ |
| முன்னையென் | ௧௨ |
| மொழித்தேனியம்பு | ௫௩ |
| மோகங்களாற்சில | ௩௯ |
| வந்தனவெண்ணரை | ௯௫ |
| வந்திக்கவும்புகழ் | ௫௦ |
| வரையம்புகாயெரி | ௩௪ |
| வழுவதல்லாவதம் | ௪௧ |
| வாழ்த்திநின்புகழ் | ௨௦ |
| வினைவருமாறு | ௯௦ |
| வீடும்வினைகளின் | ௫௫ |
| வேடந்தரித்து | ௬௨ |

ஸ்ரீ:

# அவிரோதியாழ்வார்

இயற்றிய

# திருநூற்றந்தாதி

மூலமும் உரையும்.

## நேமீசர்துதி

மறமே முனிந்து மயிலா புரிநின்று பன்னுயிர்கட்
கறமே பொழியு மருட்கொண்ட லேயத ரஞ்சிவந்த
நிறமே கரியவொண் மாணிக்க மேநெடு நாளொளித்துட்
புறமே திரிந்த பிழையடி யேனைப் பொறுத்தருளே.

## நூல்.

பூக்கொண்டு பொன்னுல கங்கொடுப் பானைப் புலவர்செஞ்சொற்
பாக்கொண்டு முத்தி பணிக்கவல் லானைப்பைங் கோகிலங்கள்
கூக்கொண்டு சேருங் குளிர்பிண்டி யானைக் குணம்புகழ்வான்
மாக்கொண்டல் வீழ்துளி யெண்ணவெண் பேய்மன மால்கொண்டதே.

**இதன்பொருள்.** அன்பரிடுகின்ற பூக்களைக்கொண்டு தேவலோகத்தைக் கொடுக்கவல்லவனைப் புலவர் செஞ்சொலாலே தொடுக்கப்பட்ட கவிகளைக் கொண்டு சித்தியைக் கொடுக்கவல்லவனை, அழகிய குயில்கள் கூவுதலைக் கொண்டணுகுங் குளிர்ந்த பிண்டிகீழலிலிருப்பானை அவனுடைய அநந்த ஞானதி குணங்களைப் புகழ்வான்வேண்டிப் பெரிய கொண்டலின் வீழ்கின்ற துளியை எண்ணுவதாக ஆசைப்பட்டதனையொக்கும் என்னுடைய பேய் மனம் ஆசைப்பட்டது **என்றவாறு.**

சுவாமியை ஆத்மார்த்தமாக அர்ச்சனைசெய்பவர்க்குக் கல்வியும் ஞானமும் சால வேண்டா வாதலால், அவர்க்குப் பொன்னுலகமும், பிறந்திறக்கும் வரிசையினையுடைய மனிதர்விஷயத்திலன்றிக் கடவுள்விஷயமாகப் பாடுவோர் கல்வியொடு ஞானமு முதிர்ந்தோராதலால், அவர்க்கு மோக்ஷமும் கூறப்பட்டன. காமங்களையெல்லாம் க்ஷயம்செய்தவர் பெறும் வீடு பாடினவர்

பெறுவார் என்பது, மலர் பிஞ்சு காய் கனி என்னும் பரிணாமபரம்பரை யாற் பெறப்பட்டது. ஸ்வாமி வீற்றிருக்கும் அசோகிற் குயில்களில்லாவே னும் விருக்ஷங்களுக்குக் கூறும் இயற்கையடை சிறப்பித்தற்பொருட்டு வந்தது. மாவிலிருக்கும் கோகிலத்தைப் பிண்டியிலிருப்பதாகக் கூறலா மோ எனின்;—மாவும் அசோகும் மன்மதனுக்குக் கணையாக மலரைக் கொடுத்தலானும், மாதர்கள் மேனிக்கு உவமையாக அசோகந்தளிர் மாந் தளிரையே கூறுதலானும், இவ்விரண்டும் ஒருங்கே வசந்தகாலத்தின்கண் ணே தளிர்விடுதலானும் அக்காலத்திற் றளிரைக் கோதித்தின்றல் குயிலுக் கியற்கையாதலால் இதனிடத்துந் தங்கியிருத்தல் கூறலாமென்க*. குளிர் பிண்டி-பாவமாகிய வெப்பத்தை நீக்கிக் குளிர்விக்கும் பிண்டி. மாக்கொண் டல்-ஊழிக்காலத்தில் இடைவிடாமற் பெய்யும்படி மிகவும் நீருருக்கொண்ட மேகம். பெரிய மேகத்தின் றுளிகள் வரையறுத்தல் கூடாமைபோல ஸ்வாமி யின் குணங்களும் வரையறைப்படுத்தக்கூடா எனத் தெரிந்துகொள்ளு முணர்வில்லாமற் புகழப்புகுந்தேனென்பார் "பேய்மனம்" என்றார். பேய் மனம்-விபரீதத்தையடைந்த மனம்; பித்துப்பிடித்த மனமெனப் பொருள் கூறினும் பொருந்தும். தான் விரும்பிய ஒரு பொருளையடைதற்கு ஸகல முயற்சிகளையும் செய்தும் கிட்டாதாயின் அதனுடைய நினைப்பே மேலிட்டு ஒருவனுக்கு வெறிபிடிக்கும்; அதுபோல, கடவுளின்பொருட்டுத் தமக்குப் பித்தேறியதென்பார் "பேய்மன மால்கொண்டதே" என்றார்; என்பதும் ஒருபக்ஷம். (க)

கொண்டல்கண் டீர்கொடை குன்றுகண் டீர்புய மென்றுகொண்டே
தொண்டர்கண் டாரையெ லாந்துதி யாவண்ணந் தொல்லுலகிற்
பண்டுகண் டேயறி யாப்பொரு ளீயவென் பாக்கியத்தாற்
கண்டுகொண் டேன்பிண்டி நீழலின் கீழொரு கற்பகமே.

இ-ள். கொடை மேகத்தையொக்கும்; தோள் மலையையொக்கும் என்று சொல்லிக்கொண்டு பிறர்க்கடிமையாகிக் கண்டாரையெல்லாம் நான் புகழ்ந்துசொல்லாதபடி பழைய உலகத்திடத்துப் பண்டு கண்டறியாத மோக்ஷத்தை எனக்குத் தர, என் புண்ணியத்தாலே இப்பொழுது கண்டு கொண்டேன், பிண்டிநீழலின்கீழே இருப்பதொரு கற்பகத்தை; எ-று.

இதனால் இம்மைகருதி ஒருவனைப் புகழ்வேனோ என்பதாம். கண்டீர் என்பது தேற்றப்பொருளில்வந்த இடைச்சொல். தொண்டர்போல என

*"கூங்குயில் – விழாக்கொள விரிந்தது வீரன் பிண்டியே" என்றார் சிந்தாமணியினும் (முத்தி-௩௧௯.)

உவமச்சொல் விரிக்க. நாற்கதியும் யாருமறிந்ததாகலின், வீடு அறியாப்பொருளாயிற்று. ஈய-கொடுக்க. (௨)

கற்பக மேகரு ணைக்கட லேகடல் போற்குணத்தெம்
பற்பத மேபக டிப்பகை வாபர வைப்புனன்மேற்
புற்புத மேயன்ன பொய்க்குடி வாழ்க்கையைப் போகவிட்டு
னற்பத மேயடைந் தேன்சுமந் தேகு நளினமொத்தே.

இ-ள். கற்பகத்தருவே! கிருபாசமுத்திரமே! குணக்குன்றமே! *எண்வினைக்கும் பகைவனே! பரந்த புனன்மேலெழுந்த குமிழிபோல நிலையாத செல்வத்தைவிட்டு நிலைபெறுவதாக, நினது திருவடிகளைத்தாங்கும் தாமரைப் பூவைப்போலச் சரண்புகுந்தேன்; எ-று.

இதனால் ஜெனன மரண துக்கத்தைப் பிறப்பிக்குஞ் செல்வத்தை வெறுத்தாராயிற்று. பற்பதம்-பர்வதம். பிரகிருதி என்பது கருமம்; அது பகடிஎனவாயிற்று. பாவை-பரப்பு. புற்புதம்-குமிழி. நளினம் ஆகுபெயராற் றாமரைப் பூ. பொய்க்குடிவாழ்க்கை-நிலையாமையே குடிகொண்டிருக்கிற இம்மைச்செல்வம். 'பொய்க்குடில் வாழ்க்கை' என்று பாடங்கூறி நிலையில்லாத தேகத்திலிருந்து வாழ்தலை என்று பொருள்கூறுவாருமுளர். (௩)

ஒத்த கலாமதி யொன்றிரண் டொக்குமொண் பொற்குடைக்கீ
ழத்தகல் யாணமொ ரைந்துடை யாயடி யோமினுமெய்ப்
பத்தர்க ளாயுனைப் பற்றிநின் றேவினைப் பற்றறுக்கு
மெத்தர்க ளோபெறு வாரிறை வாநின தின்னருளே.

இ-ள். தம்மிலொத்துநீங்கா மதி மூன்று ஓரிடத்திற்சேர்ந்ததுண்டாகில் அவற்றையொக்கும் அழகிய பொற்குடைக்கீழ் வீற்றிருக்கின்ற அத்தனே! பஞ்சகல்யாணத்தையுடையாய்! அடியோங்களினும் உண்மையான அன்பராகி உன்னை வழிபட்டு வினைகளின் பற்றைக்கெடுக்கும் விரகர்மாத்திரமோ நின தினிய அருளைப் பெறுவார்; எ-று.

இதனால் நினதருள் யாமும் பெறவேண்டாவோ என்பதாம். கல்லியாணம் ஐந்தாவன;—ஸ்வர்க்காவதரணம், மந்த்ராபிஷேகம், மகாப்பிரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம் என்பன. எத்தர்களோ - இதனுள் ஓகாரம் பிரிநிலை. (௪)

---

* எண்வினையாவன;—ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

அருளோ டெழுமற வாழியப் பாபிற வாழியிற்பா
யிருளோ வியகரை யேறவுய்ப் பாயிந் தியங்களென்னு
மருளோ டுழலு மனத்தென்னை யாட்கொண்ட மற்றுனக்குப்
பொருளோ புவனங்கண் மூன்றையு மாட்கொள்கை புண்ணியனே.

இ-ள். பொருளு மின்பமுமான கடலுள் உயிர்கள் வீழாதே மயக்கத்தை யொழித்து வீட்டுநெறிசெலுத்தும் அறவாழியப்பனே! ஐம்புலன்களோடும் கூடி மருண்ட மனத்தையுடைய என்னை அடிமைகொண்ட வுனக்குத் தெருண்டமனத்தையுடைய மூவுலகத் திந்திரரையும் அடிமையாகச்செய்து கொள்ளுதல் ஒருபொருளோ புண்ணியரூபியே! எ-று.

இதனால் அதனை வியப்பித்த தியாது சொல்லாய்; நீலத்துகில் ஒருவண்ண மும் ஏலா; வெண்டுகில் யாவும் ஏற்குமாதலால், என்னை அடிமைகொண்ட தே அரிதென்பதாம்.

அறத்தை முன்னே பிரித்தலாற் பிற வென்றது பொருளும் இன்ப மும் ஆயிற்று*. மருண்டமனம் என்றதினாலே தெருண்டமனம் வருவித் தாம். இருளோவிய கரை - மயக்கமொழித்த கரை; எனவே வீடாயிற்று. மற்று-அசை. ஆகுபெயராற் புவனமூன்றில் இந்திராயிற்று. (ரு)

புண்ணிய மானசெம் பொற்றளை போலப்பொல் லாவினையாற்
பண்ணிய பாவ விருப்புத் தளைபரிந் தேறவுய்த்தற்
கண்ணிய வெங்கதிர்க் காந்தங்கண் டீர்கதிர் மாமதிபோற்
றண்ணிய வான்குடை மூன்றுடை யானடித் தாமரையே.

இ-ள். உலகுள்ளீர்! தீவினையாகிய இருப்புவிலங்குபோலே நல்வினை யாகிய பொன்விலங்கையும் அறுத்து வீட்டுநெறி செலுத்துவதற்குக் கருதப் பட்ட காந்தங்கண்டீர்; மூன்று குடைகளையுடையான் அடித்தாமரைகள்; எ-று.

இதனால் இவனது ஆற்றன்மிகுதி கூறியதாம். இதனுட் பொற்றளை போல என்னிற் காந்தம் பொன்னைப் பற்றா ததனால் இருப்புத்தளைபோல என மாற்றி அபூத வுவமையாக்கினும். பாவத்தை இருப்புத்தளையாகவும் புண்ணியத்தைப் பொற்றளையாகவும் கூறினாரென்க. பரிதல்-அறுத் தல். கண்ணல்-கருதல். கதிர்க்காந்தம்-ஒளியையுடைய காந்தம். (சு)

---

*"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்-பிறவாழி நீந்த லரிது" என்னுந் திருக்குறளினையும் அதற்கு ஆசிரியர் பரிமேலழகர் உரைத்ததனை யும் நோக்குக.

தாமரை யேயெத் தவங்கள்செய் தாய்சக மூன்றினுக்குந்
தாமரை சேயென்று சாற்றுவ போலுமுச் சத்திரத்துத்
தாமரை சேர்திரு வைத்திரு மார்பிற் றரித்தவர்சேர்
தாமரை யேய்சர ணந்தலை மேற்கொண்டு தாங்குதற்கே.

இ-ள். மூவுலகத்திற்கும் இவரே தலைவர் பிறரல்லர் என்று உலகுக்குச் சொல்லுவனபோலும் மூன்று குடையினையுடைய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருவை மார்பிலே தரித்தவருடைய தாமரைப்பூவை யொத்த திருவடிகளை நீ தலைமேலே தரித்தற்குத் தாமரைப்பூவே நீ முற்பவத்திலே என்ன புண்ணியஞ்செய்தாய்; எ-று.

இதனால் யாமும் அத்தவஞ்செய்யச் சொல்லாய் என்று தாமரையைப் புகழ்வாரைப்போலே முன்னே சரணாகியாரைப் புகழவந்ததாம். பூவுலகு முழுதும் புரந்த அரசர்க்கு ஒரு கொற்றவெண்குடையே விருதாகவுடைய வழக்கம்பற்றி மூவுலகுங் காப்பவர்க்கு மூன்று குடைகள் வேண்டுமாதலின், சுவாமியின் றிருவடிமேல் நிழற்றுகின்ற முக்குடைகளையும் மூவுலகத்திற்கும் தலைவரென்பது உணர்த்துவனவாகத் தற்குறிப்புச்செய்தார். (எ)

தாங்கு வளைக்கரச் சக்கர வாழ்வொடத் தாமரைமேற்
பூங்கு வளைக்கண்ணி னளொடு புல்லுடன் போர்த்தகொண்மூ
நீங்கு வளைத்திகழ் நீள்சுடர் போல்வினை நீங்கலும்புக்
காங்கு வளைத்தவெம் மூவொளி யான்மெய் யடியவர்க்கே.

இ-ள். மேகநீங்கிய சுடர்போல வினைநீங்கலோடும் வளைத்துக்கொண்ட *மூவொளியினையுடையான்றன் அன்பர்க்குச் சக்கரவர்த்திவாழ்வோடு, திருமகள்வாழ்வோடு, புல்லோடு வாசியில்லை; எ-று.

இதனாற் பற்றற்றே வினைநீங்கவேண்டுமாதலால் நினது அடியவர் செல்வத்தை மதியார்; பிறர்மதிப்பர் என்பதாம். தாங்குவளை - தரித்த அத்தகடகம். அத்தாமரை-முன்னிற்கவியிற் சுட்டு. கொண்மூ-மேகம். (அ)

அடியே னறிவற் கழுகிய வாதவ மாடகமாங்
கொடிசேர் நிரைமதிற் கோபுரக் கோயில்குற் றேவல்செய்ய
முடிசே ரமரர்கண் மொய்த்தெங்கு நிற்பர்சொர்க் கங்குனிப்பார்
தொடிசேர் புயத்துச் சுரேந்திரர் சேர்பணைத் தோளியரே.

*"ப்ரபாவலய மூன்றினையுமுடைய ஸ்வாமியினுடைய" என்றும் பிரதிபேதம்.

இ-ள். என்னுடைய சுவாமிக்குக் குற்றேவல்செய்யக் கோயிலெங்கும் நெருங்கிநிற்பர் முடிபொறுத்த தேவர்கள்: அவருடைய தேவிமார் கூத்தை யாடுவர்: ஆதலாலே இவரது தவமகிமை நன்றாயிருந்தது; எ-று.

இதனாற் பற்றற்றோர்க்கு இவையேலா என்று பழிப்பதுபோலப் புகழ்த லாம். அழகு-நன்மை. ஆ என்றது இழிபு. ஆடகம்-பொன். சொர்க்கம்என்றது கூத்தின்விகற்பம். குனித்தல்—ஆடுதல். (௯)

தோளா மரச்செவித் தூரா வயிற்றுச் சுமடர்க்கெல்லாம்
வாளா விருக்க வரந்தரு மோவஞ்ச மற்றநெஞ்சோ
டாளா னவர்க்கல்ல தாயிரக் கண்ணம ரேந்திரர்க்குங்
கேளா முதற்பொருள் கேட்டார்க் குரைக்குமெங் கேவலியே.

இ-ள். இந்திரர்க்கும் கேட்டார்க்கும் முதற்பொருளையுரைக்கும் எனது *கேவலஞானி, வஞ்சமற்ற நெஞ்சுடனே அடிமைப்பட்டவர்க்கல்லது தொளை யிடாத மரச்செவியினையும் நிறையாத வயிற்றினையும் உடைய மூடர்க்கெல்லாம் அவர் வாய்திறவாதேயிருப்ப வேண்டிய வரத்தைக் கொடுப்பனோ: எ-று.

இதனாற் பகை நொதுமல் நண்பென்னும் மூவகையுமின்றி எவ்வுயிர்க்கும் அருளுடையனாதலாலே †மிச்சரும் துதிக்கில் உடனே வரந்தரும் என்பதாம். அறங்கேளாமையாலே தொளைபடாச்செவியென்றும் அநசனமே தவத்திற்கு முதலாதலின் அந்த விரதம் அவர்க்கு இல்லாமையால் தூராவயிறு என்றும் கூறி னார். தோளல்—துளையிடல். தூர்தல்—நிறைதல். கேளாமுதற்பொருள்—ஒருவருங் கேளாத ஜீவாதிபதார்த்தங்கள். அவை ஜீவபதார்த்தம், அஜீவபதார்த்தம், புண் ணியபதார்த்தம், பாபபதார்த்தம், ஆச்ரவபதார்த்தம், பந்தபதார்த்தம், ஸம்வர பதார்த்தம், நிர்ஜரபதார்த்தம், மோக்ஷபதார்த்தம் என்பன. கேட்டார்க்கும் என உம்மை வருவிக்க. கேட்டார்-சுற்றத்தினொழுங்கு. (கேள்-சுற்றம், தார்-ஒழுங்கு.) எனவே பன்னிருகணம் என்பது பெற்றாம். அவை;—ரிஷிகள், தேவஸ்திரீ இராஜஸ்திரீமுதலான ஆர்யாங்கனைகள், ஜோதிஷ்கஸ்திரீகள், வன்னியேக ஸ்திரீகள், பவனஜஸ்திரீகள், தவனவாசிகள், வியந்தரர், ஜோதிஷ்கர், கல்பவாஸி கர், சக்கரவர்த்தி முதலான நரவரர்கள், திரியக்வர்க்கம் என்பன. (௧0)

கேவல முற்பத்தி யாமள வேகிளர் பூசனைக்கென்
றேவலி யற்றுமவ் விந்திர னுக்குமுன் னெண்குணத்தெங்
காவல னைக்கவிப் பார்வளைப் பார்முளைப் பார்களைப்போன்
மூவுல கத்துள்ள நால்வகைத் தேவரு முன்னுவரே.

---

* கேவலஞானம்-திரிகாலவுணர்ச்சி † மிச்சர்-மித்தியாவாதிகள்.

இ-ள். எம் காவலனுக்குக் கேவலஞானம் உதிக்குமளவிலே அவனைப் பூசனைசெய்வதாகத் தேவர்களை ஏவல்கொள்ளும் ஸௌதர்மேந்திரனுக்கு முன்னே கவிப்பார்போலவும் வளைப்பார்போலவும் மூளைப்பார்போலவும் மேலுலகம் மத்திமலோகம் பவணலோகமுடையராகிய நால்வகைப்பட்ட தேவர்களும் பூசைசெய்யக்கருதுவர்; எ-று.

இதனால் மூவுலகும் ஏவல்செய்யக்கருதலாலே இவனது தவமகிமை இருந்தவாறு என் என்பதாம். அவரவர் ஆசனம் கம்பித்தலான் அறிந்து கருதுவரென்க.* நால்வகைத்தேவர்—பவண வியந்தர சோதிட கற்பவாசியர். முன்னல்—கருதல். (கக)

முன்னையென் வல்வினை போக்கிமுக் குற்றத்தை நீக்கிமுத்தி
பின்னையு நல்க வமையும் பெரும பிறப்பறுத்த
வுன்னையு மென்னையு மன்றிமற் றொன்றுமுள் ளாமலுள்ளந்
தன்னையு நின்னருள் போல்வச மாக்கித் தரப்பெறினே.

இ-ள். பெருமானே! உன்னையும் என்னையும் அல்லது வேறொன்றையும் நினையாதபடிபண்ணி, யார்கண்ணு மொப்ப நீ அருள்செய்வதுபோல என்னெஞ்சை வசமாக்கித்தர வல்லையாகில் வினையும் குற்றமும் நீக்கி யான்பெறுகின்ற முத்தி பின்பேயாகிலும் தரவமையும்; எ-று.

இதனால் வினைகெடுதற்கு மனமே முதற்காரணமென்பதாம்; "செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை, யுள்ளறிவா னுள்ளங் கொளல்"† என்றாராகலின். முன்னை-பழமை. முக்குற்றம்-காம வெகுளி மயக்கங்கள். உன்னல்—நினைத்தல். அருமைபற்றிப் பெறின் என்றார். (கஉ)

பெறுவது மூவுல காளும் பெருமை யருமைபொய்ம்மை
தெறுவது நாதனைச் சிந்திப் பதுசிறு முள்ளிமொய்க்கு

---

* இப்பூவுலகில் ஏதேனும் விசேடம் நிகழுமாயின் தேவர்களுடைய ஆசனம் நடுக்கமுறும் என்பதும் அக்குறிப்பால் அதனை அறிந்து அவர்கள் செய்யவேண்டுவனவற்றைச் செய்வரென்பதும் ஜைன பௌத்தர்களுடைய கொள்கை. இதனை, "தரணேந்திரன் தனது ஆஸனங்கம்பித்தலில் அறிந்து" எனவரும் ஸ்ரீபுராணவசனத்தாலும், "ஈண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்—பாண்டுகம்பளந் துளக்கிய தாதலின்" (காதை-கச, அடி-உஅ, உக) எனவும், "தனது பாண்டு கம்பளந் தானடுக் குற்ற தன்மை நோக்கி" (காதை, உக, அடி-உக, உஉ) எனவும் வரும் மணிமேகலையடிகளாலும் உணர்க.

† திருக்குறள், வினைசெயல்வகை—எ.

மறுபத மாமென வைம்புலன் மேல்விழுந் தாவதங்கட்
குறுவது மேது முறுததும் பேதைக ளோர்கிலரே.

**இ-ள்.** ஒருவனுலகிற் பெறும் பயனாவது மூவுலகுமாளத்தக்க பெருமை பெறுவதே; அதற்குக் காரணம் யாதோவென்னில் மிச்சநீங்குதலும் இறைவனைச் சிந்திப்பதுமே; பேதைகள் அதனை அறியாதே முள்ளிப்பூவிலுள்ள தேனுக்கு விரும்பி மொய்க்கின்ற வண்டுபோலச் சிற்றின்பத்தை விரும்பித் தங்களுக் குறுவதாவதும் உறுததாவதும் அறிகின்றிலர்; **எ-று.**

இதனால் இவ்விரண்டும் பிறரறியார் நீ யவை செய்யவேண்டுமென மனத்திற் குறுதிகூறியதாம். இதனுள் சிறியமுயற்சியாலே பெரியபயன் பெறலாயிருக்க அதுதவிர்ந்து பெரியமுயற்சி செய்து சிறிதுபயனும் பெறுகின்றிலரென்பது தோன்றப் பேதைகள் என்றார்; மிச்சம்-பொய். சிந்தித்தல்-நினைத்தல். அறுபதம்-வண்டு. வீழ்தல்-விருப்பம். உறுவது-இலாபம். ஆவதென்பதனை இரண்டிடத்துங் கூட்டுக. (கங)

ஓர்கின் றிலையுனை யோனிக டோறும்பல் ஊழியுய்த்து
மார்கின் றிலையின்னு மாசைநெஞ் சேயினி யந்தகனார்
சார்கின்ற போதுனக் குச்சர ணார்சொல்லுந் தாமரைப்போ
தூர்கின்ற பாதால் லாலுரி யார்மற் றொருத்தரையே.

**இ-ள்.** நெஞ்சமே! சாதலொருதலையே; நீயோ அறிகின்றிலை; உன்னை யோனிகடோறும் நெடுங்காலம் வினைசெலுத்த அனுபவித்தும் ஆசை நிறைகின்றிலை; கூற்றங் கொண்டுபோகின்றவழிக்குத் துணைவேண்டாவோ; நீ யார்துணையென்று இருக்கின்றாய்; ஜிநேசுவரனல்லது உரியாருண்டாகிற் சொல்லாய்; **எ-று.**

இதனால் ஜிநதர்மமல்லது சரணில்லையென்பதாம். இதனுள் "வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும் வெருண்டீர்போல, வாற்றுணைக் கொள்ளாதடிபுறத்து வைப்பீரே யல்லீர்போலுங், கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும் போழ்தி, ஞற்றுணைக் கொள்ளீ ரழகலா லறிவொன் றுமிலீரே போலும்"* என்றார் பிறரும். முடியாதகாரியம் முடியிடுவரோவென்பது தோன்ற ஆசைநிறைகின்றிலை என்றார். †"முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்-படுபயனும் பார்த்துச் செயல்" என்றாராகலின். ஆர்தல்-நிறைதல். தருமம் அவர் சொற்றதாகலின் உரியாரவரென்றார். (கச)

*சீவகசிந்தாமணி கேமசரி--சநுக, †திருக்குறள், வினைசெயல்வகை—கூ.

ஒருத்தரு மத்தர்கள் போலுண ராருயி ரோம்புமெங்க
டிருத்தரு மத்தால் லாச்சிறு மானிடர் சேர்ந்தவர்க்குத்
தருத்தரு மத்தரை யோடுவிண் ணோர்பதந் தந்துபின்னு
மருத்தரு மத்தரை யாதிபட் டாரக ரரம்பரிசே.

இ-ள். தம்மையடைந்தவர்க்குத் தருவைப்போலே நரேந்திரபதத்தையும் தேவேந்திரபதத்தையும் தந்து முறையே சித்தபதத்தையும் தருகின்ற சுவாமியா மவரை ஆதிகர்த்தாவாமென்கிற முறைமை எமது ஜிநதர்மத்துள்ளாரல்லது பிறரொருத்தரும் உன்மத்தரைப்போலே அறியார்; எ-று.

இதனால் மெய்ந்நூலா லுண்மைவிளங்குவதல்லது பொய்ந்நூ லுண்மை விளக்காவாதலின் மிச்சர் உணாரென்பதாம். *"உலகநூ லோதுவ தெல்லாங் கலகல" என்றார் பிறரும். இதனுள், தருவைப்போலேயென இரண்டாமுருபும் உவமையும் விரிக்க. வரையாது நிழல்செய்தலாலே தருவென்றார். திருமத்தரை- தருமகண்டம். விண்ணோர்பத மென்பதனாலே நரேந்திரபதம் வருவித்தாம். பதம்-செல்வம். அரு-சித்தபதம்; " பண்டுகண்டேயறியாப்பொருள் " என்றார் மேலும் (உ). உம்மை வருவிக்கப்பட்டது. (கடு)

பரித்த மலர்ப்பதத் தாருருக் கொண்டுபைந் தோலுநஞ்சு
முரித்துமிழ் சற்ப மெனத்துற வார்தொண்ட ரோங்குலகை
யளித்து மளித்து மழிப்பவ ராத்தரென் றுபாரணந்
தரித்து முடித்துந் தவஞ்செய்கு வாரொத் தவஞ்செய்வரே.

இ-ள். ஜிநவேஷத்தை யெடுத்துப் பாம்பு பசுமையாகிய தோலையுரித்து நஞ்சை உமிழ்வதுபோலே உட்பற்றுப் புறப்பற்று விடத் துறவார், உலகினைப் படைத்து மளித்து மழித்துஞ் செய்வாரே தலைவராமென் றவர்க் கடியா ராபரணம் பூண்டும் ஆடைகளையுடுத்தும் தவம்பண்ணுவாரியல்பையொத்துத் தவமல்லாத காரியங்களைச் செய்கின்றார்; எ-று.

இதனாற் பற்றற்றே வினைநீங்கவேண்டுமாதலாலே பற்றோடுகூடிய தவம் தவமல்லவெனப் † பாசண்டமூடம் விலக்கியதாம். பொறிகளைத் தவனம் பண்ணுதலே தவமாதலால் இவர் இதம்பண்ணுதலாலே யவமென்றார். "பற்றுக

* நாலடியார், கல்வி-௪0.

† "மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல் - பாசண்ட மூட மெனல்" என்பது அருங்கலச்செப்பு-௩௩.

பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் - பற்றுக பற்று விடற்கு" * என்பதனாலு மறிக. உடுத்து மென்றதனாலே யாடை வருவித்தாம். பரித்தமலர்ப்பதமென் பதனை மலர்பரித்த பதமென மாறுக. பரித்தல்-சுமத்தல். பாம்பு புறத்துள்ள தோலையுரித்தல் புறப்பற்றுவிடுதற்கும், நஞ்சையுமிழ்தல் அகப்பற்றுவிடுதற்கும் உவமானமாயின. அரித்தலென்பது படைத்தல். (௧௬)

அவஞ்செய்கின் றேனென் றறிகின்ற தேயில்லை யந்தமில்லாச்
சிவஞ்செய்கின் றானெங்க ளர்த்தப் பிரான்றிரு வாய்மொழிந்த
தவஞ்செய்கின் றாயில்லை தானஞ்செய் தாயில்லை நீநடுவே
யெவன்செய்கின் றாயிந் திரியஞ்சொன்ன வாசெய்யு மென்னெஞ்சமே.

இ-ள். அவத்தஞ்செய்கின்றேன் என்று சற்றும் அறிகின்றாயில்லை; எமது தீர்த்தனருளிச்செய்யப்பட்ட துறவறஞ் செய்கின்றாயில்லை; அல்லது இல்லறந்தானுஞ் செய்கின்றாயில்லை; இரண்டுமாகாதே நீ யாது செய்கின்றனை சொல்லாய்; எ-று.

இதனாற் பிறர்க்கான செய்கின்றனை, நினக்கான செய்கின்றிலை யென்ப தாம். இதனுள், அந்தம் - முடிவு. சிவம்-நன்மை. தவம் - துறவறம். தானம்- இல்லறம். எவன் - யாது. இந்தியம் - ஐம்பொறிகள். (௧௭)

என்னெஞ்ச மேயிட மேயுடைத் தேயிந்தி ராதிவிண்ணோர்
முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத் தாய்முழு மாமணித்தூண்
மன்னிஞ்சி மூன்றொடு மாணங் கணமுத லேழ்நிலத்துப்
பொன்னின் சினையுமா யிற்றன் றேவெங்கள் புங்கவற்கே.

இ-ள். எங்கள் புங்கவனுறைதற்கு எனது நெஞ்சமானது பன்னிரண் டோசனையுடைத்தாய் எல்லாச்சிறப்புங்கூட இந்திரனிருமித்த சமவசரண மாயிற்றுதலாலே மிகவு மிடமுடைத்தா யிருந்தது; எ-று.

இதனால் இறைவனை இடைவிடாது நினைத்த மனத்தை ஒருவன் புகழ்த லாம். இதனுள், ஓசனைத்தாய்-ஓசனைவிரிவுடையதாய். இஞ்சி—மதில். இஞ்சி மூன்றாவன:—உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம் என்பனவாம். மாணங்கண முதல் ஏழ்நிலம்-மானஸ்தம்பமுதலாகிய எழிடங்கள்: அவை;- மானஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்தியவிருக்ஷம், துவஜபூமி, சித்தார்த்தவிருக்ஷம், ஸ்தூபஹர்மாவலி என்பன. அங்கணம்-இடம். நிலம்-விருத்தாகாரமுடையதாய்ப் பிராகாரமாகிய ஸ்தானம். அன்றோ என்பதசை. (௧௮)

---

* திருக்குறள்-௩௫௦.

புங்கவன் பூரணன் புத்தன் புராதனன் பூண்புனையாச்
சங்கரன் சக்கரன் றாமரை யோனெனத் தாவில்செங்கட்
சிங்கவன் யோனேத் தீர்த்தனைத் தீவினைத் தெவ்வெனும்பேர்
மங்கவன் றேவெள்ளை வாள்கொண்ட வீரனை வாழ்த்துவதே.

இ-ள். உயர்ந்தவன், குணங்களாலே நிறைந்தவன், அறிவுடையோன், பழையவன், சுகத்தைப் பண்ணுமவன், அறவாழியுடையோன், அதிசயத்தாலே நான்முகனென்று நினது திருநாமங்களைச் சொல்லிச் சிங்காதனத்தில் வீற்றிருக்கப்பட்ட வீரனே! தம் வினைப்பகை வெல்லவேண்டியன்றே நின்னை வாழ்த்துவார் வாழ்த்துவது; எ-று

இதனால் நீ வாளாவிருக்கலாமோ பரிசிலீவாயாகவெனப் பிறர்போலே ஆழ்வார் வீடுவேண்டியதாம். இதனுள் இழிந்தோர், குறைந்தோர், அறிவிலார், புதியவர், தவஞ்செய்வோர், மறவாழியர், விபரீதத்தாலே நான்முகனென்னுந் தலைப்பெயராக்கியவரை இரவேமென்பது குறிப்பெச்சம், வினைகளை வென்றே ளுதலாலே வீரனென்றார். தெவ்-பகை, மங்க-கெட, வெள்ளைவாள்-சுக்கிலத்தியானம். (௧௧)

வாழ்த்துதி நின்புகழ் வாழ்த்தவல் லாரைத்தம் வாய்வலத்தாற்
பாழ்த்துதி செய்துனைப் பாடா தவர்களைப் பல்வினைக்கே
சூழ்த்துதி யாமறி யாச்சுழ றுன்பப் பெருங்குழிக்கே
யாழ்த்துதி யார்வமுஞ் செற்றமு நீக்கிய வச்சுதனே.

இ-ள். அச்சுதனே! கேளாய்; நினது புகழை யேத்தவல்லவரைத் தேவர் பதங்கள் முதலிய கொடுத்து வாழப்பண்ணுவிப்பை; தமது சொலல்வல்லபத்தாலே பாசண்டராகிப் பாழான துதிகளைச் செய்து நின்னைத்துதியாதவர்களைத் தீவினைகளை வளையப்பண்ணுவிப்பை; அவ்வளவோ எம்போல்வாரறியாத நிரயத்துன்பமாகிய கடலினு ளாழப்பண்ணுவிப்பை; இப்பெற்றியுடைய நீ விழைவும் வெறுப்பும் விட்டவனே சொல்லாய்; எ-று.

இதனு லவ்விரண்டும் விடாதவனென்பது குறிப்பெச்சம். இதனுள் அச்சுதனே என்பதனுள் ஏகாரம் விளி. அறந்தலைப்பட்டோர் வாழ்த்துவாதலாலே அவர்க்கு நற்கதியும், ஏனையோர் வாழ்த்தாராதலாலே அவர்க்குத் தீக்கதியு மொருதலைதுணிந்து அதனை இறைவன்மேலேற்றிப் பழிப்பதுபோலப் புகழ்தலாம். "என்பி லதனை வெயில்போலக் காயுமே-யன்பி லதனை யறம்"* என்றாற்

* திருக்குறள்—௭௭.

போலக் கொள்க. "விரத மிலரெனினும் காட்சி யுடையோர் - நரகம் புகுத விலர்"* என்பது கருதி 'யாமறியாச் சுழறன்பப் பெருங்குழி' என்றார். வாய்வலம்-சொலல்வல்லபம். அச்சுதன்-கேடில்லாதவன். வினைக்கே குழிக்கே—வேற்றுமைமயக்கம். (உ0)

அச்சுமல் லாவல்லு மாமெழுத் தாதியு மந்தமுமா
வச்சுதெல் லாமதி நூலும் பொதிந்தது மந்திரமாய்
மெச்சுமெல் லாருக்கும் வேண்டிற் றளிப்பது மெய்த்தவத்தோர்
நச்சுமல் லார்குடை மூன்றுடை நான்முக னற்பெயரே.

இ-ள். உயிரும் உயிரல்லாத ஒற்றெழுத்துமே முதலும் இறுதியுமாக வைக்கப்பட்டதும், எல்லாப் பரமாகமங்களுள்ளும் பொதியப்பட்டதும், கொண்டாடப்பட்ட மந்திரமாகி எல்லாருக்கும் வேண்டியவற்றைக் கொடுக்கத்தக்கதும் ஸன்மார்க்கமுனிவர் விரும்பும் ஸ்வாமியினது திருநாமமேயாம்; எ-று.

இதனால் அருகவென்னுந் திருநாமங் கூறியதாம். அச்சு-உயிர். அல்-மெய். மதிநூல்-பரமாகமம். அல்லார்குடை-இருளைப் †போக்குகின்ற குடை. குடை மூன்றாவன;—சந்த்ராதித்யம், நித்யவிநோதம், ஸகலபாஜநம் என்பனவாம். ()

பெயர்த்தன்ப ரிம்பர்நண் ணாமைநல் கும்பெரு மைச்சரணும்
புயத்தம்ப ராம்பர போற்றிவிண் ணப்பமப் புன்னெறித்துன்
னயத்தன்பி லாரொடு தீவினைத் தெவ்வென்று நாட்டியநற்
சயத்தம்ப மோநம்ப நின்றிரு வாயிற் றனித்தம்பமே.

இ-ள். இவ்வுலகில் அன்பர் மீண்டும்வந்து பிறவாமல் வீட்டைக் கொடுக்குந் திருவடியையும் திசையாடையையுமுடைய நம்பனே! ஒருவிண்ணப்பங் கேட்டருள்வாயாக; நினது திருவாயிலிலே நாட்டப்பட்ட ஒப்பற்ற மானஸ்தம்பமானது, மித்தியாமார்க்கத்திற் சேருகின்ற உள்ளன்பில்லாத பாவாதிகளையும் வினைகளையும் வென்று நாட்டப்பட்ட சயத்தம்பமோ சொல்லவேண்டும்; எ-று.

இதனால் வினைவென்றோரே சயத்தம்பநாட்டவேண்டுமாதலாலே ஏனையோர் வினைவெல்லார் என்பதாம். இம்பர்-இவ்வுலகம். தம்பம்-தூண். (உஉ)

---

* அருங்கலச்செப்பு-சஎ.

† ஆர்தல்-உண்ணுதல்; "பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி" என்புழிக் காலுதல் ஆக்குதற்பொருட்டாதல்போல, ஈண்டு, ஆர்தல் குறிப்பால் அழித்தற்பொருட்டாயிற்று.

தம்பத்தின் மேற்புழை யேழுள வாக்கித் தமித்துவைத்த
கும்பத்தி னோடு நிகரொக்கு மாங்குணிப் பின்றியைந்தாம்
பம்பத்தி காயம் பணித்தபி ரான்பசுந் தாமரைத்தாள்
செம்பத்தி யால்வணங் காச்சிறி யார்தஞ் சிரத்திரளே.

இ-ள். விசாரமின்றியே பஞ்சாஸ்திகாயத்தை அருளிச்செய்த பிரானது ஸ்ரீபாதங்களைச் செவ்விதாகிய அன்பால் வணங்காத சிறியவரது தலைத்திரள், ஒரு தறியின்மேலே எழுதுளையுளவாக்கித் தனியேவைத்த குடத்தினையொக்கும்; எ-று.

இதனால் இறைவனை வணங்குவதே தலைமை என்பதாம். "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் - றாளை வணங்காத் தலை"* என்றார் பிறரும். தம்பம்—தறி. புழை-துளை. குணித்தல்-விசாரம். பஞ்சாஸ்திகாயம் என்பது பம்பத்திகாயம் எனத் திரிந்தது. அவை ஜீவாஸ்திகாயம், அஜீவாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம் என்பனவாம்†. பஞ்சாஸ்திகாயம் என்பது விசிஷ்டவாசகபதப்பொருளைத் தராமல் விசேஷ்யமாகவேநின்று ஐந்தாமென்கிற விசேஷணத்தை முதலிற் பெற்றுநின்றது. பசுமை- செவ்வி. (உ௩)

சிரத்திர ஞான்கில னைம்படை யேந்திலன் றிண்சிலையாற்
புரத்திர யங்களை யும்பொடி யாக்கிலன் போதியென்றோர்
மரத்திரள் சேர்ந்துபன் மாயஞ்சொல் லானெந்தை மன்னுயிர்க்குப்
பாத்திர யங்கள் பணித்த பிரானெங்கள் பண்ணவனே.

இ-ள். அதிசயத்தாலன்றி விபரீதமுக நான்கில்லாதவன், பகையில்லாமையாலே ஆயுதமெடாதவன்‡, அன்பரை விராகாலே அன்புநீக்கிக் குற்றங்காட்டி முப்புரத்தைச் சுடாதவன், அரசின்கீழேயிருந்து உயிரில்லை என்று பலபல மாயஞ்சொல்லாதவன்; அவன் யாவனெனில்;—மன்னுயிர்க்கு மேலாகிய ரத்நத்ரயத்தை அருளிச்செய்த எங்கள் பண்ணவன்; எ-று.

இதனால் இச்செய்கை தலைவர்க்கேலாவாதலால், தெய்வமூடம் விலக்கியதாம். "சக்கரனுன்முகன்......மாத்தன் துணிபு" என்றார் பிறரும். ஐம்படை-

---

*திருக்குறள்—௯.

† "மன்ற றுறு மணிமுடி" என்னுஞ் சிந்தாமணியுள் "தெளியும் பொருள்க ளோரைந்தும்" என்றது இவ்வஸ்திகாயங்களை.

‡ "சினஞ்செய் வன்பகை வருமெனவலி - சிதைந்து வெம்படை பலசுமவலர்" என்றார் திருக்கலம்பகத்தினும்-௬௦எ.

சங்கு, சக்கரம், தநு, வாள், தண்டு என்பன. புரத்திரயம்-முப்புரம். போதி என்றோர் மரத்திரள் - அரசென்னும் பெயரையுடைய திரண்ட மரம். மாயம்-சூனியவாதம். பரத்திரயம்-மேலான ரத்நத்ரயம்; அவை;—ஸம்யக்தர்சனம், ஸம்யக்ஞானம், ஸம்யக்சாரித்ரம் என்பன. * (உச)

பண்ணவ ஞர்சக மூன்றுமொர் மாத்திரை பார்க்குமெங்கள்
கண்ணவ ஞர்தன்மை கேட்டறி யார்கொல் களிகளைப்போல்
விண்ணவன் காற்றவன் வெந்தீ யவன்விரி நீர்பொதிந்த
மண்ணவன் மற்றுமெல் லாமவ னேயென்னு மானிடரே.

இ-ள். விண்முதலாக எண்ணியவையெல்லாம் அவனே; பிறரல்லர் என்று சொல்லுகின்ற மாக்கள், மூவுலகத்தையும் ஒருகணப்பொழுதிலே பார்க்க வல்ல கருத்தையுடையவர் இயல்பைக் கேட்டறியார்போலே இருந்தது; எ-று.

இதனால் அவர் கேட்டால் அவ்வாறு சொல்லார் என்பதாம். அத்துவித கண்டனங் கூறியவாறு. கண்ணவனர்-கருத்தையுடையவர். களிகள்-மாதங்கர். விரிநீர் என்பதனோடு அவன் என்பதை ஒட்டிக்கொள்க. (உரு)

இடாார் பவக்கங்கு லின்கண்மற் றென்னையுங் காணவொட்டாப்
படாரார் வினைத்தொல் லிருள்போ யிரியப்பைம் பொன்னனைமே
லடாரார் மலர்ப்பிண்டி யோடும் புகுந்தென் னகத்திருந்த
சுடாரார் விளக்கைமெய்ஞ் ஞானங் குலிகொண்டு தூண்டுவனே.

இ-ள். என்னைப் பிறப்பாகிய இரவின்கண்ணே வைத்து ஞானக்கண்ணையு மறைத்த வினையிருள்கெட, என்மனத்துட் புகுந்திருந்த பரஞ்சோதியாரது பரமாகமத்தை யான் மெய்யுணர்வாலே ஆராய்வேன்; எ-று.

இதனாற் பரமாகமம் உணர்ந்தன்றிப் பிறப்பும் வினையும் நீங்கா என்பதாம். மற்று அசை. படாரார் வினை—தன்பரிமறைந்த ஞானவரணீயம். அடர் ஆர் மலர்—தகடு நெருங்கிய பூ. சுடர் - பரஞ்சோதியார். அச்சோதி;—ஆலோகம், பிரபா மூர்த்தி, கனப்பிரபை என மூன்றும். எல்லாப்பொருளையும் விளக்குதலாலே பரமாகமத்தை விளக்கென்றும், அதற்கேற்ப விரலாலே தூண்டுவன் என்றுங் கூறினார். (உசு)

* "நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந்-தொக்க வறச்சொற் பொருள்" என்பது அருங்கலச்செப்பு-டீ.

தூண்டுதிண் டேருருள் போலச் சுழன்றுதொல் யோனிகட்கே
மீண்டுகொண் டேகுமவ் வெவ்வினைக் கஞ்சிநின் மெய்ச்சரணம்
பூண்டுகொண் டேனினிப் போகவொட் டேன்பொரு ளாகவென்னை
யாண்டுகொண் டாயற வாழிகொண் டேவென்ற வந்தணனே.

இ-ள். அறவாழியால் வினைகளை வென்றோனே! பண்டே யான் தேருருள்போலச் சுழன்று, யோனிகடோறும் மீளவுங் கொண்டுசெல்லுமோ என்று அந்தப் பவவினைக் கஞ்சி நினதடிகளைப் பற்றிக்கொண்டேன்; இனி உன்னைப் போகவொட்டேன்; என்னைப் பொருளாக முன்னே அடிமைகொண்டாயாதலாலே; எ-று.

இதனால் ஆகமங்கேட்டுப் பிறப்புணர்ந்தவன் பின்னும் இடர்ப்படுதற் கஞ்சி உரிமைகூறியதாம். முன்னிற்கவியில் என்னகத்திருந்த விளக்கு என்பது கருதியே ஆண்டுகொண்டாய் என் றிறந்தகாலத்தாற் கூறினர். தூண்டல்-செலுத்தல். மீண்டும் என உம்மை வருவிக்க. (உஎ)

அந்தர மேலொரு மந்தரம் வந்தென வம்மலர்மேல்
வந்தபி ரானடிக் கன்பில ராயின் மறையவரே
னிந்தர்கள் சாதியி னீசர்கண் டீரந்த நீசருமச்
சுந்தர னேசர்க ளாயின்விண் ணோரினுஞ் சுத்தர்களே.

இ-ள். யாவரேயாயினுந் தலைவனடிக்கு அன்பிலராயிருந்தாராயின், மறையவராயினுங் கீழ்க்குலத்தவரினும் இழிந்தவரேயாவர்; அன்புளராயிருந்தாராயின், இழிகுலத்தில் இழிஞரேயாயினும் தேவர்சாதியினும் அதிகரே யாவர்; எ-று.

இதனால் உயர்குடிப்பிறந்துந் தலைவன்மேல் அன்பிலராயின், அதனாற் பயனில்லை என்பதாம். "பறையன் மகனெனினுங் காட்சி யுடையா - னிறைவ னெனவுணரற் பாற்று"* என்றார் பிறரும். அந்தரம்-ஆகாயம். அம்மலர் என்றதனால் வெண்மையாகிய மலர் எனப் பொருள்கொள்க. மலருக்கு அந்தரத்தை உபமானமாக்கினமையால் நிர்மலமான வெள்ளிய ஆகாயம் எனப் பொருள்பெற்றாம். சாதியிலும் என உம்மை வருவிக்க. சுந்தரனுக்கு நேசர் என நாலாவது விரிக்க. இந்திரரை அதிகராதலினாலே சுத்தர் என்றார். (உஅ)

சுத்தியைத் தானுடைத் தொல்லரும் பல்குணத் தொல்சுகத்த
†சித்தியைத் தாவென்று செப்புகி லேன்முதற் சீவனுள்ளிட்

---

* அருங்கலச்செப்பு-கூஎ

† "முத்தியைத் தாவென்று மோகிக்கிலேன்" எனவும் பாடம்.

டத்தியைத் தானுள்ள வாறறைந் தாயடி விட்டகலாப்
பத்தியைத் தாவது முத்திபெற் றாரிற் பதின்மடங்கே.

இ-ள். சிவன்முதலாகப் பஞ்சாஸ்திகாயத்தை உள்ளவாறே அருளிச் செய்தவனே! நிர்மலமாகிய அநந்தகுணமும் இன்பமுமுடைய மோக்ஷத்தை நீ தா என்று சொல்லுகின்றேனில்லை; நினது திருவடிகளை விட்டுநீங்காத அன்பினையே தருவாயாக; அஃது எனக்கு அம்மோக்ஷத்தைப்பெற்றவரின்பத்தினும் பத்துமடங்கு நன்று; எ-று.

இதனால் முன்னிற்கவியிற் கீழோரையும் மேற்கதி செலுத்துவது அன்பாமாதலால், அதுவே சுருதி யிரந்ததாம். முதற்சிவன் என்பதனைச் சிவன்முதலென மாறுக. சுத்தி—நிர்மலம். அஸ்தி—பஞ்சாஸ்திகாயம். முத்திபெற்றார் இன்பம் என வருவிக்க. (௨௯)

மடங்கலி னாசனம் வார்தளிர்ப் பிண்டியும் மாமதில்சூழ்
கிடங்கலர் சோலைக ளாடக சாலைகள் கேடில்விண்ணோ
ரடங்கலு மார்கின்ற வாடகக் கோயிலி னும்மடியேன்
முடங்கன் மனாலய மேயினி தாயிற்றெம் முத்தனுக்கே.

இ-ள். முத்தனுக்கு எமது மனக்கோயிலாகிய தாமரைப்பூவே, ஆசனமுதலாக எண்ணப்பட்ட சிறப்பெல்லாமுடைய சமவசரணத்திற் பொற்றாமரைப் பூவினும் நன்மையாயிற்றன்றே; எ-று.

இதனாற் பொற்றாமரையிற் பற்றியிராமையானும், தன் மனத்தைப் பற்றியிருந்தமையானும் தலைவன் அன்புமிகுதி கூறியதாம். ஆடகக்கோயில் என்பதனாற் பொற்றாமரைப்பூவும், அதற்கேற்ப மனத்தாமரையும் வருவித்தாம். வார்தளிர்-நீண்டதளிர். முடங்கன் மனாலயம்-சிறிய மனமாகிய தாமரை. (௩௦)

முத்தனென் கோமுதன் மூர்த்தியென் கோசக மூன்றினுக்கு
மத்தனென் கோவினை யாளியென் கோவடி யேனுடைய
சித்தனென் கோபத்தர் செல்வமென் கோவினைத் தெவ்வொன்றில்லா
நித்தனென் கோபிண்டி நீழலின் கோவை நிரந்தரமே.

இ-ள். என்னுடைய வேந்தனை, மோக்ஷநாயகனென்றுசொல்லவோ; உலகுக்குச் சுவாமி என்று சொல்லவோ; என்னை ஆண்டவனென்று சொல்லவோ; என்றும் மனத்தாமரை உறைபவனென்று சொல்லவோ; அன்பர் செல்வமென்று சொல்லவோ; இவனை யாவனென்று சொல்வேன்; எ-று.

இதனால் இதயம்விடாது உறைதலினாலே தலைவனை நலம்புனைந்துரைத்த லாம். இதனுள் என்கோ என்பது என்றுசொல்லவோ என்பதாம். நிரந்தரம்- எப்பொழுதும். (௩௧)

நிரந்தர நான்மை நிறைந்திருந் தானுநின் றார்களைப்போற்
றரந்தர மல்லவென் றேவருள் செய்வது தன்றலைமேற்
கரந்தர நின்றொரு கால்வணங் கப்பெறிற் காமர்செல்வப்
புரந்தர லோகம் புழைக்கடை யாகுமெம் போலிகட்கே.

இ-ள். அடைவாக அநந்தஞானாதி குணங்களால் நிறைந்த எம்முடைய சுவாமியும் ஒழிந்த தேவர்களைப்போல, இவன் மோக்ஷத்துக்கு உரியனாகின்றான், அவன் உரியனாகான் என்று ஆராய்ந்துபார்த்தோ அருள்செய்கின்றவனாவன்; எம்போல்வார் ஒருகால் வணக்கஞ்செய்யப்பெறின், அவர்க்குத் தேவலோகத் தைப் புழைக்கடையின் தன்மைபோல எளிதாக்கிக்கொடுக்கும்; எ-று.

இதனால், அங்ஙனம் ஆராய்வார் மனிதராதலின், அவர் தெய்வத்தன்மை யிலர் எனத் தெய்வமூடம் விலக்கியதாம். இதனுள் 'இருந்தானும்' என்பது ஸ்வா மிக்குப் பெயராயிற்று. உம்மை-சிறப்பு. காமர்-அழகு. (௩௨)

போலிப் பொருளுடைப் புன்னெறி யாமப் புலிகிடக்குங்
காலிச் சிறுநெறி போய்க்கழி வீர்கழி யாவளத்த
மேலிற் பெருநெறி வீடே புகிற்பிண்டி வேந்தனெங்கோ
னூலிற் பகர்செந் நெறிபோய்ப் புகுமி னொடிவரையே.

இ-ள். போலிப்பொருளுடைய புலிகிடக்கின்ற துன்மார்க்கமாகிய சிற் றடிப்பாடுபோய் இறந்து கீழ்ப்போகின்றவரே! நீங்காத பேரின்பத்தையுடைத் தாய மேலான வீடுபுகவேண்டின், எம்மிறைவன் அருளிச்செய்த பரமாகமஞ் சொல்லுகிற பெரியவழி செவ்வையாமத்தனை; விரையப்போய்ப் புகுவீராமின்; எ-று.

இதனாற் பொருளில்லா நூனெறிசெல்லிற் பவநீங்கா என்பதாம். இதனுள் அவர் சொன்னநூலிற்குப் பொருளில்லாமையாற் போலிப்பொருள் என்றும், கொலையஞ்சாத் தலைவராதலிற் புலி என்றுங் கூறினார். *"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு-மருளானா மாணாப் பிறப்பு" என்றார் பிறரும். மேல் என் றதனாற் கீழ் என்பது வருவித்தாம். காலி என்பது மாட்டின் கூட்டம். புலிகிடக்

* திருக்குறள்-௩௫௧

கும் காவிச் சிறுநெறியாவது புலிகிடத்தற்கும் அது கிடப்பதறியாமல் மாடுகள் போதற்கும் இடனாய்க் காட்டடர்ந்த சிறிய மார்க்கம். கழிதல்-சாதல்; *"கழிந்தாரிடு தலை" என்றார் பிறரும். வளம்-பேரின்பம். நொடிவரை-சிறுபொழுது. (ந.ந.)

வரையம் புகாயெரி மாரிக ளாயவ் வயிரிசெய்த
திரையம் புகாக்கடல் பூக்கட லாகத் தியானமென்னு
நரையம் புகாவினைத் தெவ்வென்ற வாநன்று நாயடியே
னிரையம் புகாநன் னெறிபணித் தாட்கொண்ட நின்மலனே.

இ-ள். நின்மலனே! அந்தக் கமடனாகிய மேகமானது கல்லும் அம்பும் நெருப்புமாகப் பொழிந்த வெள்ளமெல்லாம் †பூவெள்ளமாகத் தியானமென்னும் இடபத்திலே புகுந்து நீ வினைப்பகையை வென்றபடி தர்மமாகும்; எ-று.

இதனால், பிறர்செய்த தீங்குபொறுத்தலே தலையாய தர்மம் என அதனை வியந்ததாம். ‡"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்-புணரின் வெகுளாமை நன்று" என்றார் பிறரும். வரை-கல். காயெரி-சுடுகின்ற தீ. மாரி-வருஷம். வயிரி-கமடன். திரையம் புகாக் கடல்-அலையெறியாத கடல். திரையம்-அம் சாரியை; அம் திரை புகாக் கடல் எனக் கொண்டு நீருருவமாகிய அலையில்லாத கடல் என்பாருமுளர். நரை-விடபம்; "கருநரைமேற் சூடேபோல்"§ என்றார் பிறரும். அம் சாரியை. புகா-புகுந்து. (நச)

நின்மா மலர்ப்பதந் தாங்கு நிரையிதழ்த் தாமரையை
வன்மா வெனக்கொண்ட மற்றதற் காகக்கொல் வான்கருப்பு
வின்மா ரனைச்செற்ற வீரமென் போதென வீற்றிருப்பப்
பொன்மார் பளித்ததப் புண்டரி காலயப் பொன்னினுக்கே.

இ-ள். வீரனே! நினது திருவடிகளைத் தாங்குந் திருமகளுறையுந் தாமரைப்பூவைக் குதிரையாக வாங்கிக்கொண்டதற்காகவோ அந்தத் தாமரையென்ன வீற்றிருக்க அவளுக்கு நின்மார்பைக் கொடுத்தது சொல்லாய் எ-று.

---

* நாலடியார்-தூய்தன்மை-கூ.

† இதனை "அறனிலடல்கெழு கமடனக்கிரம சண்டத்துட் குறக்கனன் றெறி யனலமடுபடை யசனிவெறபெனு மென்பற்பத் துணர்க்கமர்ந்தன" என்னுந் திருக்கலம்பகத்தானும் (நச) உணர்க.

‡ திருக்குறள்-நωஅ.

§ நாலடியார்-பெருமை-கூ.

இதனால், பெரியோர் செய்த உதவிக்கு அளவுண்டோ என்பதாம்; *"உதவி வரைத்தன் றுதவி யுதவி-செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றுராகலின். திருவை மார்பிலே வைத்தும் மோகமில்லாதிருந்தவர் என்பது தோன்ற 'வின்மாரனைச்செற்ற வீர' என்றார். (ருரு)

பொன்குண மாமணிப் பூந்துகி லாதிப் பொருளடியேன்
முன்கொணர் வீரென்று மோகிக்கி லேனிந்த மூவுலகு
நன்குணர் கேவல நாயக ரேமுன்பு நானுடைய
வெண்குணம் யான்பெற வெம்பெரு மானை யிரக்கின்றதே

இ-ள். கேவலநாயகரே! பொன்னும் மணியும் துகிலு முதலான பொருளை எனக்குத் தருவீராக என் றிரக்கின்றேனல்லேன்; முன்பு நானுடைய அநந்தஞானாதிகுணங்களை யான் பெறுவது காரணமாக இரக்கின்றேன்; எ-று.

இதனால், †மாற்றிற்கும் வீட்டிற்குங் காரணங் கூறியதாம். மணியினதொளியும் மலரினது நாற்றமும்போலே உயிர்க்கெல்லாங் குண மியற்கையாதலால் ' என்குணம் யான்பெற ' என்றார். குணமென்பது கயிறும் பண்பும். (ருசு)

இரக்குந் தொழிலொழிந் தியாமே யினியிந்த வேழுலகும்
புரக்கும் பொருளுடை யோம்புல வீர்வம்மின் பூமியெல்லா
நிரக்கும் பொருட்குவை யாவையு நீர்நினை யாதவெலாஞ்
சுரக்குஞ் சுரபிகண் டீர்பிண்டி நாதன்றன் றொல்லறமே.

இ-ள். அறிவுடையீர்! புரப்பாரைத் தேடியிருக்குந் தொழிலைவிட்டு எந்தை ஸ்ரீதர்மம் தேற வருவீராமின்; யாம் எல்லாவுலகத்தையுங் காக்கத்தக்க தொழிலுடனே, உலகில் எல்லாப்பொருளையும் உடையோமாவோம்; அவ்வளவல்ல; மோக்ஷத்தையுங் கொடுக்கத்தக்க சுரபிகண்டீரே ஜிநதர்மமானது; எ-று.

---

* திருக்குறள்-சOரு.

† மாறு - பிறவி. "சுணங்களைப் போலுமீரார் மாற்றிடைச் சுழலுமீரார்" (மேருமந்தரபுராணம், வைசயந்தன்முத்திச்சருக்கம்-கருசு) "மறப்பனேன் மாற்றையாக்கு மிவையும் வந்தணுகா" (ஷை, பூரணசந்திரன் ஆசியற்சருக்கம்-சுO) "மைந்தனு மடந்தைதானு மாற்றிடைச் சுழன்ற பெற்றி" (யசோதரகாவியம்-௬, எசு) என்பவற்றிற் கண்டுகொள்க.

இதனால், உயிர்கட்கு ஜிநதர்மமல்லது சரணில்லை என்பதாம். "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங் - காக்கமெவனோ வுயிர்க்கு" * என்றார் பிறரும். இதனுள், அறிவுடையீர் என்றது இழிபு; அறிவிலராதலால் வீட்டினை 'அவர் நினையாத' என்றார். நினையாதவும் என உம்மை வருவிக்க. (௩எ)

தொல்லற மேபடை யாவுடை யச்சுத நாயகன்றன்
னல்லற மேவியிந் நாற்கதி நீக்கிலர் தீக்கதிசேர்ந்
தல்லற மேவுவ ரென்றறைந் தாலு மறிவிலிகள்
புல்லற மேவுவர் போகத்தின் மேலுள்ள மோகத்தினே.

இ-ள். தீயமார்க்கத்தைச் சேர்ந்தாற் பாவமே வருமென்று சொன்னாலும், அறிவில்லார், எம்பிரானது திருவறத்தைச்சேர்ந்து நாற்கதியில்வரும் பாவம் போக்கமாட்டாராய்ப் போகத்திலுண்டான மயக்கத்தாலே மீளவும் அந்தந்தத் தீயமார்க்கமே பொருந்துவர்; எ-று.

இதனால், † 'கொடிறும் பேதையுங் கொண்டது விடா' என்பதாம். சுதம்—ஆகமம். நாற்கதியில் வரும் பாவம் என வருவிக்க. நாற்கதியாவன;—தேவகதி, மனுஷ்யகதி, திர்யக்கதி, நரககதி என்பன. அறமல்லாததனை அல்லறமென்றார். புல் அறம்-தீய மார்க்கம். (௩அ)

மோகங்க ளாற்சில மூர்த்திகள் கண்டது முற்றுணர்ந்தெஞ்
சோகங்க ளர்க்கு மசோகர்சொல் லாதது துன்மதிகள்.
யாகங்கள் செய்து மிருந்தசை தின்றுமீர்ங் கள்ளொடொக்கும்
போகங்க ளார்ந்துதம் மெய்யொடும் போய்ப்புகும் பொய்முத்தியே.

இ-ள். அறிவிலிகள், கொலைமுதலிய பாவமெல்லாஞ் செய்தும் கீழ்ப் போகாமல் அந்த உடம்புடனே புகுவதாகிய பொய்முத்தி, முற்றுணர்ந்தவனாலே சொல்லப்படாதது; சிற்றறிவினராகிய சில தேவர்களாலே கற்பிக்கப்பட்டது; எ-று.

இதனால், இது வீட்டுநெறியன்றென மூடம் விலக்கியதாம். ‡"நன்றாகு மாக்கம் பெரிதெனுஞ் சான்றோர்க்குக் - கொன்றாகு மாக்கங் கடை" என்றார் பிறரும். முற்றுணர்ந்தவர் என்ற வதனாலே சிற்றறிவு வருவித்தாம். கள்ளுப்

---

* திருக்குறள்-௩க.

† "கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும், படியே யாகி" என்றார் திருவாசகத்தும் (போற்றித்திருவகவல்).

‡ திருக்குறள்-௩உஅ

போலே அறிவழிக்கும் ஸ்த்ரீபோகமென்றது நாணமின்றியே அவர் விதவா கமன முதலிய செய்வன கருதி.* ஆர்ந்தும் என உம்மை வருவிக்க. (௩௯)

முத்திற் பொலிகுடை மூன்றுடை யார்க்கிரண் டின்றியொன்றும்
பத்திப் பெரும்பத மல்லதுண் டோபசி நோய்முதலாம்
புத்திக் கிலேசங்க ணீங்கிப்புக் கார்க்கென்றும் போதலில்லாச்
சித்திப் பெயர்ப்பத் தனம்புகு வார்கட்குச் செவ்வழியே.

இ-ள். சித்தியென்னும் பட்டணம் புகுவார்க்குச் செவ்விய வழி மூன்று குடையினையுடையார்மேலுண்டாகிய அன்பென்கின்ற பெரிய வழியல்லது வேறுண்டோ; எ-று.

முன்னிற் கவியிலே தீநெறி விலக்கினர்; இதனால் அருகத்பக்தியே நன்னெறியென்பது கூறப்பட்டது. இரண்டின்றி ஒன்றும் பத்தி - வேறு தெய்வமில்லை யென்கிற ஒப்பற்ற பக்தி. பதம்-வழி. போதல்-திரும்புதல். பத்தனம்-பட்டணம். செவ்வழி-செவ்விய மார்க்கம். (௪0)

வழுவதல் லாவதம் வல்லன தாங்கி வரதமற்றுங்
குழுவதெல் லாநின் றிருவுரு வாக்கொண்டு குற்றமுற்று
லழுவதல் லாதறி யாமகப் போலடி யேனுநின்னைத்
தொழுவதல் லாது முழுதுணர்ந் தாய்க்கென்கொல் சொல்லுவதே.

இ-ள். முற்றமுணர்ந்தவாதனே! யான், சரீரம் பொறுக்கவல்லனவாகிய விரதங்களைப் பொறுத்து, நினது தபோதனராகிய குழுவெல்லாம் நினது திருமேனிவடிவாகக் கைக்கொண்டு, குழவியானது தனக்கு ஒரு விதனம் வந்தபொழுது எனக்கு இன்னவிதனம்வந்ததென்றுசொல்லவுமறியாது அழுவதே அறிவதுபோல, அடியேனும் நின்னைத் தொழுவதல்லது வேண்டியது சொல்லித் தொழவுமறியேன்; எ-று.

இதனால், கவி தனது அறியாமைகூறுவதுபோலே, தவத்தியல்பு கூறியதாம். நீயே அறிவை என்பது தோன்ற 'முழுதுணர்ந்தாய்க்கு' என்றும், சரீரத்திற்கேற்ற வதமாதலால் 'வதம் வல்லனதாங்கி' என்றுங் கூறினர். வதம்-விரதம்.

---

* கள்ளுண்டல் ஸௌத்ரமணியாகத்தும், விதவாகமனம் பௌண்டரீகயாகத்தும் நிகழ்தலின், இவ்வாறு கூறப்பட்டதுபோலும்.

சொல்லார் பிறர்க்கிதஞ் சூழார் தமக்கரண் சூழ்பொருண்மேற்
*கில்லார் நசைவிடக் கேளார் திருவறங் கேள்வியினுங்
கொல்லா வதத்தெங்கள் கொற்றவன் கூறிய நற்றவத்தே
நில்லார் நிரயத்து நிற்பா னிருக்கின்ற நீசர்களே.

இ-ள், கேள்வியினுங் கொல்லாவிரதத்தையுடைய கொற்றவன் கூறிய நற்றவத்தே நில்லாராய்க் கொல்வதே துணிந்து நரகத்தே நிற்கின்ற நீசராமவர், பிறர்க்கு இதஞ்சொல்லார்; தமக்கும் அரண் விசாரியார்; தாந் தேடப்பட்ட பொருண்மேலேயுள்ள பற்றுவிடமாட்டார்; அப்பற்றுவிட ஜினதர்மங் கேளார்; எ-று.

பிறர்க்கிதஞ்சொல்வர், தமக்கும் அரண்விசாரிப்பர், அறங்கேட்பர் நல்லோராதலாலே, அச்செயல் வீட்டுநெறிக்கு விளக்கென்பது இதனாற் கூறியதாம். இதனுட் கேள்வியினுங் கொல்லாவிரதம் என்பதனால் 'கொல்வதே துணிந்து' என்று வருவித்துரைக்கப்பட்டது. உயிர்மேல் அன்பிலராதலாலே இதஞ்சொல்லாரென்றும், பொறிவேட்கையராதலாலே தமக் கரண்சூழாரென்றும், கெடுக்கிற பற்றுவிடாராதலாலே கேளாரென்றும், 'சித்திரத்திலுருவுஞ் சிதைத்தலாகாது' என்பது அறநூலாதலாற் 'கேள்வியினுங் கொல்லா வதத்தது' என்றுங் கூறினர். மாவாற் செய்த கோழியாலுங் கொலை வந்தது †யசோதரசரிதையிற் காண்க. சூழ்தல்-விசாரித்தல். நசை-ஆசை. கேள்வி-வார்த்தை. (சஉ)

---

* கில் என்பது வலியுணர்த்துவதோர் இடைச்சொல். இது வினையாய்க் கிற்பன், கில்லேன் என வருதல்போல, ஈண்டும் கில்லார் என வந்தது. சூழ் பொருண்மேல் நசைவிடக்கில்லார், சூழ்பொருண்மேல் நசைவிடத் திருவறங் கேளார் என இயைத்துரைக்க. நசைவிடக்கில்லார்-பற்றுவிடமாட்டார் என்றவாறு. நன்மையினை வல்லேனென்று செய்திலன்; தீமையினை மாட்டேனென்று தவிர்ந்திலன்; என்னும் பொருளில் "கிற்பன் கில்லேனென்றிலன்" (திருவாய்மொழி-௩.௨.௬) எனப் பெரியார் பணித்தவாற்றான் இதனை அறிக.

† யசோதரன் அவந்திநாட்டு உஞ்சையினிநகர்க்கணிருந்த ஓரரசன்; மாவினாற் கோழியுருவமைத்து, அதனைக் காளிக்குப் பலிகொடுத்ததனால் இவனும், இவனை இதுபுரிகவென்று தூண்டியதனால் இவன்தாய் சந்திரமதியும் கொலையுண்டு பின்னரும் பல இழிபிறப்பெய்தி அப்பிறப்புக்கடோறும் கொல்லப்பட்டுழன்றனர் என்பதனை இச்சரிதை விரித்துணர்த்தும். இது தமிழில் முந்நூற்றிருபது செய்யுட்களால் ஒருசிறுகாப்பியமாகமுன்னரே பாடப்பட்டுள்ளது. இது யசோதரகாவியம் எனப்படும்: இதன் பாடலிற் சில புறத்திரட்டுநூலுட் கோக்கப்பட்டுள்ளன. இற்றைக்கு முப்பத்தைந்துவருடங்கட்குமுன் நரியம்புத்தூர்ப் பாகுபலிநயினாரால் இஃது அச்சிடப்பட்டுள்ளது.

நீசா ணுமிடங் கண்டுகொண் டாய்நெஞ்ச நின்றிலங்குந்
தேசா ணுமொளி மூன்றுடை யானிரு செஞ்சுடரோ
டேய்சா ணாவிற் தங்களல் லாற்சுமக் தீன்றெடுத்த
தாய்சா ணேதந்தை தான்சா ணேநைந்து சாமவர்க்கே.

இ-ள். நெஞ்சமே! நிலைபெற்று உலகில் விளங்குகின்ற ஒளிகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற பிரபாவலயமூன்றினையுமுடையவரது இரண்டு சூரியனையொத்த பாததாமரைகளல்லாமல், கர்மபந்தத்தால் வருத்தமுற்று இறக்கின்ற மானிடர்க்குத் தாயும் தந்தையும் புகலிடங்களல்ல வாதலால், நீ, உனக்கு நல்ல புகலிட மறிந்து புகுந்தாய்; எ-று.

இதனால், தன்னெஞ்சுக்கு உறுதிகூறுவதுபோலே பிறப்பு அற்று நீங்கற்கு உபாயங்காட்டலாற் *பிறிதுமொழிதலாம், நெஞ்சம்-அண்மைவிளி. ஒளி மூன்றும் முன்னர்க் கூறினும் (உசு). ஏய்-ஒத்த. (சங)

சாமரை சங்குசிங் காசன மாசனஞ் சாதுரங்கஞ்
சோமரை வெல்சுடர் வெண்குடை நன்கொடித் துங்கமன்னர்
காமர சானவ ரத்திக ளாதல்கண் டாலுந் தொண்டர்
பூமரை மேல்வருங் கற்பக நீழற் புகுகிலரே.

இ-ள். சாமரை முதலாகத் தவளசத்திர மீறாக எண்ணப்பட்ட சிறப்பெல்லாமுடைய †ராசாதிராசரும் அந்நல்வினை நீங்கலோடும் இரக்குந் தொழிலுடையாதலைக் கண்டுவைத்தாலும், மிச்சர், இச்செல்வம் நிலையல்லவென்றறிந்து இறைவன் சொன்ன துறவறம் புகுகின்றிலர்; எ-று.

இதனால், நிலையாமைகண்டும் பற்றுவிடுகிலர் மிச்சர் என இரங்கியதாம். மாசனம்-மந்திரி புரோகிதர் முதலியோர். அத்திகளாதல் - இறக்குந்தொழிலினராதல்; எலும்பாதலுமாம். "யானை யெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்-சேனைத் தலைவராய்ச் சென்றோரு-மேனை, வினையுலப்ப வேறாகி வீழ்வர் தாங்கொண்ட, மனையாளை மாற்றார் கொள" ‡ என்றார் பிறரும். இறைவனைக் கற்பகமென்று உருவகஞ்செய்ததனாலே, துறவறத்தை, அதற்கேற்ப நிழல் என்றார். (சச)

---

* இஃது ஓரலங்காரம். இதனைப் "பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ் - சால மிகுத்துப் பெயின்" (திருக்குறள்-சஎரு) என்பதற்குப் பரிமேலழகர் உரைத்தவாற்றான் உணர்க.

† துங்கமன்னர் காம் அரசானவர்-உயர்வாகிய வேந்தர்கள் இச்சிக்கின்ற அரசர்; இதனாற் போந்தபொருள் ராசாதிராசர் என்பது.

‡ நாலடியார்-௩.

புகாநின்ற ஞாயிறு போகின்ற செல்வமும் போம்புனலுட்
டொகாநின்ற தூய்மண லொக்கின்ற சுற்றமுஞ் சோர்ந்திளமை
யுகாநின்ற மேனியு மேலுத வாவென் றுனையடைந்தே
னகாநின்ற தாமரை மேனடந் தேகிய நற்றவனே.

இ-ள். எழுந்துவிழுகின்ற ஞாயிறுபோலத் தோன்றிமறைகின்ற செல்வமும், யாறிடுமணல்போலே வேறுபட்டசுற்றமும், கணந்தோறும் இளமை கெடுவதாகிய உடம்பும் உயிர்போம்பொழுது கூடவாரா என்று உனது திருவடிகளை அடைந்தேன்; நற்றவனே ! எ-று.

இதனால், சரணடைவார்போலே நிலையாமைகூறியதாம். ஞாயிறுபோல என உவமை வருவிக்க. ஆற்றுவெள்ளத்தால் ஓரிடத்தில் மேடிடப்பட்ட மணற்கூட்டம், அற்றைநாளே அவ்விடத்தைவிட்டு மற்றோரிடத்தை மேடாக்கலும் அவ்விடத்தை வேறிடத்துமணற்குவை வந்து மேடாக்கலுமாகிய நிலையாமைபோல, ஒருபிறப்பின்கண்ணே ஒருவற்கு உறவினராயிருந்தோர் இறந்து பிறந்து மற்றொருவற்கு உறவினராதலும் மற்றொருவற்கு உறவினரானோர் அவ்வாறே முன்சொன்னவனுக்கு உறவினராதலும் இயல்பாதலால் 'மணலொக்கின்ற சுற்றமும்' என்றார். நகாநின்ற — ஒளிவிடாநின்ற. (சரு)

நற்றவர்க் குச்சித்தி நல்கவல் லார்க்கிரு நால்வினையுஞ்
செற்றவர்க் குச்செய்ய தாமரை யேறிச்செவ் வேநடக்கக்
கற்றவர்க் குக்குரு டொத்துழல் வேற்குநற் காட்சிதந்த
மற்றவர்க் குச்செய்வ தாளல்ல தேதுங்கைம் மாறிலையே.

இ-ள். நல்ல தவத்தைச் செய்பவர்க்கு மோக்ஷத்தைக் கொடுக்கவல்லவரும் எண்வகைவினைகளையும் வென்றோருமாகிய சித்தபரமர்க்கும், தாமரைப்பூவின்மேல் நின்ற அருகபரமர்க்கும், பிறவிக்குருடையொத்து மித்தியாமார்க்கத்தே நின்ற எனக்கும் நல்ல காட்சிதந்த ஆசாரியர்முதல் மூவர்க்கும் ஆட்படுதலல்லது உலகம் செய்யும் கைம்மாறு வேறுண்டோ; எ-று.

இதனால், பஞ்சபரமேஷ்டிகளது ஸ்வரூபங் கேட்டோன் மிச்சநீங்கியபின் அவர்களைப் புகழ்ந்ததாம்: செற்றவர்க்கும், கற்றவர்க்கும், மற்றவர்க்குமென உம்மை வருவிக்க. எண்வினையும் செற்றவற்கு என்றவதனால் ஸித்தராயிற்று. மற்றவர் என்னும் பன்மையாலே ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னு மூவர்க்குமாயிற்று. காட்சி-தரிசனம். (சசு)

மாறு மனங்கொண்டு வானோர் தொழும்பிண்டி வாமன்மெய்ந் நூ
றேறு தொழிந்த சிறுமா னிடரென்ப தீமுதலாய்
நூறு யிரங்கொலை நோனு தெழுந்து விழுந்தொருகா
லாறு நெடுந் துய ரேழா நரக* மடைபவரே.

இ-ள். தீயிலிடுவது முதலாக நூறுயிரம்விதம் நரகர் வருத்துவது பொறுக்கமாட்டாராய், எழுந்தும் விழுந்தும் ஒருபொழுதும் ஒழியாத துயரத்தை யுடைய நரகத்தை அடைந்தவரை, அருகபரமேசுவரனால் அருளிச்செய்யப் பட்ட பரமாகமந் தெளியாதவர் என்று சொல்லுவர்; எ-று.

இதனால், மிச்ச நீங்கிய யான் அந்த நரகிற் புகுதேன் என்றவாறு. மாறு மனம்—இடைவிடாமனம். நோனுமை—பொறுமை. கொலை—வருத்தம். (௪௭)

அடையு மவருமை யெண்கண் டடைகுவ ராசனமுங்
குடையு முதலிய விண்ணோர் குயிற்றிய கொய்சகஞ்சே
ருடையு மறுசுவை யூணுமொண் பூணுமொண் ணுரைவெல்லும்
படையும் படைவிழி யாருமில் லாத பரம்பரரே.

இ-ள். ஆசனமுங் குடையுமுதலிய தேவர்களாற் செய்யப்பட்ட எண் சிறப்புக்களையுடைய பரம்பரரே! உடை முதலாக மகளிரீறாக மனிதர் துய்க்குஞ் சிற்றின்பமில்லாத உம்மை எந்நூல்கேட்டு உமதுபெருமையறிந் தடையுமவர் அடைவர்; எ-று.

இதனால், ஊசிக்குழையில் ஆகாசங்காணலாமோ என்பதாம். கண்டு என் பதனுள் என்ன நூல் கண்டு என வருவிக்க: கண்டு-கேட்டு; "காணு-யிளம்பிறை யாயக்கால்" என்றாராகலின். இன்னுங் கண்டு என்பதனை என்ன செல்வங் கண்டு என்று சொல்லித் திகம்பராதலாற் பழிப்பதுபோலப் புகழ்தலுமாம். குயிற்றிய என்னும் பெயரெச்சம் பரம்பரர் என்னும் பெயர்கொண்டது. பரம் பரர் என்பது எல்லார்க்கும் மேலாயுள்ளவரென்பதாம். குயிற்றுதல்-பண்ணல். கொய்சகஞ்சேருடை-பெண்ணுடை. படைவிழியாருமில்லாத என்னும் பெய ரெச்சம் உம்மை என்னும் பெயர்கொண்டது. (௪௮)

---

* ஏழாம் நரகம்-தமத்தமப்பிரபை என்பது; இதனை 'இருளினிருளிருள்' என்பர் **நீலகேசித்தெருட்டுடையார்** (தருமவுரைச்சருக்கம்-௪௮). நரகம் ஏழின் பெயரினையும் "செறியச் சொன்ன பொருடெளிந்தார்" என்னுஞ் சிந் தாமணியுரையில் (முத்தி—௨௧௧) **நச்சினார்க்கினியர்** கூறியதனால் உணர்க.

பரம்பற்றி நீங்கவொட் டாவினைப் பாசமெய்ப் பாவனைவா
ளரம்பற்றி யீர்ந்தடி யேனுய்யப் போம்வண்ண மைவகைப்பூஞ்
சரம்பற்றி னன்வலி சாய்வித்த வீரனைத் தன்புகழ்போல்
வரம்பற்ற ஞானியை மாசற்ற சோதியை வந்திப்பனே.

**இ-ள்.** காமனை வென்ற வீரனை, ஞானியை, சோதியை அடியேன் வணங்குகின்றது யாதுகாரணமென்னில்;—மேலாயுள்ள குணங்களை யானும் பற்றி, என்னை ஒருகாலும் பிரியவொட்டாத வினையாகிய இரும்பை உண்மைத் தியானமாய வாளரத்தைப்பற்றி யறுத்துப்போகட்டுப் பிழைத்துப்போம்படி; **எ-று.**

முன்னிற்கவியில் இறைவனையடையாக் கீழோரைக் காட்டி, இதனால் அவனையடைந்து வினை வெல்வேனென வியந்ததாம். வினையோர் பெண்வலைப் பட்டனராதலின் இறைவனை வீரனென்றார். பரம்—மேல். அரம் என்றதனாலே இரும்பு வருவித்தாம். **(சக)**

வந்திக்க வும்புகழ் வாழ்த்தவுந் தாழ்த்தில வானமெல்லாங்
கந்திக்க மேற்கொள்ளுங் கார்க்கம லத்தெந்தை தாட்கமலஞ்
சிந்தித் தலும்பண்டைத் தீப்பரி ணாமத்துத் தீவினையாற்
பந்தித் தவைபண்டை நுண்டுக ளாகிப் பறந்தனவே.

**இ-ள்.** வாழ்த்தவும், வணங்கவும் தாழ்க்கத்தக்கவல்லவாய் ஆகாயமெங்கும் பரிமளிக்கக் குளிர்ந்த தாமரைப்பூவை மேற்கொள்ளும் எந்தை தாளாகிய தாமரைப்பூவை யான் தியானித்தவுடன், அநாதியில் மித்தியாபரிணமத்தாலுண் டாகிய தீவினை எந்த முறையே கட்டின, அந்த முறையே நீங்கின; **எ-று.**

இதனால், வாழ்த்து வணக்க மிரண்டினிற் றியானமே வலியுடைத்தென்ற வாறு. கந்தித்தல்—பரிமளித்தல். கார்க்கமலம்—குளிர்ந்த தாமரை. பந்தித்தல்—கட்டல். **(ருo)**

பறந்துபுக் குப்பா வாதிக ணெண்ணும் படுநரகுன்
னறந்தலைப் பட்டவர் கட்கடைத் தேநிற்கு மார்வமுள்ளிட்
டிறந்தமுக் குற்றத்தெம் மீசநின் னேயர்கட் கென்றெதிரே
திறந்துநிற் குஞ்சித்தி நன்னகர் வாயிற் றிருக்கதவே.

**இ-ள்.** ஈசனே! விரையச்சென்றுபுக்குப் பரசமயிகள் நெருங்குகின்ற கொடிய நரகமானது, உனது ஸ்ரீதர்மத்திலே வந்து தலைப்பட்டவர் புகுதாமல்

அடைத்துக்கிடவாநிற்கும்; உனது அன்பர்க்கென்றுசொல்லி எதிரே திறந்து நிற்கும், சித்தியென்ற நல்ல திருநகரவாயிலில் உளதாகிய அழகிய கதவு; எ-று.

இதனால், பரவாதிகட்கு நரகின்றிறப்பும், வீட்டினடைப்புங் காட்ட வேண்டி, அறத்துள்ளார்க்கு அவற்றின் அடைப்பும் திறப்பும் கூறியதாம். பறத்தல்-விரைதல். ஆர்வம்-ஆசை. இறந்த முக்குற்றம்-வடநூல்வழக்கு. (ருக)

கதமொழி தீர்மின் கறுவுக டேய்மின் கருணைநெஞ்சோ
டிதமொழி கூறுமி னின்னுயி ரோம்புமி னெப்பொழுதுஞ்
சுதமொழி கேண்மின் சுகமிக வேண்டிற் றுறவர்சொன்ன
வதமொழி யேன்மி னிவைசின னார்திரு வாய்மொழியே.

இ-ள். அறிவுடையீர்! எக்காலத்தும் பேரின்பம்வேண்டின், சினத்தோடேகூடிய மொழிகளைத் தவிர்விராமின்; அதற்குக் காரணமான குறிப்பையும் சுருக்குவிராமின்; கருணைகூடிய மனத்துடனே பிறர்க்கிதமான வார்த்தைகளைச் சொல்லுவிராமின்; உயிர்க்கொலை தவிர்விராமின்; பரமாகமத்தைக் கேட்பிராமின்; விரதங்களைப் பொருந்துவிராமின்; இவை ஜிநேசுரனது திருவாக்கால் அருளிச்செய்யப்பட்டனவாம்; எ-று.

இதனால், யான் சொன்னதென்று இகழற்கவெண வினைநீங்குங் கருவி கூறியதாம். இதனுள் அறிவுடையீர் என்பது சொல்லெச்சம். கதம்-கோபம். தேய்த்தல்-சுருக்கல். கறுவு-சினக்குறிப்பு. சுதம்-பரமாகமம். வதம்-விரதம். எப்பொழுதும் என்பதனை மத்திமதீபமாக்கி எங்குங் கூட்டுக. (ருஉ)

மொழித்தே னியம்பு மூடர்சொற் கொண்டு முனிவன்மெய்ந்நூல்
பழித்தேன் மயரிகள் சொற்பொருட் கொண்டுமைப் பானலன்ன
விழித்தே னெழுங்குர லார்க்கிடர் கொண்டு விலங்குகள்போற்
கழித்தேன் மதிமந்த மாயே யருமந்த காலத்தையே.

இ-ள். மூடர்சொற்பொருளைக் கைக்கொண்டு பரமாகமப்பொருளை இத்தனைநாளும் பழித்துவிட்டேன்; காமுகர்சொற்பொருளைக் கைக்கொண்டு விழியினையுங் குழலினையுமுடைய மகளிர்பொருட்டு வருத்தமுற்றுப் புத்திமீனாய் அருமந்தகாலத்தைக் கழித்துவிட்டேன்; எ-று.

இதனால், உண்மைதெரிந்தவர் வெண்மைசெய்வரோ என்பதாம். கழித்தென்பதனால் இத்தனைநாள் என்பது குறிப்பால் வந்தது. மூடர் சொல்லுகிற விஷயங்கள் செய்தற்கெளியனவாதலால் 'மொழித்தேன்' என்றும், அவையும் நெறிவிலக்காயிருத்தலால் அவற்றைச் சொன்னவர்களை மூடர்களென்றுங் கூறினார். முழுமூடர் என்பது மும்மூடர் எனத் திரிந்தது. முனிவன்-ஜிநேசுவரன்.

மயரிகள்-காமநூலியர். மயரிகள் சொற்பொருள் கொள்ளுதல்:—முற்றிழை முலையார் முலைமுக டழுந்தக்—கைத்தல மிரண்டிற் களிப்புறத் தழீஇ-வாயமுதுண்டுபல் வகையிற் புணர்ந்து—நாளொரு கணமென நண்ண வாழ்தலே—வீடடையுநெறியென்றுகொள்ளுதலாம். பானல்-நீலோற்பலம். முறையழித்தலால் விலங்கென்றார். (ருங)

காலங் கழிதொறுங் கோலங் கழியக் கறுத்தகுஞ்சி
நீலங் கழிதா நீருங் கழிதிர் நிருமலன்றண்
மூலங் கழிதல்செய் யாதுய்ம்மி னென்னினு மூர்க்கர்ந்தோ
வேலங் கழிவிழி யார்வலைக் கேபட்டு வீடுவரே.

இ-ள். நமதுநாட் கழியுந்தோறும் நமதழகுங் கழிய, மயிர் கறுப்புப் போய் வெளுப்ப, நீரும் இறந்துபோகின்றீர்; நிருமலனது திருவடிகளாகிய மூலங்களை விட்டுநீங்காதே பற்றிப் பிழைத்துப்போமின் என்று கூறினும், அந்தோ மூர்க்கர்கள் வேலைத்தோற்பித்த விழியினையுடையார்வலைக்கேபட்டிறந்துபோவர்; எ-று.

இதனால், புல்லறிவினரை அறிவுகொளுத்தல் யார்க்கும் அரிதென்பதாம்; *"காணுதாற் காட்டுவான் றான்காணான் காணுதான், கண்டானுந் தான்கண்டவாறு" என்றாராகலின். கோலமும் என உம்மை வருவிக்க. வேலம்-அம் சாரியை. கழி விழி-தோற்பித்த விழி. (ருச)

வீடும் வினைகளின் பந்தமு மெய்ம்மை விரித்துரைத்த
நீடு மலர்ப்பிண்டி நின்மல நின்மலர்ப் பாதநன்னீ
ராடு மவர்க்கர மங்கைய ராடுவ ரண்ணனின்சீர்
பாடு மவரையிம் மூவுல கோர்களும் பாடுவரே.

இ-ள். வினைகள் விடும்படியையும், அவைகள் ஆத்துமாவினிடத்தே கட்டும்படியையும் உண்மையாக விரித்துச்சொன்ன நின்மலனே! நினது திருவடிவிளக்கியதீர்த்தந் தெளித்துக்கொள்ளுமவர்க்குத் தெய்வமகளிர் ஆடாநிற்பர்; நின்புகழைத் துதிக்குமவர்களை இம்மூவுலகி லிந்திரரும் துதியாநிற்பர்; எ-று.

அறங்கேளார் துன்பம் முன்னிற் கூறி, இதனால் அது கேட்டாரது இன்பங் கூறியதாம். பந்தம்-கட்டு. மெய்ம்மை-உண்மை. நீடுமலர்-அதிசயத்தால் எக்காலத்தும் உளதாகிய பூ. அண்ணல்-பெயர். (ருரு)

---

*திருக்குறள்—அ௪கூ.

பாடுவ னேசில பாதகத் தேவரைப் பன்னெறிமே
லோடுவ னேநின் னொருநெறி கண்டுபண் டுன்னையுன்னா
வேடுவ னேனின் னறத்தினை வித்தி விளைத்துணப்பெற்
றாடுவ னேயின்னு மாருயிர் வேட்டை யதிசயனே.

இ-ள். மூன்றதிசயங்களையுடைய ஸ்வாமியே! நின்னைப்பாடின நாவாலே சில வஞ்சகத்தேவரையும் பாடுவனே; நின் ஒருவழிப்பட்ட சன்மார்க்கத்தைக் கண்டும் பலவகைப்பட்ட மார்க்கத்தின்மேற் செல்லுவனே; யான் முன்பு உன்னைக் கருதாத வேடனையொப்பக் கொலைபுரிந்தேனாயினும் நினது ஸ்ரீ தர்மத்தை விளைவித்து அதனை நுகரப்பெற்றும் உயிர்க்கொலைபுரிவனே; எ-று.

இதனால், விளக்கைப்பிடித்துக் கிணற்றில்விழுவேனோ; இனி அவை செய்யேன் எனத் திட்பங்கூறியதாம். பரமாகமங்கேட்டோன் கொலைபுரி யான் என்பது தோன்ற 'வேட்டையாடுவனே' என்றார். வேட்டை-கொலை. மூன்றதிசயமாவன;—ஸஹஜாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தைவீகாதிசயம் என்பன. (கூசு)

அதிசோக மோட யலர்களைப் போலநின் கூற்றம்வந்தால்
மதிசோர் தரமயங் கிக்கிட வோமலர் மேனடந்தார்
துதிசே ரிணையடி யாந்துணை யோடவர் தொல்லறமாம்
பொதிசோ றுடைய மிடையோ மினித்தனிப் போநெறிக்கே.

இ-ள். உலகிலுள்ள ஞானமற்ற அங்கியர்களைப்போலே அவர் சொல் லுகின்ற கூற்றம் வந்தால் மரணபயமுற்று அறிவிழந்துகிடவோம்; மலர்மே னடந்தார் இணையடியாகிய துணையோடே அவர்திருவறமாகிய பொதி சோறுடையோம்; ஆதலால் தனிப்போநெறிக்கு வருந்தோம்; எ-று.

இதனால், உடம்பின் பயன் பெற்றேம் என்பதாம்; * "உடம்பின் பயன் கொண்டார் கூற்றம் - வருங்கால் பரிவ திலர்" என்றாராகலின். அடுதல்-சொல்லுதல். (கூஎ)

நெறிச்சென் றொருவண்ண நின்னற மாகிய நீணிலைச்செந்
தறித்தங் கியவென் மனத்தனி யானை தளைபரிந்தைம்
பொறிப்பன்றி யோடைம் புலன்களும் புக்கழி யாமலின்னுங்
குறிக்கொண் டருளுக கண் டாய்பிண்டி நீழற் குணதரனே.

இ-ள். குணங்களைத் தரித்தவனே! பரமதமாகிய நிலைபெறாத கொடு நெறியெங்குந் தமோறி, ஒருபடியாக நின்ற திருவறமான நன்றாகி நீண்டு

---

* நாலடியார், அறன்வலியுறுத்தல்—க.

நிலைபெற்றுச் செவ்விதாயிருக்கிற கீர்த்தியுடனே வந்துசேர்ந்த என்னுடைய மனமாகிய தனியானையானது தளையையறுத்து ஐந்துபொறியாகிய பன்றியுடனேகூட ஐந்துவிஷயமாகிய கழனிகளிலும் புகுந்து விரதங்களாகிய பயிரை அழியாதபடி இன்னமுங் குறிக்கொண்டு காப்பாயாக; எ-று.

இதனால், அறைபோய நெஞ்சினர்க்கு விரதமில்லை என்பதாம். முன்னுங்கொடுத்தது அதுவேயாதலால் 'இன்னமும்' என்றார். நிலைபெற்றுச் செவ்விதாகிய தறி என்பதனாலே நிலைபெறாத கொடுநெறி வருவித்தாம். தளை-விலங்கு. பரிதல்-அறுத்தல். (௫அ)

குணதா ரேமுனி மங்கைய ரேகொலை நேர்விலங்கே
பணதா ரேமுத ளூற்சுர ரேயவர் பாவையரோ
டணதரு நேமி யாதன ரேயன வாறிருமாக்
கணதா ரேறுசெந் தாமரை காணெங் கருந்தலையே.

இ-ள். முனிவரர், ஆர்யாங்கனைகள், கொலையைவிடவுடன்பட்ட விலங்குஜாதி, பவணர் முதலான நால்வகைத்தேவர், அவரது மனைவியர், சக்கரவர்த்தி என வுலகிற் சொல்லப்பட்ட பன்னிரண்டுகணமுஞ் சூழ்ந்த அருகத்தேவர் ஏறுகின்ற தாமரைப்பூவாம்; பிறரேறுகின்றதன்று என்னுடைய பெரிய தலையானது; எ-று.

இதனால், யான் பிறரை வணங்கேன் என்றதாம். குணங்களைத் தரித்தலால் அது முனிவர்க்குப் பெயராயிற்று. நேர்தல் - உடம்பாடு. மானத்தம்பங் காண்டலோடு மானகஷாயம் விடுதலாலே 'நேர்விலங்கு' என்றார். கொலைவிட என வருவிக்க. எகார மாறும் எண். அணதரு அரதனர்—நல்வினைதானேயாகையாலே கிட்டப்பட்ட சக்கரத்தினத்தையுடையர். அணவல் - கிட்டல். கருமை - பெருமை. (௫௬)

கருந்திரை காணினும் வெண்ணரை காணினுங் காட்சியுள்ளிட்
டருந்திர யந்தந்த வண்ணலைக் காண்கில ரார்கலிவாய்
வருந்திரை யோய்வதும் போம்புனன் மாய்வது மாத்திரையிற்
பருந்திரை கொள்ளமெய் வீழ்வது காணும் பளகர்களே.

இ-ள். தமது மேனி திரைபுகக் கண்டாலும் நரைபுகக் கண்டாலும் காட்சி முதலிய ரத்நத்ரயத்தை அருளிச்செய்த ஸ்வாமியைக் காணுதற்கு வேண்டிய முயற்சி செய்கின்றாரில்லை; கடலினின்று வருகின்ற திரை கரையருகே வந்தோய்வதும், பிரவாஹமாகப் போகின்ற ஜலம் போகப் போகச் சுருங்குவதும் போல, இறக்கின்ற தமதுடம்பைக் காண்கின்ற மூடர்கள்; எ-று.

இதனால், அவர் அறங் கேட்டாராயின் நிற்கின்றது அறமேயென்று கடைப்பிடிப்பர் என்பதாம். காட்சி-ஸம்யக்தர்சனம். அருந்திரயம்—பெறுதற்கரிய ரத்நத்ரயம். ஸ்வாமியைக் காண்டற்கு வேண்டும் முயற்சியாவது-காட்சி முதலிய ரத்நத்ரயத்தைக் கேட்டல். ஆர்கலி-கடல். மாய்வதும்போல என உவமை வருவிக்க. பளகர்-மூடர். (௬௦)

பளகரெல் லாமனைப் பாரம் பரித்தனர் பல்வினைக்கே
யுளகரெல் லாமொத்தொவ் வாநெறி நின்றன ரோடரிக்கண்
ணளகமெல் லோதியர்க் கார்வமில் லாவற வேந்தவந்தச்
சளகரல் லாத சதுரர்நின் வேடந் தரித்தனரே.

இ-ள். அறவேந்தனே! நீ தரித்த வேடத்தை ஒப்புக்கொண்டு மகளிர்மேற் பற்றிலராய் வீடுசேருஞ் சதுரர் துறவறமே தரித்தனர்; அதனை மேற்கொண்டு மகளிர்மேற் பற்றுவிடாராய்ப் பளகர் இல்லறமே பூண்டனர்; அதுநிற்க, பல் வினைக்குமுள்ளான மிச்சத்தர் இவ்விரண்டறத்திற்கும் ஒவ்வாநெறி நின்றனர்; எ-று.

இதனால், அணிமையில் வீடுசேர்வாரையும், சேய்மையில் வீடுசேர்வாரையும், ஸம்ஸார ஜீவனையும் விளக்கியதாம். நின்வேடத்தை ஒத்துப் பற்றில்லார் துறவுற்றனர் என்றவாறு. பற்றுள்ளார் ஒத்து இல்லறநின்றனரென்றும், வினைக்குள்ளானவர் ஒவ்வாநெறி நின்றனரென்றுங் கூட்டுக. பரித்தல்-தரித்தல். உளகர்-உள்ளானவர். ஒவ்வாநெறி-மித்தியாமார்க்கம். சளகர்-இட்டளர்; மகளிராயிற்று; "ஆதி நளன்சளனென் றுருரைத்தார்" என்றாராகலின். (௬௧)

வேடந் தரித்து விதியந் தரிக்க வொழுகிமெய்நூற்
பாடந் தரித்துண்மை பாரா முனிவரிற் பாயரிமான்
பீடந் தரிக்க விருந்தபெம் மானறம் பேணலின்றி
மூடந் தரித்தெண் மயத்துநின் றார்நல்லர் மும்மடியே.

இ-ள். தவவேடத்தைத் தரித்துச் செய்யவேண்டிய கருமமானது பேதிக்க நடந்து, பரமாகமத்தை ஓதியுணர்ந்து உண்மைப்பொருளைத்தெளியாத முனிவரைக்காட்டிலும், அருகபரமாத ஸ்ரீதர்மத்தைக் காவாமல் மூவகை மூடத்தையுந் தரித்து எண்வகைச்செருக்கில் நின்றவர்கள் மூன்றத்தனை நல்லவராவார்கள்; எ-று.

இதனால், விளக்கைப்பிடித்துக் கிணற்றில் விழுகின்றார்; இவரே தறுகணர் எனக் கூடாவொழுக்கங் கூறியதாம். * "நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல்

* திருக்குறள்—௨௭௬.

வஞ்சித்து- வாழ்வாரின் வன்கணாரில்" என்றார் பிறரும். அந்தரித்தல்-பேதித்தல். அரிமான்-சிங்கம். மூவகை மூடமாவன:— உலோகமூடம், தேவதாமூடம், பாஷண்டமூடம் என்பன. எண்வகைச்செருக்காவன ;—பிறப்பு, குலம், வலி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு என்பனவாம். (௬௨)

மும்மடி சூழ்ந்த முழுவொளி நாத ரெழுஞ்சுடருக்
கம்மடி நல்ல வடியிணை தாங்கினு நண்ணுதற்குத்
தம்மடி யேன்மனம் போலவற் றோதலை மீதுகொள்ள
வம்மடி கேளென்ன மாட்டா முளரி மதுமலரே.

இ-ள். சிரசின்மேல் தாங்கிக்கொள்ள ஸ்வாமிகளே வாரீர் என்று சொல்ல மாட்டாத தேன்றங்கிய தாமரைமலரானது, மூன்றுமடிப்பாக வளைந்த முழுவொளியாகிய பிரபாவலயத்தையுடைய ஸ்வாமியினது உதயபாநுவிலும் ஒளிமிகுந்த திருவடிகளைச் சுமக்கினும் அடியேனது மனம்போல நண்ணுதற்கு வலிமையுடையதோ; எ-று.

இதனால், தாமரையினுஞ் சிறந்தது தன் மனம் என்பதாம். தம்-அசை, வற்றோ-வல்லதோ. வம்மின் என்பது வம் எனக் குறைந்தது. முளரி-தாமரை. (௬௩)

மலங்தோய் வயிறுமம் மாநர கங்களு மண்ணும்விண்ணுங்
கலந்தே கிடந்த வுலகொரு மூன்றுங் கவர்தருமைம்
புலந்தோய் பொறியுடைப் பொய்த்தேவர் கள்புன் னெறிகளும்புக்
கலைந்தே னரசிந்த வூர்தி யினியென்னை யஞ்சலென்னே.

இ-ள். பொய்த்தேவர்களது புல்லியமார்க்கம்புக்கு, அதனால் மக்கள், தேவர், நரகர், விலங்கென்னும் நாற்கதியிலும் கலந்து வருந்தினேன்; அது போதும்; இனியேனும் அஞ்சாதேகொள் என்னவேண்டும்; எ-று.

இதனால் மிச்சநீங்க வினைநீங்கும் என்பதாம். மலங்தோய் வயிறு என்றதனாலே மக்கட்கதியும், மண்ணென் றதனாலே விலங்குகதியும், விண்ணென்றதனாலே தேவகதியுமாயிற்று. புன்னெறிகளும் என்பதில் உம்மை அசை. கலந்து அலைந்தேன் என்க. உலகொருமூன்றுங் கவர்தரு பொறியுடைத்தேவர் என்றது அவரும் அவ்விந்திரியவயப்பட்டவர் என்பதாம். (௬௪)

என்னையிம் மண்ணுலகை கத்தோ ரியற்கை யிறைவால்லாத்
துன்னய வாதிகள் சொற்பொரு ணம்புவர் தூமணிசேர்
பொன்னெயின் மன்னிய புங்கவ வங்கவர் பொய்ம்மைகண்டும்
பின்னையு நின்னறந் தேறார் கிடந்து பிணங்குவரே.

இ-ள். நிலைபெறாத துன்பமார்க்கத்தோரது பொய்ம்மையைக் கண்டு வைத்தும் அவராற் சொல்லப்பட்ட பொருளையே நம்புவர்: நினது திருவறத்தின் மெய்ம்மை கண்டுவைத்தும் அதனை நம்பாராய்ப் பிணங்காநிற்பர்; இதற்குக் காரணம் யாதோ சொல்லாய்; எ-று.

இதனால், கதிக்கேற்ற மதியன்றோ எய்துவது என்பதாம். நிலைபெற்றவன் என்றதனால் நிலைபெறாமையும், பொய்ம்மை என்றதனால் மெய்ம்மையும் வருவித்தாம். மன்னுதல்—நிலைபெறுதல். கொலை, பொய், களவு, பிறர்மனை விழைதல் முதலிய நினது நூல் விலக்கிய செய்தோரை இம்மையிலே அரசர் தண்டிப்பக்காண்டலிற் 'கண்டுந் தேறார்' என்றார். (௬௫)

பிணங்கோ மெவரொடும் பேரொன் றிநன்றம் பேர்படைத்துங்
குணங்கோ டியகுப தக்கொடுந் தேவர்தங் கோயில்கண்டால்
வணங்கோ மனங்கொண்டு வாழ்த்து கிலோமவர் மானிடரோ
டிணங்கோ மெழுமையு மென்கட வோமவ் விருவினைக்கே.

இதன் பொருள் வெளிப்படை. இதனால் நன்மைசெய்தவர் தீமை பெறுவரோ என்பதாம். கல்லெனபது ரத்தினத்துக்கும் கருங்கல்லுக்கும் பெயராதலாலே, பெயராற் பயனில்லை என்பது தோன்றப் 'பேர்படைத்துங் குணங்கோடிய' என்றார். பிணங்குதல்-மாறுபடுதல். குபதர்—தீநெறியோர். அவர் மானிடர்-அம் மித்தியாதேவதைகளுடைய அடியார். இருவினை—நல்வினை, தீவினை. என்கடவோம்—என்ன கடப்பாடுடையோம். (௬௬)

இருவினை வேலை யொருவினை நீயெரி சேர்புரிபோ
லுருவினை யேனு மருவினை நீயொரு வர்க்குமில்லாத்
திருவினை நீயெண் டிசைமுக னீசிறந் தோங்குபிண்டித்
தருவினை நீயருட் சக்கர மேந்திய சங்கரனே.

இ-ள். நல்வினை தீவினையாகிய கடலைக் கடந்தவனும் நீ, வெந்த வைப்புரிபோலே உருவத்தையுடையையாயினும் விந்தராமவரும் நீ; கேவல லக்ஷ்மியையுடையவனும் நீ; அதிசயத்தாலே திசைமுகனும் நீ; அசோகவிருக்ஷத்தையுடையவனும் நீ; ஆதலாலே எல்லாம் நீயாய் இருந்தாய்; எ-று.

மூன்னிற்கவியிற் பெயர்மாத்திரை அவர்க்கு என்றார்; இதனால் அருகனை, மும்மூர்த்திகளும் பிறரும் நீயெனப் புகழ்ந்ததாம். *"ஆவே றுருவின வாயினு மாபயந்த—பால்வே றுருவின வல்லவாம்—பால்போ, லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ—லுருவு பலகொள வீங்கு" என்றாராகலின். இதனுள், ஆசிரையா

*நாலடியார், மெய்ம்மை—அ.

னென்றும், தசாவதாரனென்றும் அவர் கூறுதலாலே பிறர் பவமுடையார் என்பது தோன்ற 'இருவினை வென்றவன்' என்றும், அருகரே வித்தாரமவர் என்பது தோன்ற 'உருவினையேனு மருவினை' என்றும், கேவலத்திரு பிறர்க்கில்லாமையாலே 'ஒருவர்க்குமில்லாத் திருவினை' என்றும், அவன் காமத்தா லெண்ணப்படாமல் இழிப்புண்டவனுதலாலே இவனெண்ணப்பட்ட திசைமுகனென்றும், அவன் கொல்லுஞ் சக்கரத்தனுதலாலே இவன் சுகத்தைப்பண்ணுஞ் சக்கரனென்பது தோன்ற 'அருட்சக்கரமேந்திய சங்கரன்' என்றும் கூறினார். ஒருவுதல்—கடத்தல். சங்கரன் - சுகத்தைப்பண்ணுமவன். (சுஎ)

சங்கையஞ் சார்தளர் நோய்க்கிடை யார்தழல் போல்விழித்து
வெங்கயஞ் சாரினு மெய்ந்நடுங் கார்களை யார்களபக்
கொங்கையஞ் சாயலர் கோலநம் பார்வருங் கூற்றமுட்கார்
பங்கயஞ் சார்பத பங்கபத் தாளடிப் பத்தர்களே.

இ-ள். மித்தியாதேவதைக்கும், பிணிக்கும், கொல்யானைக்கும், யமனுக்கும் பயப்படார்; மகளிர் கோலங்கண்டு நம்பார்; ஜினதர்மத்துள்ளார்; எ-று.

இதனுல், மெய்யிற் பிறரில்லாராதலாலே தமக்குற்ற நோயைப் பொறுத்தலே தவமென்று பொறுப்பரென்பதாம். *'உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு' என்ருர் பிறருமெனக் கொள்க. வழிபடாக்கால் இடையூறுசெய்யுமெனினும் அதற்கஞ்சி வழிபடாராதலாலே 'சங்கையஞ்சார்' என்ருர். சங்கை-மித்தியாத்வம். 'நோவு செய்திடு நோய்பல வாக்கிடு-மாவி கொள்ளு மலாதன வுஞ்செயுந்-தேவி சிந்தை சிதைந்தனள் சீறுமேற்-காவன் மன்ன கடிதெழு கென்றனன்' † என்றதனுற் காண்க. கயம்-யானை. களபம்-சந்தனச்சேறு. உடலை ‡உட்புறம்பாக நோக்கி அசுசித்துவம் பாவிப்பதல்லது §கருந்தோலாற் கண்விளக்கப்படார் என்பது தோன்றக் 'கோலநம்பார்' என்றும், ¶உடம்பின் பயன் கொண்டவராதலாலே 'கூற்றமுட்கார்' என்றுங் கூறினார். நம்பல்-விருப்பம். (சுஅ)

---

* திருக்குறள்—உசுக.

† யசோதரகாவியம்—கசு.

‡ "பைம்மறியாப்பார்க்கப்படும்" என்பது நாலடி, தூய்தன்மை. உ.

§ "கருந்தோலாற் கண்விளக்கப்பட்டு" ஷை ஷை எ.

¶ "......உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்,
'வருங்காற் பரிவ திலர்"

ஷை, அறன்வலியுறுத்தல்-ரு.

பத்தர்நற் சித்தனைப் பன்னிரண் டோசனைப் பொன்னெயில்சே
ரத்தனைப் பண்டறி யாமையில் யானனந் தம்முயிர்கட்
கெத்தனை தந்தையுந் தாயரு மாயின னின்றெனக்கே
யெத்தனை தந்தையுந் தாயரு மானரென் றெண்ணுவனே.

**இ-ள்.** அன்பர் மனத்துள்ளும் பொன்னெயிலுள்ளுமிருந்த சுவாமியை யா னறியாமையாலே எண்ணிறந்த உயிர்களுக்கு எத்தனை பரியாயம் பிதாவும் மாதாவுமாயினனென்றும், அதுநிற்க; எனக்குத்தான் அவர்கள் எத்தனை பரியாயம் பிதாவும் மாதாவுமாயினரென்றும் அவற்றை இப்பொழுது விசாரியாநின்றேன்; **எ-று.**

என்றும் என்பதூஉம், யான் என்பதனாலே அவர் என்பதூஉம் வருவிக்க. * இடைநிலையில் இகரம் விகாரத்தாற் றொக்கது. (௬௯)

எண்ணுடை மாலையொ டூர்படை கொண்டிடத் தும்வலத்தும்
பெண்ணுடை யார்சிலர் பேதைகட் கீசர் பெருந்திசையா
நுண்ணுடை நாதர் நுவன்ற வருங்கல மாகியமுக்
கண்ணுடை யாரிந்தக் காசினி மேனமக் கீசர்களே.

**இ-ள்.** எண்ணத்தகுந்த மாலையோடு கொல்லத்தக்க ஆயுதங்களை யெடுத்து, இடப்புறமும் வலப்புறமும் முறையே மகளிரையுடைய சிலர் மூடராயினோர்க்குத் தெய்வங்களாவார்; எமக்குக் கடவுள் யாவரெனில்;—திசையாடையையுடையார் அருளிச்செய்த இரத்தினத்திரயமாகிய மூன்று கண்ணினையுடைய முனிவரே, வேறல்லர்: **எ-று.**

இதனால், தாம்வீழ்வார் பிறர்க்கு ஊற்றமாகாராதலால் அவர் தலைவரல்லரென்று பாஷண்டமூடம் விலக்கியதாம். †"நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக், கொல்லாமை சூழ்வான் றலை". ஈர்தல் - அறுத்தல். குற்றத்தைக் குணமாக்கியும், குணத்தைக் குற்றமாக்கியும் உலகை மருட்டுதலாலே மிச்சர் தெய்வங்களைப் "பேதையாக் கீசர்" என்றார். ‡"பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் - டூதியம் போக விடல்" என்பதனாற் காண்க. ஆகாயம் அருபமாதலாலே 'நுண்ணுடை' என்றார். அருங்கலம் - ரத்நத்ரயம். (௭௦)

---

* "தாயருமானர்" என்புழி 'இன்' என்னும் இறந்தகாலவிடைநிலையில் இகரம் என்க.

† திருக்குறள்-௩௨௫.

‡ திருக்குறள்-அ௩௧.

ஈசனென் றுனு மிறைவனென் றுனு மிலங்கொளிமுத்
தேசனென் றுனுமெய்த் தீர்த்தனென் றுனுஞ்சித் தித்திருவி
னேசனென் றுனுமென் னெஞ்ச ளிருந்திந்த நீணிலத்தோர்
பேசநின் றார்தமக் கேயுநின் றாரவர் பேர்களே.

இ-ள். ஈசன் முதலாகச் சித்தித்திருவினேச னீறாக எண்ணப்பட்ட தலைமையான திருநாமங்கள் உலகமூன்றுந் துதிக்கு மிறைவனாகிய அருகர்க்கே பொருந்தும், நின்ற தேவர்களெல்லாம் அந்தப் பெயர்மாத்திரமே உடையரா தலை; எ-று.

முத்தேசு-மூன்று ஒளி; அவை முன்னர்க்கூறினும். *எய்தல்-பொருந்தல். ()

போ ரிரத்திரு நான்குடை யானைப் பிறங்கியநற்
சீரா யிரத்திற் சிறந்துடை யானைநற் சித்திசெய்யுங்
காரா யிரத்தின மூன்றளிப் பானைக் கவிதைசெய்யா
தாரா யிரத்தி ரறியா தவரை யறிஞர்களே.

இ-ள். அறிவுடையீர்! திருநாமம் ஆயிரத்தெட்டுடையானை, உயர்ந்து நன்றாகிய புகழ் ஆயிரத்திலும் மிகவுடையவனை, மோக்ஷமென்கிற பயனைத்தர மேகம்போலே ரத்நத்ரயமாகிய விதையைப் பொழியப்பட்டவனை வணங்கி யிராவாதே, அந்த மோக்ஷத்தையறியாதவர்களை யாராகநினைத்து இரக்கின்றீர்; எ-று.

இதனால் மிடியாரை இரக்கின்றபேறு பயனில்லையென்பதாம். பிறங்குதல்-விளங்குதல். (எ௨)

அறியோ மருந்தமி ழாரியங் கேட்டில மாகமத்தும்
வறியோ மதுரக் கவிகளல் லோமனம் வேண்டியவைம்
பொறியோ டுழல்புன் புலமைமி னோமெம் புலமையெல்லா
மூறியோ டலர்பிண்டி யாரடி யாரென்னு முக்கியமே.

இதன்பொருள் வெளிப்படை. தென்கலை வடகலையறிந்து ஆகமமோதி மதுரகவிகளான பேரறிவினரே இறைவனை வாழ்த்தவேண்டும்; மோகாந்தகாரச் சிற்றறிவினர் வாழ்த்தற்கு அரியர் என்பதாம். ஆரியம் - வடகலை. வறுமை - சிறுமை. மூறி - தளிர். முக்கியம் - தலைமை. (எ௩)

---

* உ௬-ம் செய்யுளுரையிற் காண்க.

மூக்குற்ற நீக்கிய நின்குண மூன்புண ராமையில்யான்
புக்குற்ற தீக்கதி போயின வெத்தனை போகவற்று
எக்குற்ற மானதெல் லாமடி யேன்குற்ற மாட்புகுந்தே
னெக்குற்ற மெய்தினு மெம்பெரு மான தினிக்குற்றமே.

இ-ள். மூன்றுகுற்றங்களையு மொழித்த நினது அநந்த ஞானாதிகுணங்களை முற்காலத்தில் அறியாதிருந்தபடியால், நான் அடைந்த தீக்கதி எத்தனையோ கழிந்தன; அங்ஙனம் கழிந்த கதிகளிற் செய்த எல்லாக்குற்றங்களும் அடியேனதே; அருகபரமனது அடிமையாகப் புகுந்துவிட்டேன்; இனி யான் செய்யுங் குற்றங்கள் எத்துணைக்கொடுமையவாயினும் அவை எமது இறைவனதேயாம்: எ-று.

இதனால், இனிமேல் யான்செய்யும் பிழை பிழையல்ல; உண்டாயினும் அவற்றைப் பொறுத்துப் பாதுகாக்கவேண்டும் என்பதாம். (எ௪)

குற்றம்விட் டார்குத்தி மூன்றுடை யார்செத்தி யீர்ந்தடினுஞ்
செற்றம்விட் டார்திரு மேனியெல் லாம்பெரு மாசுவிம்ம
வற்றவிட் டார்வினை மாசுதிர்ப் பார்பிண்டி வாமனல்லாற்
சுற்றம்விட் டார்திசை சூழ்துகி லார்நந் தொழுதெய்வமே.

இ-ள். கொலைமுதலாகிய குற்றமெல்லாம் விட்டவர், மனமொழிகாய மூன்றும் அடங்கினவர், வாய்ச்சியாற செத்தி ஈர்வாளாலரிந்து கொன்றாலும் வினையை நோவதல்லது அத்தீமை செய்தார்மேல் உண்டாங் கோபம் விட்டவர், அஸ்நாநத்தாலே மெய்ம்மாசு மிகுத்தவர், அநசனவதத்தாலே மெய்யுலரவிட்டவர், பிண்டிவாமனே பற்றல்லது உட்பற்றுப் புறப்பற்றெல்லாம் விட்டவர், அதனாலே வினைமாசு தீர்க்கப்பட்டவர், திகம்பரராயுள்ளவரேயாம் தொழப்படுகின்ற தெய்வமாவார்; எ-று.

இதனால், குற்றமுடையவர், அடங்காதவர், கோபம்விடாதவர், காயம் பேணி அநசனவதமில்லாதவர், வாமன்மேற் பற்றுவிட்டு உட்பற்றுப் புறப்பற்றுடையவர், தோல் காவிச்சீலை முதலிய உடுப்பவர், வினைமாசுகழுவாதவர் பிறராதலின் அவரை யாம் வணங்கோமென்று பாஷண்டமூடம் விலக்கியதாம். குத்தி-அடக்கம். ஈர்தல்-அரிதல். அடல்-கொலை. விம்ம-கனக்க. வற்ற-உலா. செற்றம்-கோபம். (எ௫)

தெய்வதம் வேறென்று தேடுகின் றீர்வினைத் தெவ்விரண்டா
னைவதல் லாதுமுத் திக்குநண் ணீரிரு நால்வினைதீ
ரைவத நாத ரபதம் போதென் றெழுபதஞ் சேர்ந்
தாய்வதல் லாலுமக் குய்பு முபாயமற் றொன்றிலையே.

இ-ள். எண்வினையுங் கெடுத்து *ஐவகைவிரதங்களையுமுடைய ஆதீசுவரரது அடிகளல்லது உய்யுமுபாயம் வேறில்லை; அதனை அறியாதே வேறே தெய்வமுண்டென்று தேடுகின்ற உலகீர்! அந்தத்தேவரால் வினைப்பகைவராலே வருந்துவதல்லது வீடு காணமாட்டீர்; எ-று.

இதனால், குணமும் விரதமும் இல்லாரைப்பற்றில் வீடுபேறில்லை எனப் பயந்தீர்வித்ததாம். அறுபதம் போதென்றெழுபதம்—வண்டுகள் தாமரைப் பூவென்று மொய்க்க எழுகின்ற திருவடிகள். (எசு)

ஒன்றறி யீர்முழு துமுணர்ந் தீருணர் வொன்றுமில்லா
வன்றறி போல்பவர் வந்துமமைத் தாழ்ந்திடின் மற்றவர்க்கு
நன்றறி ஞானங் கொடுத்துண்மை காட்டுதிர் நாமுமிவ்வா
றென்றறி யாதவ ரெம்பெரு மானெக்க விச்சிப்பரே.

இ-ள். எம்பெருமானே! கேளீர்; அறிவொன்றுமிலாத வலிய தறியை ஒத்திருப்பவர்தாம் உம்மை வந்து வணங்கினால் அவர்க்கு நன்றாக அறியத்தக்க ஞானமெல்லாங் கொடுத்து உண்மைப்பொருளையும் அறிவிப்பீர்; யாமும் இப்படியிருக்கக்கடவோ மென்றறியாதே அவர்கள் உமக்கொப்பாக விரும்புவர்; ஆதலாலே எல்லாமறிந்தவரோ நீர், ஒன்றுமறியீராயிருந்தீர்; எ-று.

இதனால், பிறர் அன்பறிந்தாராய்ந்து கொடுப்பர்; நீர் ஒன்றுமறியீரெனப் பழிப்பதுபோலப் புகழ்தலாம். இதனுள் ஒன்றுமறியீரெனவும் உண்மைப் பொருளையுமெனவும் உம்மையும், எல்லாமுணர்ந்தவரோ என ஓகாரமும் விரிக்க. வன்றறி-வலிய தம்பம். (எஎ)

இச்சின னேபுவ னத்திரு நாயக னென்றெவர்க்கு
நிச்சய மாக வுணர்த்துதற் காக நிலாவிரித்து
முச்சக மூற்று நிழல்செய முப்புவ னேந்திராந்
தச்சர் சமைத்துடன் வைத்தனர் நாதன்முச் சத்திரமே.

இ-ள். இந்த ஜிநேசுவரனே மூவுலகுக்குங் கர்த்தாவென்று யாவர்க்கும் உண்மையாக உன்னையறிவித்தற்காகவோ ஒளியினைப்பரப்பி உலகமூன்று நிறைய நிழல்செய்ய மூவுலகுக்கும் வேந்தராகிய தச்சர் மூன்றுகுடையும் ஒக்கப் பண்ணிவைத்தனர்; நாதனே! சொல்லாய்; எ-று.

---

* "கொலைமுதலா வைந்தனையு முற்றத் துறத்தல்—தலையாய மாவத மாம்" என்பது அருங்கலச்செப்பு-அஎ.

இதனால், இவர் இழிந்தவராயின் உயர்ந்தோர் பரியாளமாவரோ என்ப தாம்: "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை-பொறுத்தானோ டூர்ந்தா னிடை"* என்பவாகலின். அறியாதவர்க்கும் ஆகவே என்பதுபட ஓகாரமும், சொல்லா யென்பதும் வருவிக்க. நாதன்-அண்ணல்வினி. சமைத்தல்-பண்ணல். சத்திரம்-குடை. (எஅ)

சத்திய மேயொன்று சாற்றுகின் றேன்சம யங்களெல்லாங்
கத்தியஞ் ஞானங் கவல்கின்ற தேகடைச் சாரமெய்ந்
முத்தியு மேக முதல்வனு மேக முதல்வனுமுற்
பத்தியு நாசமு மொன்றுமில் லாத பரஞ்சுடரே.

இ-ள். உலகத்தீர்! உண்மையாக ஒருவார்த்தை சொல்லுகின்றேன்; எல்லாச்சமயங்களும் ஒருவரையொருவர் மாறுபட்டு அஞ்ஞானங்களைக் கதறிக் கவலைப்படுதலையே உடையன; முடிந்தவிடத்திற் பெறுகின்ற மோக்ஷமும் ஒன்று; ஈசுவரனும் ஒருவன்; அந்த ஈசுவரன்றானும் ஒருகாலத்திலே தோற்றுத லும் ஒருகாலத்திலே கெடுதலுமாமிவையில்லாத மேலாயிருப்பதோர் ஒளியாம்: எ-று.

இதனால், தோற்றமுங் கேடுமுண்டாமவர் தலைவரல்லர் என்பதாம். கவல்-கவலை. உற்பத்தி-தோற்றம். பரம்-மேல். (எகூ)

சுடர்மண் டலஞ்சுரா துந்துபி தெய்வத் துவனிசிங்கப்
பிடர்மண் டலவணை பிண்டிவெண் சாமரை பெய்மலரி
னடர்மண் டலமழை யம்பொற் குடைமூம்மை யாமடியோ
மிடர்மண் டலங்கெடுப் பார்க்கிமை யோர்செயு மெண்சிறப்பே.

இ-ள். ப்ரபாவலயம், தேவவாத்யம், திவ்யத்தொனி, வட்ட அணை பொருந்திய விம்ஹாஸனம், அசோகவ்ருக்ஷம், வெள்ளிய சாமரை, நெருங்கப் பொழிகின்ற பூமழை, அழகிய பொற்குடைகள் மூன்றும் ஆம்; அடியேங்களைச் சூழ்ந்துகிடக்கின்ற துன்பத்தைப் போக்குமவர்க்கே தேவர்களாற் செய்யப்படு கின்ற எட்டுச்சிறப்புக்களும்; எ-று.

இதனாலும், இந்தச் சிறப்பு பிறர்க்கில்லையாதலால், இவரே தலைவர் என்ப தாம். மண்டலம்-வட்டம். இடர்மண்டலம் என்பதனுள், மண்டலம்-சூழ்தல். அடர்மண்டலம்-நெருங்கிய கூட்டம். கெடுப்பார்க்கே எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க. (அ0)

---

* திருக்குறள்-௩எ.

சிறப்பின்றிவ் வாழ்வென்று தேவேந் திரர்தொழுந் தீர்த்தநின்சீர்
மறப்பின்றி யேயென்றும் வாழ்த்தப்பெற் றன்மனை யானவற்றுக்
கறப்பின்றி யாயிழை யாரின்றி யேசென் றடைபவர்க்கோ
ரிறப்பின்றி யேவெளி யாய்நின்ற வீடெமக் கென்செய்கவே.

**இ-ள்.** இந்த வாழ்வு அதிகமில்லையென்று தேவேந்திரர் தொழுகின்ற தீர்த்தனே! நினது புகழை இடைவிடாதே நாடோறுந் துதிசெய்யப்பெற்றால் அதுவே போதும்; மனையானவற்றுக்கு அதிதூரமாய் மகளிருமின்றிச் சென்று சேருமவர்க்கோர் இறப்புமின்றியே வெளியாயிருக்கின்ற வீடுபேறு எமக்கு யாதுக்குத்தான்; **எ-று.**

இதனால், இடைவிடில் வினைக்கிடமாம்; இடைவிடாது நினைப்பார்க்கே வீடுபேறு என்பதாம். இதனுள், அயன்மனைசேர்ந்து மகளிரும் இறப்பும் மறைவு மூண்டான வீடு, பிறர்க்குண்டென்று குறிப்பால் விளக்கியதூஉமாம்; இதனால் அது வேண்டாமென்றார். அதுவே போதும் என்பது சொல்லெச்சம். சிறப்பு-அதிகம். சீர்-புகழ். அறப்பின்றி-அதிகதூரமாய். (அக)

என்செய லாம்வினை காளுமக் கெங்களை யாம்பிறர்போ
லின்செய வாயவர் கேள்வரைத் தேவரென் றீண்டறமாக்
கொன்செய வேண்டுங் குபதரல் லோங்குடை மூன்றுடையார்
தன்செய பாதங்கள் கண்டுகொள் வீரெந் தலைமிசையே.

**இ-ள்.** வினைகாள்! உம்மால் எங்களை என் செய்யலாம்; நாம் பரசமயி களைப்போல மகளிர் கேள்வரைத் தேவரென்று அவர் சொல்வதே அறமாகப் பயனில்லாதன செய்கின்றவரல்லோம்; மூன்று குடைகளையுடையவர் திருவடி களை எமது தலைமேலே பார்த்துக்கொள்வீர்; **எ-று.**

இதனால், வினைபற்றுவது பற்றுள்ளாரையாதலின், பற்றற்றவனைப் பற்றில் வினைபற்றாவாதலாலே அவை குறுகா என்பதாம். இன்செய்ய வாய்-இனிமையும் சிவப்புமுடைய வாய். கொன்-பயனில்லாமை. தம்சாரியை வரவேண்டு மிடத்து எதுகைபற்றித் தன்சாரியை வந்தது. செய பாதங்கள்-பாவத்தைப் போக்கவல்ல திருவடிகள். (அஉ)

மிசையார் தசையிருண் மேவார் கறைமது விண்பெறினு
மிசையார் கொலைபொய் களவறி யாரிளந் தோகையர்மாட்
டசையார் பொருள்வரைந் தைவரைப் பேறுவ ரைம்புலன்மே
னசையா றியபிண்டி யாரடி யாரெங்க ளையகரே.

இ-ள். இருளுண்ணார், தசையுங் கள்ளுந் தேனும் விரும்பார், துறக்கம் பெறினும் அதுபொருட்டாகப் பொய்சொல்லார், கொலையுங் களவும் அறியார், மகளிர்மோகத்தாலே மனமசையார், *பஞ்சபரமேட்டிகளை வணங்குவார்; ஐம்புலன்மேல் விருப்பம்நீங்கிய பிண்டிவேந்தரடியாராகிய எங்கள் நாயகர் எ-று.

இதனால், இந்த அறம் பத்தும் பிறர் பேணார் என்பதாம். மிசைதல்—புசித்தல். நறை—கள். இசையார்—உடன்படார். அசைவு—தளர்வு. 'ஐயரைப் பேணுவர்' என்றும் பாடம். (அ௩)

நாயகந் தேவர்த †நன்முதற் றேவரை நாண்மலர்வான்
மீயகந் தேவர மேற்கொள்ளுந் தேவரை மெய்யடியார்
வாயகத் தேவரும் வண்புகழ்த் தேவரை மாற்றிநெஞ்சே
நீயகந் தேவரை யித்தனை நாளு நினைத்ததையே.

இ-ள். இந்திரர்மூவர்க்கும் முதலாய தேவரை, தாமரைப்பூ ஆகாயத்தின் மேலேவர அதன்மேல் எழுந்தருளுகின்ற தேவரை, அன்பர்நாவிலே தோற்றுகின்ற புகழையுடைய தேவரைக் கைவிட்டு, நெஞ்சமே! இத்தனைநாளும் யாவரைநினைத்தாய் சொல்லாய் எ-று.

இதனால், மெய்யறிந்தானொருவன் நெஞ்சோடு உசாவியதாம். மீ-மேல். வாய்-ஆகுபெயராலே நாவாயிற்று. நீ அகத்து எவரை-நீ உள்ளே யாவரை. ()

நினைத்தனை யாயினும் வாழ்த்தினை யாயினு நீயுநெஞ்சே
தினைத்துணை நல்லறஞ் செய்தனை யாயினுஞ் சேர்ந்தவரைப்
பினைத்தனை வந்தனை செய்யவொட் டாப்பிண்டி யாற்கரிதோ
வுனைத்தனை யேயொக்க வித்தனை நாளி லுயர்த்துகையே.

இ-ள். நெஞ்சே! பிறரை வணங்காமல் அருகத்தேவனையே தினையளவு நினைத்தனையாயினும், வாழ்த்தினையாயினும், நல்லதருமத்தைச் செய்தனையாயினும் அது சாலும்; உலகிற் பகை, நொதுமல், நண்பு என்னுதே தன்னைச் சேர்ந்தவர் யாவரையும் பின்னைத் தன்னையும் வணங்கவொட்டாத பிண்டியானுக்குத் தன்னையொக்கச் சிறிதுநாளில் உயர்த்துகை அரிதன்று எ-று.

---

* பஞ்சபரமேட்டிகள் இன்னார் என்பது, சகூ-ஆம் செய்யுளானுணர்க.

† நம்முதற் றேவரை என்றும் பிரதிபேதம் உண்டு.

இதனால், 'பாவி! சிறிதும் அறஞ்செய்கின்றிலே' என நெஞ்சைக் கழறிய தாம். அதுவே சாலும் என ஒருசொல் வருவிக்க. சேர்ந்தவர் யாவரையும் என்பதனாலே பகை, நொதுமல், நண்பு வருவித்தாம். இத்தனை என்றது குறிப் பாற் சிறிதுநாள். (அரு)

கைத்துக் கடிதடுங் காஞ்சிரந் தின்பவன் றீங்கனியைத்
துய்த்துச் சுவைகண்ட பின்விடு மோசுர ராய்நரரோ
டொத்துத் திரிபவர்க் கன்புசெய் வாரும துண்மைகண்டால்
வைத்துப் பிரிவர்க ளோபிண்டி நீழலெம் மாமணியே.

இ-ள். பிண்டிநீழலிலிருக்கும் பெரிய மணியொப்பீர்! கசந்து விரைவிற் கொல்லும் எட்டிக்காயைத் தின்று உடனே துன்பமுறுமவன் நோய்நீக்கு மருந்தாகிய நெல்லிக்கனியைத் தின்று இன்பங்கண்டபின் அதனை விடப் பொருந்துவனோ? அதுபோலே, தாமும் தேவராய்வைத்து மக்களின்பந்துய்த் துத் தெய்வத்தன்மைகெடுமவர்க்குப் பத்திசெய்யப்பட்டவர் உள்ளபடியறிந்தாற் பின்னை உம்மைவிட்டுப் பிரிவரோ? எ-று.

இதனால் உம்மையறிந்தவர் பிரியாரென்பதாம். இதனுட் காஞ்சிரம் ஆகு பெயராலே எட்டிக்காயாயிற்று. இன்பமென்றதனாலே துன்பம் வருவித்தாம். கரும்புதுய்த்து என்று பாடமோதுவர்; அதற்கு வேம்பே முரண் ஆதலாலே அது பாடமல்லாமை அறிக. 'இனிய வுளவாக வின்னாத கூறல் - கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'* என்பதனாலும் அறிக. இதனுட் சுவை - இன்பம். திரிதல் - கெடுதல், சுழலுதலுமாம். அன்பு - பத்தி. (அசு)

மணியா பரணமு மாசில்வெண் டுகிலும் பார்மலரு
மணியா தழகிய வண்ணல்கண் டீர்பெண்ணி னாசைவிடாப்
பிணியார் முடையுடற் பேயனை யீர்பிறழ் பூங்கரும்பின்
றிணியார் வரிசிலைத் தேங்கணைக் காமனைச் செற்றவரே.

இ-ள். வடிவுள்ள பேயை ஒப்பீர்! பெண்ணின் ஆசைவிடாதவர் காமனை வென்றவரோ? அன்றன்று; தோற்றவரே: காமமெனும் பெண்ணின் ஆசை விட்டு ஆபரண முதலிய அணியா அழகர் கண்டீரோ? எ-று.

இதனால் நீர் சொல்வது அழிவழக்கென்பதாம். வடிவுள்ள பேயென்பது தோன்ற முடையுடற்பேய் என்றார். 'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்—தலகையா வைக்கப் படும்'† என்றாராதலின். இதனுள் செற்றவரே

---

* திருக்குறள் ௧௦௦.

† ஷை. அ௫ ०.

என்பது வினாவேகாரம். வம்பு-புதுமை. மூடை-நாற்றம். பிறழ்தல்-விளக்கம். வரிசிலை-அழகிய சிலை. தேங்கணை-தேனையுடைய பூவாளி. (அஎ)

செற்றது காதிக டீர்ப்பத காதிக டிக்கறியப்
பெற்றது கேவலம் பேசுதல் கேவலம் பெண்முதலாய்ப்
பற்றறு தீர்த்தவெம் பாவனை தீர்த்தவெம் பாவமற்று
லற்றதுன் மேற்றுதி யாரையு மேற்றுதி யாட்படினே.

இ-ள். எம் பாவனைக்கியைந்து பெண்முதலாகிய பற்றுக்களையெல்லாம் தீர்த்த தீர்த்தனே! உலகமறிய நீ கெடுத்தது யாதென்னிற் *காதிகன்மங்கள்; இனிமேற் கெடுப்பது யாதென்னில் அகாதிகன்மங்கள்; நீ பெற்றது யாதென்னிற் கேவலஞானம்; நீ அருளிச்செய்யப்பட்டது யாதென்னில் ஞானம்; இப் பெற்றிப்பட்ட உன்னை எம்போல்பவரும் பாவமறுத்தால் அவரும் நின்னைத் துதிப்பது தவிராநின்றது; நினக்கு அடிமைபுகின் யாவரையும் நின்னுடனே உயரப்பண்ணுவை **எ-று.**

இதனால், ஈசனாகிய பெரியோன் பிரமனுக்கு ஐந்துமுகமாதல் கண்டு பொறாமல், அவன் திலோத்தமைபொருட்டாகத்தோற்றிய மேலாகிய தலையைக் கிள்ளினான் என்பர்; நீ அறியாமையால் யாரையும் உயரப்பண்ணுவை யென்பதுபோலப் புகழ்தலாம். இதனுள் திக்கு—உலகம்; இதனை யெங்குந் தீவ மாக்குக. தீர்த்தல்—ஒழிதல். பாவனை—தியானம். யாரையுமேற்றுதி—யாரையுஞ் சமமாக உயரப்பண்ணுவை. (அஅ)

படினும் படார்தவம் பாத்துண் பதுமிலர் பார்த்திபரீர்ந்
தடினு மடாதன செய்கைபுஞ் சாரடி யார்தமன்பு
கெடினுங் கெடாவருட் கேவலி போலபற் றேவர்நல்கார்
விடினும் விடார்கண் †மித் தாக்கள்கர்த் தாக்கள்கொல் வெவ்வினைக்கே.

இ-ள். மிச்சத்தர் தவம்பண்ணுவாரைப்போலே வினைக்கே வேடங் கொள்ளினும் நல்ல தவத்துறை புகுதார்; நற்றானம்பண்ணார்; அறத்திற்காகா வென்று விலக்கிய கொலை, பொய், களவு, காமம், அவாமுதலிய தீமைசெய் தால் அக்குற்றத்திற்கு அரசராமவர் தமதுடலை அரிந்துகொன்றாலும் அத்தீமை

---

*ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் எனப்பட்ட அஷ்டவித கர்மங்கள்.

† "மிச்சத்தர்கள் கர்த்தர்கள் வெவ்வினைக்கே" எனவும் பாடபேதம் உண்டு.

செய்தற்கோ அஞ்சார்; அடியார் தம்மேல் அன்பு கெட்டாலும் கெடாத அருளை யுடைய சேவலஞானியைப்போலே, ஒழிந்த தேவர் பயன்படாவிடினும் அவரைக் கைவிடமாட்டார்; அதனால் அவர் பாபவினைக்குத் தலைவர்போலே இருந்தது எ-று.

இதனால், அவர் பாவவினை நீங்கவேண்டில் அத்தீமை செய்வரோ என்ப தாம். வேம்பு பழுத்தாற் காக்கைக்கிரையாம்; அதுபோலே மதுமாங்கிசங்களை நுகர்பவர்க்கல்லது ஸத்பாத்திரதானம் இலராதலிற் பாத்துண்பதுமில்லையென் றார். பார்த்திபரீர்ந்தடினும் என்பதனாலே அவர் குற்றங்கண்டே தண்டிக்க வேண்டலிற் கொலைமுதலிய வருவித்தார். அவர் நூல் கொலைப்பாவம் விலக்கா வாதலிற் சேட்டைப்பண்ணுவதுகுறித்துப் பயன்படாவிடினும் என்றார். பாத்தல் - பகுத்தல். பார்த்திபர் - அரசர். நல்கல் - பயன்படல். (அகூ)

வினைவரு மாறு மனைவெவெல்லு மாறுமித் தாச்சமயத்
தனைவரு மாறு கொளநிற்கு மாறு முலகமெல்லா
நினைவரு மாறு பொருணிற்கு மாறு நிறைந்தநன் னூற்
புனைவரு மாறு புகுகடல் போலுமெம் பூரணனே.

இ-ள். நல்வினை தீவினை வரும்வழியும் அவற்றைப் போக்கும்வழியும் பரசமயத்துவெல்லாரும் மாறுபடநிற்கும்வழியும் உலோகம் அலோகமெலாம் நினைத்தற்கரிய *சீவாதி முதலாகிய வாறுபொருளுள்ளவழியும் ஆகிய இவற் றாலே நிறைந்த நன்றாய பரமாகமமாகிய நூலைமேற்கொண்டு வருவது ஓராறு புகும் ஒருகடலையொக்குமவன் ஆதலாலே பூரணனென்னும் நாமமாயிற்று எ-று.

இதனால், இவனே நிறைந்தவன் என்பதனாலே பற்றுள்ளோர் குறைந்தோ ரென்பதாம். (கூ0)

பூரணை யாற்பதி னாற்கயிற் றேக்கப் புவனமெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்தசிங்கப்
போரணை யார்க்கிணை யாருமில் லாப்பெரி யோர்க்குவிண்ணோர்
பாரணை யாவடி தாங்கச்செந் தாமரை பாரித்ததே.

இ-ள். ஒப்பு ஒருவரு மில்லாமையாலே சிங்காசனத்திருந்த பெரியோர்க்கு நிலந்தோயாத்திருவடிகளைத் தாங்குதற்குத் தேவர்கள் பொற்றாமரைப்பூவைப்

---

* சீவம், புற்கலம், தருமம், அதருமம், ஆகாசம், காலம் என்பன. இவற்றை ஷட்திரவியம் என்ப.

பண்ணினது என்போலுமென்னிற், பதினாலுகயிற்றின் உயரத்தையுடைய உலகமெல்லாம் முறையிலே கிட்டிக் காற்றான் அவை தரித்தது ஒக்கும் எ-று.

இதனால் வெறுமையில்லை யென்பதாம். இதனுள் பூரணை - நிறைவு. நிவப்பு—உயர்வு. பாரணையா—*நிலந்தோயா. பாரித்தல்-பண்ணல்; பரப்புதலுமாம். நீரணை-குணம் அணைந்த; குணம்-குளிர்ச்சி, மணம். (கக)

பாரிடை யீரிரு நூற்றைம்பத் தெட்டுப்பத் தாம்பவணத்
தோரெழு கோடியெண் ணொன்பா னிலக்க முயர்ந்தகற்பத்
தோசியல் யோனிதொள் ளேழா யிரச்சின்ன மெண்ணவொண்ணா
சீரிய வந்தரர் சோதிடத் தீசர்நற் சேதியமே.

இ-ள். ஜினேந்திரரது இயற்கை செயற்கைச் சினாலயம் பூமியிடத்திலே நானூற்றைம்பத்தெட்டு, பத்தடுக்காயிருக்கின்ற பவணலோகத்திலே எழுகோடியே யெழுபத்திரண்டிநூறாயிரம்; உயர்ந்த தேவலோகத்தில் எண்பத்து நான்குநூறாயிரத்துத் தொண்ணூற்றேழாயிரத் திருபத்துமூன்று; இப்பால் வியந்தரலோகம் சோதிடலோகம் இரண்டினும் எண்ணமுடியா ‡ எ-று.

இதனால் மூவுலகத்தினும் கோவற்றலிங்கம் இல்லையாதலால் இவனே தலைவன் என்பதாம். இதனுள் யோனி-எண்பத்துநான்குநூறாயிரம்; குறிப்புமொழி. வந்தார்-வியந்தரர். சின்னம் என்பது இருபத்துமூன்று என்னுங் குறைந்த எண்ணைக்காட்ட வந்தது. (கஉ)

சேதிய முப்புவ னத்திரு கூற்ற மூர் திர்த்தருள்ளிட்
டேதில் குணத்தர் வணக்கமொ ரைந்து மியற்பெயரோ
டாதி யெழுத்து மருகனு மவ்வுமொன் றாதியைந்தீ
றோதி நினைப்பன் வினைத்துக ளோடி யொளித்திடவே.

இ-ள். இயற்கை செற்கையாய் இருகூறுபட்டு முன்னிற்கவியிற்கூறிய ஆலயந்தோறும் இருக்கப்பட்ட அருகத்தேவருள்ளிட்ட ஒப்பற்ற குணங்களையுடையவர் நமஸ்காரம் ஓரைந்தும் இயல்பாகிய பெயருள் அருக என்னுந் திருநாமமும் மகாமுதலாகிய இவையிற்றை ஒன்றுமுதலாக ஐந்திறுதியாகச் சொல்லி

* "கானிலந் தோயாக் கடவுளை" என்பது நாலடி, கடவுள்வாழ்த்து.

‡ இவ்வுலகியல்பெல்லாம் **லோகாணி** என்னும் நூலுட் காண்க,

நினைப்பன்:* யாதோகாரணமென்னில் எனது வினையாகிய குற்றம் விரைய ஒளித்தல் காரணம் எ-று.

இதனால் நிலையில்லாதசெல்வம் வேண்டியல்ல என்பதாம். இதனுள், சேதியம்-கோயில். மூப்புவனம் - மூவுலகு. தீர்த்தர்-அருகர். (௬௩)

ஒளிவந்த நீழ லுயர்பிண்டி வேந்த னொருத்தனுமே
விளிவந்து வேண்டும் விபூதிக ணல்குமெய்ப் பொய்யைநம்பிக்
களிவந் தவாவொடு கைவந்த வாசெய்யுங் கையர்பின்போ
யிளிவந்து வாழ வருமந்த வாருயிர்க் கென்வந்ததே.

இ-ள். பிண்டிவேந்தன் ஒருத்தனுமே முன்னின்று தான் விரும்பிய செல்வத்தைத் தருவன்; அவனதுநூலைப் பின்செல்லாதே உடம்பாகிய பொய்யை நம்பிச் செருக்கி அவாவுடனே தாம்வேண்டியவற்றைச்செய்கின்ற திருடர் பின்னேபோய் இளிவரவுபொருந்திய வாழ்வுபெறுதலாற் பெறுதற்கரிய உயிர்க்கு வந்த பயன் யாது? எ-று.

இதனால் பொய்ப்பொருளைப் போற்றுமுலகம் விடுமது பற்றுமது அறியா என்பதாம். இதனுள் வேறில்லை யென்பது தோன்ற ஒருத்தனுமென்றும், அன்பராமவர் பரியானமாகி யேவல்கேட்பரென் றவர் கூறலின் இளிவந்துவாழ என்றும் கூறினர். (௬௪)

வந்தன வெண்ணரை போயிற்று வாய்மக்கள் யாக்கைபெற்று
நந்தன மாவொன்று நாடிற்றி லம்பிண்டி நாதனைச்சேர்ந்
துய்ந்தன மின்றுபண் டோதனந் தின்றின்சொ லார்தனஞ்சேர்ந்
திந்தன மாகநற் சந்தன வேர்பெற் றெரித்தனமே.

இ-ள். வெள்ளிய நரைபொருந்திய மூப்புவந்து இளமை கழிந்தது; பெறுதற்கரிய மக்கள்யாக்கையைப் பெற்றுவைத்தும் நமக்கு ஒரு பொருளாக ஒன்றைத் தேடிற்றிலேம்; பிண்டிநீழலின்கீழேயிருக்கிற அருகத்தேவனைச் சேர்ந்து இன்று பிழைத்தோம்; சோற்றைத்தின்று அழகிய சொல்லையுடைய மகளிருடைய தனத்தைச் சேர்ந்து நன்றாகிய சந்தனவேரைப்பெற்று விறகாக எரித்துவிட்டேம் எ-று.

---

* "அருகர், அசரீரி, ஆசிரியர் ஆகிய இவ்வியற்கைப்பெயர்களிலே முதலெழுத்துக்களும் உபாத்தியாயரின் முதலெழுத்தாகிய உகாரமும் முனிவர்களின் முதலெழுத்தாகிய மகரவொற்றும் எனப்படுகின்ற இவைகளை ஒன்றுமுதலாய் ஐந்து இறுதியாகச் சொல்வதனால் உண்டாகிய ஓங்காரத்தை முச்சந்தியிலுந் துதித்துத் தியானிப்பேன்" என வுரைப்பர்.

விருப்பத்தை மிகுவிக்கின்ற நெய்யோடுகூடிய சோற்றினை ஓதனம் என்றார். (சுரு)

எரிதின்று போத விழுப்புண்டு போதலின் ஞயொடுபன்
னரிதின்று போதலல் லான்மெய்நில் லாநமன் றூதர்வந்தா
லரிதின்று போமத லென்னவொண் ணாதத னுக்குமுன்னே
கரிதின்றி டாவரி யேந்தணை யாவறங் கைக்கொண்மினே.

இ-ள். நெருப்புத் தின்றுபோதல் திரண்டவுடனே பல நரிகளுமாக ஒக்க இழுப்புண்டுபோய்த் தின்றுபோதலல்லது யாக்கை நிலைபெறாது; எத்தாலும் கூற்றுவனுடைய தூதர்கள் வந்தகாலத்து இன்று வாத்தகாதென்று சொல்லவொண்ணாது; அந்தக் கூற்றுவனுடைய தூதவர்கள் வருவதற்கு முன்பே யானையைத் தின்றிடாத சிங்கம் ஏந்தப்பட்ட அணையையுடைய அருகத்தேவனுடைய ஸ்ரீதர்மத்தைக் கைக்கொள்ளுவீர்களாக எ-று. (சுசு)

கொண்மூ வொருபரு வம்பொழிந் தாங்கிரு கொட்பினுட்பா
ருண்மூ விருவகைக் காலத் திடையுல குய்யக்கொள்ளு
மெண்மூ வருமல்ல *தீசால் லாமைநல் லீசரென்று
திண்மூ டர்கடொழுந் தேவர்மெய் காட்டித் தெளிவிப்பரே.

இ-ள். மேகம் ஒருகாலத்தைக்குறித்துப் பெய்தாற்போல †வளர்காலம் இழிவுகாலமாகிய இரண்டு சுழற்சியையுடைய பூமியிடத்து மூவிரண்டாறு காலத்துக்கு நடுவே உலகத்தைப் பாதுகாக்கிற இருபத்துநாலு தீர்த்தங்காருமல்லது இறைவரல்லாமையை நன்றாகிய இறைவரென்று சொல்லித் திண்ணிய மூடராயிருப்பார் வணங்குகிற இறைவர் தம்முடைய மேனியைக்காட்டி அறிவித்துவிடுவர் எ-று. (சுஎ)

தெளிக்குந் திருமொழித் திக்குடைத் தொல்சக மூக்குடைக்கீ
ழளிக்குந் திருவரு ளாழியெம் மானடி யைம்புலநீர்க்
குளிக்குந் திரிவிதக் குற்றத்தூ மும்மதத் தெம்மனமாங்
களிக்குஞ் சரமணைக் கும்பணைத் தாளிணைக் கந்துகளே.

இ-ள். தெளிவிக்கிற திருவாக்கினையும், திக்காகிய ஆடையினையும், பழையவுலகத்தை மூன்று குடையின்கீழே பாதுகாக்கிற தருமசக்கரத்தையுமுடைய அருகத்தேவருடைய ஸ்ரீபாதங்கள், ஐந்துவிஷயங்களாகிய நீரிலே

*தீசால்லாரை எனவும் பாடம்.

†உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணியாகிய சுழற்சி எனவும் உரைப்பர்.

அழுகுகிற காமம் வெகுளி மயக்கமென்கிற குற்றமாகிய மூன்றுமதத்தையுடைய என்னுடைய மனமாகிய களிப்பையுடைய யானையை அணைக்கின்ற பெரிய தாளினையுடைய இரண்டு தம்பங்களாம் எ-று. (௯௮)

கந்தா தியனை கசிந்தநெஞ் சாகக் கடிநறும்பூஞ்
*செந்தா தியைபிண்டி யார்திருப் பாதத்துச் சேர்த்துமின்சொ
லந்தா தியையணி மாமல ராக வணிந்தடியேன்
முந்தாதி வல்வினை வெல்வனெல் லாரினு முந்துறவே.

இ-ள். கந்தமுதலாயினவை என்னுடைய கசிவுற்ற மனமாக, மணமிக்க பூவினது சிவந்த தாது பொருந்தப்பட்ட பிண்டிமூலின்கீழே இருக்கும் அருகத்தேவனுடைய அழகிய சீபாதத்திலே சேர்த்துச் சொல்லப்படுகிற இனிய சொல்லையுடைய அந்தாதியைப் பூவாக அணிந்து அடியேனாகிய யான் முற்பட்ட பழையவினையைக் கெடுப்பன் எல்லாரினும் முற்பட எ-று.

முந்து என்பதும் ஆதி என்பதும் ஒருபொருட்கிளவி. (௯௯)

முந்திய பேரன்பின் மூவுல கேத்த முனீந்திரரோ
டெந்தை பிரானங் கெழுந்தரு ளும்பொழு தேறவங்கோர்
தந்தி பொருதென்றும் வாசி பொருதென் றுந் தாழ்வுடையேன்
புந்தி பொருதென்றுந் தேவர்பொற் றாமரைப் பூக்கொண்டதே.

இ-ள். முற்பட்ட பெரிய அன்பினையுடைய மூன்றுலகத்துள்ளவர்களும் புகழ்செய்ய முனிகளும் இந்திரர்களுமாகிய தேவர்களுடன் கூட எம்முடைய சுவாமி அவ்விடத்துத் திருவுலாச்செய்யும்பொழுது ஏறுதற்கு அங்கொரு யானைபெறுமலல்ல; குற்றமுடையேனுடைய புந்தி பொருதபடியினாலேயன்றே தேவர்களாலே நிர்மிக்கப்பட்ட பொற்றாமரைப்பூவின்மேலே எழுந்தருளினது எ-று. (௧00)

பூக்கொண்டு நாளும் புனிதனை றிருவறம் போற்றிநின்று
நாக்கொண்ட செஞ்சொ லவிரோதி நாத னவின்றமெய்ந்நூற்
பாக்கொண்டு நாளும் பணிந்து நினைந்தும் படிக்கவல்லார்
தீக்கொண்ட வல்வினை சோரார் சிவகதி சேர்குவரே.

சிந்தா குலமில்லைத் தீவினை போஞ்செய்ய தாமரையாய்
வந்தா தரிக்கு மடநெஞ்ச மேமற வாதிருக்கக்
கொந்தா ரலங்கற் குடையொரு மூன்றுடை யான்குணத்தை
யந்தாதி யாக வவிரோதி யோதிய வாகமமே.

திருநூற்றந்தாதி மூலமும் உரையும் முற்றின.

---

* "செந்தாதியல்" எனவும் பாடம்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 31 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.